உ

ஓம்சிவய நமஹா

# பரிதியப்பார் ஸ்தலப்புராணம்

இஃது

,முத்தம்பாள்புரம்

மகா-௱-ஸ்ரீ மகாவித்துவான்

நாராயணசாமி உபாத்தியாயரவர்களால்

செய்யப்பட்டது.

தஞ்சைமகாசங்கிரம் மகாவித்துவான்

ஸ்ரீ௸ஸ்ரீ மதுரைமுத்துபாத்தியாயர்

அவர்களால்

பரிசோதனைசெய்யப்பட்டு

ஷை பரிதியப்பார்கோவில் பஞ்சாயத்தார்களுடைய

பொருளுதவியால்

தஞ்சை "திவாகர முத்திராட்சரசாலையில்"

அச்சிடப்பட்டது.

சர்வசித்துவருஷம்

சித்திரைமீ

உ

ஓம் மகாகணபதே நமஹா.

ஸ்ரீ பாஸ்கரேஸ்வர சுவாமின் நமஹா

இங்ஙனம் முத்தம்பாபுரத்திலிருக்கும் இப்புராணமியற்றிய மகா-ா-ா-ஸ்ரீ நாராயணசாமியுபாத்தியாயரவர்கள் சிரேஷ்டபுத்திரராகிய மகா-ா-ா-ஸ்ரீ மகா வித்துவான்

## வீராச்சாமிநாயக்கரவர்களாலியற்றிய

# முகவுரை.

பூவுலகிற் சிறந்த நீர்வளம் நிலவளம்பொருந்திய சோழதேசத்தில் பூமாதேவிக்குத் திருமங்கிலியம்போலும் திலதம்போலும் சர்வமங்களகரமும் பொருந்திய தஞ்சைமாநகரத்திற்குத்தெற்கு காததூரத்தில் அஸ்வதாரணியத்து வேங்கைநாட்டிலிருக்கின்ற மகாக்ஷேத்திரமாகியபரிதிநேமத்தின்றென்பால் மூன்றுநாழிகைவழியிலுள்ள முத்தம்பாபுரஞ்சத்திரத்தில் தமிழ்க்கல்விச்சாலைத்தலைவரும்மகாவித்துவானுமாகியஎனதுதந்தை நாராயணசாமியுபாத்தியாயர் அவர்கள் ரக்த்தாக்ஷி௵ மாசிமாதம் மகஸ்நானத்திற்கு ௸ பரிதீஸ்வரருடைய ஸ்தலத்திற்கு வந்து சூரியபுட்கரிணியில் ஸ்நானஞ்செய்து நித்திய நேமங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ பரிதீஸ்வரனையும் மங்களநாயகி யம்மையையும் சிவசுப்பிரமணியக்கடவுளையும் மற்றுமுள்ள ஆவரண தெய்வங்களையும் உள்ளமுருகி முறைப்படி வணங்கியன்றிரவில் தென்புறவாயிலிலுள்ள முகப்பிற் படுத்துச் சிவபெருமான் சிந்தனையோடுறங்கினர். அக்காலையில் அவர்சொற்பனத்தில்சுவாமிஓர்வேதியர்போல் வந்து இத்தலப்புராணத்தை நீ செய்யக்கடவையென்று கூறி மறைந்தனர். உடனேயவர் விழித்து இஃது பரிதீஸ்வரர் கட்டளையேயென்று மிக மகிழ்ச்சியோடுட்கொண்டு உதயமாயினபின் நித்தியநேமத்தை முடித்துக்கொண்டு ஸ்ரீ பரிதீஸ்வரர் சந்நிதியில் வந்துநின்று மிகுந்த ஆராமையோடு தோத்திரம்பண்ணி எம்பெருமானிட்ட கட்டளைப்படி இவ்வேழை யறிவிலேனால் பூரணமாய் முடித்தற்கேலுமோ உம்முடைய திருவருட்பாரமேயென்று உள்ளபடி தோத்திரஞ்செய்துகொண்டு ௸ சத்திரம் வந்துசேர்ந்து எமதிறைவனே உமது தலப்புராணம் எங்குளதோ யானுணர்ந்திலேன் தாமே யென்னிடம் வந்து சேரும்படி செய்விக்கவேண்டுமென்கின்ற சிந்தனையும் ஆராய்ச்சியுமா யிருந்தனர். இங்ஙனம் எண்ணமுற்றிருக்குங்காலத்தில் பரசுராமக்ஷேத்திரமாகியமலையாளத்திலிருந்துவந்த ராமஜடாவல்லவரிடத்திலிருப்பதாய்க்கேள்விப்பட்டு அவரைக்கண்டு வணங்கித்தங்களிடத்தில் பரிதிநேமஸ்தலபுராணமிருப்பதாய்க்கேள்விப்பட்டேன் அதை அடியேனுக்குத் தமிழ்வாசகத்திற் சொல்லவேண்டுமென்று மிகவணக்கத்துடன் கேட்க அவரும் அதிபிரியத்தோடு சொல்ல அதை வாசகநடையாயெழுதிக்கொண்டுவந்து அப்பாலுன்னையல்லாம லோரணுவு மசையாதாதலால் என்னுளத்திருந்தியற்றுவிப்பது உனதுகருணையேயென்று ஸ்ரீபரிதீஸ்வரனை தியானித்து தமிழில் காவியவிருத்தக்கவிகளாகப் பாடிவைத்திருந்தனர். தற்காலம் கும்பகோணம் சப்கலெக்டர் சிரஸ்தாதாராகிய மகா-ா-ா-ஸ்ரீ முத்துசாமி பிள்ளையவர்களின் பிதாவாகிய ௸ சத்திரம் கமாசுதாரராகவிருந்த மகா சத்குண சீலரான மகா-ா-ா-ஸ்ரீ வீராசாமி பிள்ளையவர்கள்கனவில் நம்முடைய ஸ்தலபுராணத்

தை என் அரங்கேற்றுவிக்காம லிருக்கின்று யென்று ஸ்ரீ பரிதீஸ்வரர் ஓர் பிராமணவேடமாய்ப்போய்த் தெரிவிக்க அவர் விழித்து உதயமானபின் என் பிதாவான ௸ யுபாத்தியாயரைக்கண்டு தாங்கள் பரிதியப்பார் ஸ்தலபுராணம் செய்திருக்கின்றீர்களோவென்று வினவ ஆமென் றுரைக்கக்கேட்டுத் தான் கண்ட சொற்பனத்தையுஞ் சொல்லி அப்பால் சென்ற அட்சய௵ பங்குனி௴ ௰௨௯ சோமவாரம் சுபதினத்தில் வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த வித்வான்களையும் ௸ முத்தம்பா புரத்திலுள்ள கனவான்கள் வர்த்தகர்கள் முதலானவர்களையும் குழுமச்செய்து அரங்கேற்றுப்படி செய்கிறமுறைமைப்படி அரங்கேற்றப்பட்டு அப் பரிதிநேமஸ்தலத்தின்கண்ணே இப்புராணமிருந்தது. நிகழ்ந்த விய௵ பங்குனி௴ உத்திரமகோற்சவத்திற்காக திருவானைக்காவிலிருந் தெழுந்தருளிய ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த சுவாமிகளின்பிரதம சிஷ்யராகிய ஸ்ரீ ஓங்காரஸ்வாமிகள் ௸ தலத்திற்கு வந்து சிவபெருமானையும் பராசத்தி குமாரக்கடவுள் முதலானோரையுந் தரிசித்து நிற்குங்காலையில் அத்தலப்பஞ்சாயத்தார்களை நோக்கி இத்தலப்புராண மிருக்கின்றதோவென்றுவினவ அப்பஞ்சாயத்தவர்கள் புராணம் வந்த வரலாற்றையுஞ் சொல்லி இருக்குதென்றனர். அதைக்கேட்டு சுவாமிகள் அத்தலத்தில் வசித்திருந்தனர். ௸ பரிதீசர் தரிசனத்திற்காகத் தஞ்சைமாநகரத்திலிருந்துவந்த மகாவித்துவான் மதுரைமுத்து உபாத்தியாயரவர்கள் சிவபெருமான் தரிசனை செய்துகொண்டு பின்பு ௸ ஓங்காரசுவாமிகளைத்தரிசித்து அவர்களுடன் சாதுசங்கம் செய்துகொண்டிருக்கும்பொழுது ௸ சுவாமிகள் ௸ உபாத்தியாயரைநோக்கி இத்தலப்புராணத்தை நீர் பிழையற ஆராய்ச்சிசெய்து அச்சிட்டுக் கொடுக்கவேண்டுமென்று கேட்க அவர் சுவாமிகள் கட்டளைப்படி செய்விக்கிறே னென்றனர். அன்றே அப்பரிதிநேமத்தைச் சூழ்ந்த வேங்கைநாட்டிற்குரிய பதினாறு கரைக்காரர்களுக்குள் சிரேட்டர்களும் இக்கோவிலுக்குப் பஞ்சாயத்தார்களுமாகிய காத்தாயி ராயாப்பிரியர் 1. முத்துசாமி ஆறுசுற்றியார் 1. வயித்திலிங்க வீரமுண்டார் 1. துரைசாமி பொன்னுப்பூண்டார் 1. முத்துசாமி ஆலந்தொண்டார் 1. இவ்வைந்துபேர்களின் பொருளுதவியாலும் ஓங்கார சுவாமிகளின் கட்டளையினாலும் ௸ மதுரைமுத்து உபாத்தியாயரவர்களால் இலக்கிய இலக்கண அமைதியும் பொருளமைதியும் ஒழுங்குபெறச்செய்து உலகத்திலுள்ள ஆன்மகோடிகளெல்லாம் ஓதியுணர்ந்துச்சீவிக்கும்பொருட்டு 1887௵ ஏப்பிரல்௴ தஞ்சைமாநகரம் திவாகர முத்திராட்சரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

முகவுரை முற்றிற்று.

உ

ஓம் மகாகணபதே நமஹா

சிவமயம்.

தஞ்சைமாநகரத்துத் தலைமைபொருந்திய
மஹாவித்துவான்

## ஸ்ரீலஸ்ரீ மதுரைமுத்துபாத்தியாயரவர்கள்

இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

சீர்வளர் அகண்ட பரிபூரணச் சச்சிதாநந்தச் சிவபரம்பொருளே
ஏர்வளர் தருதன்னருளை யோர்சத்தி யெழிலுருவாய்க் குறைவிலதாய்ப்
பேர்வளர் தருமாறி யற்றிமற்றதனாற் பிறங்குமைந்தொழிற் குரியனாயும்
நேர்வளர் பஞ்சசத்தி கடமையு நிகமமு மாக்கியதாங்கே. (௧)

அன்னதி ஞெளியாலைம்பெரும் பூதமாதிய சராசரமனைத்தும்
பின்ன பின்னமதாய்ப் பல்லாண்டகோடி பிறங்குறப்படைத்த வற்றுள்ளும்
அன்னியமாயுஞ் சாட்சிமாத்திர மாயலகிலாத் திருவிளையாடல்
மன்னியதந்தப்பொருள் அதைநாளு மறப்பிலாதிறைஞ்சியாம்வாழ்வாம் (௨)

மீதுயர் அஸ்வதாரணியத்து வேங்கை நாடதனுப்பணுகத்
தாதுறு பரிதிநேம மற்றதற்குத் தக்கணங்கன் னலோர் மூன்றிற்
போதுறுசோலை புடைகொள்முத்தம்பா புரமதிற் பல்கலை களையும்
ஓதுறுசாலை யுபாத்தியார்க்கெல்லா முயர்தரு தலைமையா யுறைவோன். (௩)

நிலைதிருக்கண்ண புரத்துமான்மியமு நிராலம்பதீ பிகையொடுமுற்
கலைமொழிதரு சின்மயதீ பிகையு மிக்காசினிக் காடையாய்ச் சூழ்ந்த
அலைதுயில் அரிபக்திச் சுதோதயமு மலகில் பன்னூல்களும்வகுத்தோன்
தலைமையாஞ் சமயம் யாவையு முணர்ந்து தத்துவநெறியினைச் சார்ந்தோன். (௪)

தொய்தமத் தொய்தமிரண்டையு நன்குதூக்கிஓர் சமஷ்டி பாவமதாய்ச்
செய்தவ முறைமை வழாதுதன் னிலையிற் சிதருது சாத்திய முற்றோன்
மெய்ந்நிலைநாராயண சாமியுபாத்தியாயனென் பெயர்விளங்குறுவோன்
கைதரு முணர்வோன் கனவிடைக்கால காலனுர் மொழிந்ததைக் கருதி. (௫)

பரசிவநந்தி கேச்சுரர்க்கருளப் பயின்றவர் சனக்குமா ரற்குத்
தரவவர் வியாதற் குதவவன ஞேர்சூ தற்குரைத் தருளிய பவிடோத்
தரபுராணத் திரவிநேம மான்மியந்தானுள வெனவின வுற்றுத்
திரகுணராமஜடாவல்லவரிடந்தெரிவிக்கவவர்தமிழ்நடையாய் (௬)

மொழிதரவரைந்து கொடுசிவபெருமான் முண்டகச்சரணிணைபோற்றிக்
கழிமகிழ்வோடு கண்டுமுக்கனி தேன்கைக்கு மாறினியன கவியான்
பொழிபயம் புலவர் சுருதிவாய் மாந்திப் புளக மெய்போர்ப்பவின் பெய்தி
விழியிலானந்த நீர்ததும்புற வவசம டைதர வியற்றினனே. (௭)

புவியிடைப் புலவர் புராணங்கள நேகம்புகன்று ளாரவை யெலாநல்ல
கவிகளே யலது சிவசரணிணையைக்காட்டு ருவிஃது கற்றுணர்ந்தோர்க்
கெவிதநீ வினைகளிருப்பினு மனலி விடுதுரும்பெனத் தகித்தான்மா
சவிபெறவிளக் குமிதற்கி தேயிணையாய்ச் சாற்றலாஞ் சமம்பிற விலவே. (௮)

கம்ப ராதிய முற்புலவரோ புராணகாவியஞ் சொல வலோரென்ன
இம்பரார் மொழிவ தெவன் கொலிப் புராணமியற்று முன்னென்றி யாருமதிப்ப
வம்புலாம் பொழில்சூழ் முத்தம்பாபுரத்து வசித்த நாராயணசாமி
அம்பெரும் புலவனுக்கிஞன் புகழ்வதாரையோ வறிகிலே னம்மா. (௯)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

திருப்பரிதீச் சுரப்புராணம்

# ஆதிச்சருக்கம்.

விநாயகக்கடவுள் துதி,

உலகெலா மகிழ்ந்து போற்ற வொளிர்கின்ற பரிதி தேவத்
திலகமாஞ் சிவனைப்பூசை செய்தல மகிமைகூறச்
சொலவொணுப் பிரணவத்தின் சுருவமா யன்பர்கண்மு
னிலகுமைங் கரவேழத்தி னிணையடி தலைமேற் கொள்வாம். (க)

சண்முகக்கடவுள் துதி.

திருப்பரிதி பூசித்திவ் வுலகமெலாஞ் சூழ்வரவே திரமை பூணுந்
திருப்பரிதித் தலமகிமை செந்தமிழா லுரைத்திடவே செல்வ நல்குந்
திருப்பருதிங்களுமமுதும்வரக்கடைந்தோன் மருகனெனுஞ் செவ்வேளென்றன்
றிருப்பருதி மிரமாற்றிக் கருணையுட னுளத்திருந்தே தெளிவித்தானே. (உ)

இதுவுமது

கருதுமனத் தவரருண் மழைபற்றுறு கனிவொடு நெக்குருகிச்
சரிதைமுதற் கொடுதொழுமடியார் பவசலதி மரக்கலமே
சுருதிமுதற் பொருடவ நிலையுத் தமர்துரிய நிறைப்பொருளே
பரிதிவனத் துறைசரவண வற்புதபரம னடித்துணையே. (௩)

வேறு.

திருமால் துதி.

கந்தங் கமழும் பங்கயப்பெண் கலந்தவுரமு மசுரர்முடி
சிந்தப் பதைக்குஞ் சினவாழி திரஞ்சேர் சங்கங் கரத்தேந்திக்
கந்தப்பெருமாள் கட்டழகைக் கண்டே கண்கள் களிகூர
வந்தப் பெருமான் றனைப்பரிதி வனத்திற் றுதித்து வணங்கிடுவாம். (௪)

வேறு இதுவுமது.

மருகனு ரசுரரைவென் றிப்பரிதி வனத்தமர்ந்த வளமை காண்பான்
பருகுநா ரந்துளிப்ப தெனக்கருணை துளிதுளிப்பப் பசுமேகம்போ
லுருகினர்க் கருள்புரியுஞ் செந்திருவா மின்னலுட னுலவாச் செல்வ
முருகனு ரெதிர்விளங்கு முகுந்தனு ரடிக்கமல முடிமேற்கொள்வாம். (௫)

வேறு.

பரிதிவனேஸ்வரர் துதி.

தத்துவத்தின் பொருண்முடிவாய்த் துரியாதீதத்
தற்பரமாய் நிட்களமாய்ச் சார்ந்து மேலாய்ச்
சுத்தபரி பூரணமாய்ச்சத்தாய்ச்சித்தாய்ச்
சுயஞ்சுடராய்நிரஞ்சனமாய்ச் சுயம்பதாகி
முத்தொழிலு நடத்தியுமோர் படிவமாகி
முழுமுதலா யருட்கடலாய் முன்னிற்குமென்று
நித்தியநம் பரிதிவன நிமலன்பொற்று
ணிச்சலுமே பணிந்துருகி நினைதல் செய்வாம். (௬)

### மங்களநாயகியம்மன்றுதி.

தங்கத்தி னொளிபோலுந் தோயத்துள்ள
    தண்மையைப்போலுங் கலைகள் சாரநின்ற
திங்களிடத் தமுதெனவுந் தீயில் வெம்மை
    வானினிற்காற் றேனினிமை கவியிலின்பம்
பங்கயத்துண் மணம்போலுங் கலந்தெப்போதும்
    பரிதிவன நாதரிடப் பாகங்கொண்ட
மங்களநா யகியுமையாள் பதுமப்பொற்றாண்
    மறவாதா ரொந்நாளும் பிறவா தாரே. (எ)

### வேறு.

### சபாநாயகர் துதி.

செம்பவளச் சடைக்காடு கொன்றை தும்பை கங்கைமதி சேர்ந்து விண்ணிற்
பம்பியெங்குஞ் சுழன்றாட வரவாட வைம்பூதப் பகுதியாட
உம்பர்சய சயவென்று கூத்தாட மார்க்கண்ட ருருகித்தேகங்
கம்பிதமாய்க் களித்தாடப் பரிதிவனத் தாடியசீர்க் கழல்கள் போற்றி. (அ)

### தட்சிணாமூர்த்தி துதி.

வேதங்க ளாகமங்கள் சாத்திரங்க ளுபநிடத்தின் விரிவதான
பேதங்கண் முழுதுணர்ந்த முதுமூப்பு நால்வரின்பம் பெறவு வாவாய்ச்
சீதமதி யெனவாலின் கீழிருந்து கைகாட்டுந் தேவதேவன்
பாதமல ரிணையதனைப் பரிதிவனத் தினிற்கண்டே பணிதல் செய்வாம். (கூ)

### நாமகள் துதி.

வெண்ணிலவு தருங்கமல மலரிலுறை நாமகளிவ் வெளிய நாயே
னுண்ணிறைந்து பரிதிசர் தலமகிமை செந்தமிழா லுரைக்கநாளுங்
கண்ணருள் செய்தாள்கின் றாளுண்மையிது வாதலினுற் காநீயென்று
பண்ணமைந்த பாமகண்மேற் பாவிசைக்குஞ் செயலுளதோ பகருங்காலே. (ய)

### வேறு காளியம்மன்றுதி.

குழுமிய வசுரர்சேனை குலைந்திட மகிடன் சாய்ந்து
விழவடி வாள்கைக்கொண்டு விமலமாம் பரிதிநேமம்
பழுதறக் காத்துப்பாதம் பரவிய பேர்கட்கெல்லா
மழகிய வளமை நல்கு மம்மைதா ளகத்துள் வைப்பாம். (யக)

### வேறு நந்திகேசுரர் துதி.

இந்திரன் வானவர் முனிவர்கணநாத ரெண்ணிறந்த சித்தர் யாழ்கொள்
கந்திருவ ரியக்கர்வித்தி யாதரர்கள் பரிதிவனக் கடவுள் பாதம்
வந்தனை செய்திட வந்தோர் முனம்பணியும் வேத்திரத்தை வலக்கைகொள்ளு
நந்திகேசுரப்பெருமா னிணையடியை முடிக்கணியாய் நாளுங்கொள்வாம். (யஉ)

### திருஞானசம்பந்தர் துதி.

சூழ்வினையாம் வெப்பமற வஞ்ஞான விருளோடத் தொண்டரான
தாழ்வில்லாச் சகோரங்கள் சுதையருந்தவரு ளுடையதாயினல்ல
யாழ்மொழிச் சங்கரியூட்டமுமு தருவாய்க் கவிநிலவை அரன்மேல் வீசக்
காழியெனு மாழிவரு முழுமதியாங் கவுணியர்தாள் கருத்துள் வைப்பம். (யரு)

### வாகீசர்துதி.

திலகவதி யார்வேண்டச் சிவனருளாற் செந்தமிழைச் செழிக்கப் பாடிக்
கலகமிகுஞ் சமண்பகையுங் கற்புணையாற் கருங்கடலுங் கடந்து தொண்டர்
நலமுறவே யின்பமழை பொழிமுகிலாய்த் தோன்றி யெந்தநாளு மோங்கி
யிலகியிடும் வாகீசர் பொற்கமலச் சரணிணைக ளிறைஞ்சி வாழ்வாம். (௰௪)

### திருநாவலூரர்துதி.

சந்திரனைச் சடைக்கணிந்தோ ரூடலகற்றிடப்பரவை தன்பாலேகிச்
சந்துசொல வும்முதலை யுண்டசிறு வன்வரவுஞ் சார்ந்து கேட்போர்
பந்தமற வும்பாடிப் பரசிவத்தின் றோழனெனப் பரிசுபெற்ற
சுந்தரனா ரடிபரவுந் தொண்டர்திரு வடிக்கமலந் துணையாக் கொள்வாம். (௰௫)

### திருவாதவூரர்துதி.

குருவாகிச் சிவபெருமா னருளியவின்பந்திளைத்துக் கோடிபுத்தர்
பெருவாது வென்றவர்தம் பேடிதனைப் பேசவைத்துப் பிறங்கலோடு
தருவாதி யுருகியிடத் திருவாச கத்தமிழுந் தந்ததெய்வத்
திருவாத வூரடிக ளடிக்கமல முடிக்கணியாய்ச் சேர்த்தி வாழ்வாம். (௰௬)

### சண்டியடிகள் திருத்தொண்டர் வணக்கம்.

எந்தைபத மடைந்திடத்தன் றந்தைபத மெறிந்தசண்டி யீசர்பொற்றாள்
வந்தனைசெய் தேமுன்னர் வழிப்பட்ட தொண்டர்பதம் வணங்கியிந்நாட்
பந்தமறுத் திடுமன்பர் பதம்பரவி யினிப்பிறந்து பரமர்தாளில்
சிந்தைவைப்போர் தனைக்கருதிப் பரிதிவன மகிமைதனைச்செப்பலுற்றேன்(௰௭)

### அவையடக்கம்.

தொண்டர்க ளாய்ந்தெடுத் தணியுநறு வாசவ லரியினும் தூயதென்றே
திண்டிறல் சேர் சாக்கியனாரெறிந்த சிலையுவந்தேற்குந்தேவதேவன்
அண்டருல கத்தமுதின் சுவைதிரண்ட தெனமுன்னோ ரன்பாய்ச்சாத்துந்
தண்டமிழி னுடனாயேன் புன்சொலுங் கொண்டருள்வரெனச் சாற்றினேனே ()

### இதுவுமது.

தூயசுரநதியினை யோர்தேரா யெச்சிலென்னாமற் றோய்வார்போல
நாயினிலுங் கடையனுரை யென்னாம லகத்திமிர நடுங்கியோடப்
பாயுமொளிப் பரிதீசர் சரிதமதைப் பகர்கின்ற பனுவலென்றே
நேயமுறு வாரன்ப ரெனத்துணிந்து நாவசைத்து நிகழ்த்த லுற்றேன். (௰௯)

### இதுவுமது.

சுவையிரத விழைவுடையோர் கழைக்கோணல் பாரார்போற் றென்னூற்ற
நவையகற்றிவீடருளும் பரிதீசர் மகிமைதனி னாட்டமுற்ற
கவிவலவர் பாவில்வருங் குற்றமொரு பொருளாகக் கருதாரொன்று
புவியினிலிச் சிறியவனா வசைக்கின்றேன் குருவருளைப் போற்றிசெய்தே. (௨௰)

### வேறு

### வாழ்த்து.

சந்ததம் வேதம் வேள்வி தழைத்திட சுரந்துமாரி
சிந்திட வுலகமெல்லாஞ் செழித்திட மறைகொண்டாடு
முந்துமுட் சமயமாறு முறைவழி விளங்கமன்னர்
நந்தவில் செங்கோல்வாழ்க நல்லற நாளும்வாழ்க. (௨௧)

வேறு நூற்பயன்.

கங்கையணி பரிதிசர் மகிமைதன்னைக்
கருத்துருகக் கேட்போர்கள் மகப்பேறுண்டாய்ப்
பங்கயமா தருள்பெருகுஞ் செல்வமெல்லாம்
படைத்திடுவர் பகைவெல்வர் பிணிசேராத
அங்கமொடு வாணாளும் வளரவாழ்வ
ரமரரொன வானந்த போகமெய்தி
மங்களநா யகியருளாற்சிவன் முத்தி
மருவுபரி பூரணமாய் வயங்குவாரே. (உஉ)

ஆகப்பாயிரம் க-க்கு கூடியசெய்யுள் உஉ

பாயிரம் முற்றிற்று.

# திருக்கயிலாயச்சருக்கம்.

செழுமணிச் சுடிகை யுச்சிச்சேடனார் சென்னி யேதொட்
டெழுமுடி யண்டகோளத் தெல்லையுங் கடந்த தாகி
யொழுகொளி விரிக்கு மாற்று லொண்சுட ரொரிக்கும் வெள்ளி
முழுமுதற் கடவுள் வாழு முதுபதி கைலைக் குன்றம். (க)

தெண்டிரை யவனி யுற்றோர் திருவடிக் குள்ளாய்த் தோன்றக்
கொண்டமால் நின்றதேய்ப்பக் குறையற நிமிர்ந்து மேலாய்
அண்டர்மா முனிவர்க் கெல்லா மணுகிட வரிதாய் நம்புந்
தொண்டர்க ளாட்சியாகத் துன்னுவ கைலை மாதோ. (உ

தூயவெண் சுடரி னாலுந் தொண்டர்மேற் கொள்ளச் செய்யு
நேயம தாலுங் கங்கை நிலவிய தாலும் பச்சைச்
சாயலார் மயில்சேர் கின்ற தகுதியா லரனே யன்ன
மீயுயர் கயிலை வெற்பு விண்டொட விளங்கு மம்மா. (௩)

களங்கமிற் றூய்மை யானுங் கவிழ்த்திடுகண்ணீ ரானுந்
துளங்குத லின்மை யானுஞ் சோதியுட் டங்கலானும்
விளங்கிமே லோங்கலானும் வியப்புறு தண்மையானு
மளந்திட வரியதானு மன்பராங் கையிலைக் குன்றம். (௪)

உண்மையா மன்பருள்ள முருகிவீழ்ந் திரங்கல் கண்டு
திண்மையா மெனினு மீசர் சீர்பெறக் கரைவோமென்று
வெண்மையாங் கிரண ம்வீசும் வெள்ளியங் கிரியுமுற்றுந்
தண்மையா மருவி வாரச் சந்ததம் விளங்கு மாதோ. (௫)

பூரணக் கலைகொ டிங்கள் பொருந்திட வனந்தகோடி
சீருற வடுக்கிச் செய்த தென்ன லாந்திகழ்ந்து மேன்மே
லேருறுங் கயிலை யுச்சி யினிற்பல விரவி யொன்றாய்ச்
சேருவ தென்னலாகுஞ் செழுமணி மாடக் கூடம். (௬)

தேவர்கண் முனிவர் சித்தர் திண்ணிய வியக்கர் விஞ்சை
மேவிய ருரகர் யாழில் மிக்ககந் திருவ ரும்பர்
காவலரோ டியாருங் கரைந்தின்பக் கண்ணீ ரூற்று
மோவிய மென்ன நிற்கு மொளிமணிக் கயிலைச் சாரல். (எ)

வேதனும் வேத நான்கும் விளம்புதற் கரியதாகுஞ்
சோதியின் கைலைதன்னிற் றுலங்கிய வளங்க ளெல்லா
மேதினி தனிலோர் மன்னன் மேன்மையைக் கூறலொவ்வாப்
பேதையா மடியேன் வாயாற் பிதற்றிடு லமையுங் கொல்லோ. (அ)

நதிதல மூர்த்தி சேவை நலமுறுஞ் சரிதை யோர்க்கும்
புதியநன் மலராற்பூசை புரிந்திடுங் கிரியை யோர்க்குங்
கதியெனநம் புமியோ குக்க ருத்தர்க்கு ஞானிகட்கும்
பதமொரு நான்கு நல்கும் பதியதாங் கைலைக் குன்றம். (கூ)

அங்கண்மா விசும்பிற் கோளோ டரும்பிய வுடுக்களென்னத்
துங்கமா மணிக ளெங்குந் துலங்கிநல் லழகு காட்டத்
தங்கமா மணல்கள் வாரத் தமனிய வரைநாண் பூண
வெங்கணும் பிரபை வீசு மெழிற்கயி லாய குன்றம். (௰)

பத்தியா யிறைஞ்சு வோரும் பரிவொடு பூசிப் போருஞ்
சித்திகள் வேண்டி நின்று சிறந்திடு தவஞ்செய் வோருஞ்
சுத்தியா யோகு செய்யுந் தூயரு ஞான தீர
முத்தரு மொய்க்குஞ் சாரல் முருகுவார் கயிலைக் குன்றம். (௰க)

காவுறை தருக்களெல்லாங் கற்பக மணிக ளெல்லாந்
தேவரு மிரக்க நல்குந் தியாகமா மணிகள் மேயுங்
கோவெலாங் காமதேனு கோலமா வாசப்பூவே
பூவெலாங் கயிலைச் சாரற் பொலிவெனப் புகல்வர் வல்லோர். (௰உ)

அமரரு மறியவொண்ணா வமலமாஞ் சோதிதன்னை
யிமயமா மலையினின்று மெய்திய மயிலதான
உமையுட னுள்ளங் கொண்ட வூக்கத்தால் வரைகடம்மை
யமையுற நகைப்ப தொக்கு மவிரொளிக் கயிலைக் குன்றம் (௰௩)

வேறு.

வெள்ளியங் கிரியி னுச்சியிற்கோடி வெயிலவர் கூடியதென்னத்
தெள்ளிய மணிகள் கூட்டியேயமைத்த சித்திரமண்டபமதனில்
ஒள்ளிய வரியாசனத்தினி லுமையோடு வந்துமெய் யன்பர்களினிய
வுள்ளமீ தென்னச் சிவபெருமானு மோலக்கமெய்திய போதில். (௰௪)

மகபதி முதலாந் தேவர்கள் குழுவு மாமுனிவோர்களும் வணங்கி
யகங்குழைந் துருகி யானந்தக்கண்ணீ ராறதாய்ப் பெருகிடப்புளக
மிகமிக வரும்பப் பணிபவர் நெருக்கம் விலக்கியே கயிலை காத்தியார்க்கும்
இக பரமளிக்கு நந்தி யெம்பெருமா னிசைத்தனனின்பமீக் கொளவே. (௰௫)

ஆகச்சருக்கம் உ-க்குசெய்யுள் ௬௭

திருக்கயிலாயச்சருக்கம்

முற்றிற்று.

# மூர்த்திவிசேடச்சருக்கம்.

திருக்கயிலை தனினந்தி சனக்கு மாரர்
தெரிந்திடவே யருளியதை யவர்வியா தற்குக்
கருத்துறவே நவின்றதுகேட் டவர்சூ தற்குக்
கட்டுரைத்த பவிஷோத்திர புராணந் தன்னில்
விரித்திடுமுத் திரபாகத் தலங்கண் டாங்கு
விளங்குமத்தியா யந்தொண்ணூற் றெட்டி னின்பந்
திருத்தமுட னவர்சவுன கருக்குச் சொன்ன
சீர்பரிதித் தலமகிமை செப்பலுற்றும். (௧)

மூர்த்தியொடு தலமகிமை தீர்த்த மேன்மை
முதுசேனந் தொடக்கறுத்தன் முதலாம் வண்மை
சீர்த்தியுள சிவியெனும்பே ரரசன் பூசை
செய்துசிறந் ததும்வசிகத் திலக னெய்தித்
தீர்த்தனுஞ் சிவபெருமா னடிகள் போற்றித்
திருக்கறுத்து முத்தியுறுந் திறமு முன்னோர்
பார்த்திபன்ற னமைச்சன்சேய் புரிந்த தீய
பாதகந்தீர்த் தருள்பரிசும் பகர லுற்றும். (௨)

அருளியதோர் பவுடோத்திர புராணந்தன்னி
லளகையாந் தஞ்சைதல மறையுங் காலைப்
பரிதிவன மென்றதனுக் கருகி லெண்ணம்
பலித்திடுநற் றலமுளதென் றுரைத்தீ ரந்தப்
பொருவிறல மகிமைதனை யுணர்த்த வேண்டும்
புண்ணியனே யென்றுசவு னகர்வி னவத்
தெருளுறக் கேட் டீரந்தக் கேள்விக் கொப்பாஞ்
சீருளதோ வெனச்சூதர் செப்பலுற்றார். (௩)

கங்கையினிற் படிநீயென் றுரைத்த பேர்க்குங்
கசடறவே நடந்தந்தக் கங்கை தன்னில்
அங்கமுறப் படிந்தோர்க்குந் தீமைநீக்கி
யமலபத மருள்கின்ற வாற்றல்போலப்
பங்கயனே யன்பணியும் பரிதிநேமம்
பகருமெனக் கும்மிதனைப் பரிவாய்க் கேட்கு
முங்களுக்கு மின்பமுறு மென்று சூத
ருயர்வேத வியாதர்பத முன்னிச் சொல்வார். (௪)

அண்டமதி னிறைந்தவிருட் பிழம்பை நீக்கி
அடர்கிரண வெயிலெறிக்கு மடவால் வெப்பங்
கொண்டுதினஞ் சுழல்வதன்றிச் சாந்தமாயுட்
குளிர்ந்தறியே னென்செய்வே னென்று வாசப்
புண்டரிக மலரலர்த்தும் பரிதிதேவன்
புனிற்றிளவெண் பிறைமுடித்த புனிதற் கன்பாய்
மண்டலத்திற் பூசித்தே யருள்பெற் றின்று
மகிழ்வனென வேதுணிவு மன்னினுனல். (௫)

பூசிக்கப் பரிதியுமெய் யன்பு கொண்டிப்
புவிமீது வச்சுவத்தப் பொதும்பர் நண்ணி
நேசித்தே மணலினையோ ரிலிங்கமாக
நிருமித்து மறையோது நெறியா னல்ல
வாசமல ரதுகொண்டே யருச்சித் தேத்தி
வணங்கியுள முருகுமப்போ தவ்வாலுகந்
தேசுபெற வுருகியொரு சுயம்பதாகித்
தெரிந்திடவே கண்டுமகிழ் சிறந்தா னன்றே. (௬)

மேடமதிப் பருவமதி லெனதுகையால்
விதித்தமண லிலிங்கமது மிக்கசோதி
நீடியதோர் சுயம்பாகி யொளிர்வ தாலே
நித்தியபூ ரணப்பொருளாய் நிறைந்தே தேவர்
நாடவரு மீசரரு ளுண்டென் மேலு
நான் பெற்ற பெரும்பேறே பேறென் றோதிப்
பாடியுடற் புளகமுற வெழுந்து துள்ளிப்
பணிந்துகரங் கூப்பிநிதம் பரவலுற்றான். (௭)

வேறு

மூலமாய் முதலாய் முளைத்துமுத் தொழிலின் முயன்றிடு மூர்த்திக ளாகி
ஞாலமாய்ப் புனறீ கால்வெளியாகி நாமமு முருவமு மனந்தங்
கோலமா யிலகுஞ் சராசர மாகிக் குறைவற நிறைந்தபூ ரணனீ
சீலமொன் றறியா வெய்யவெற் கிரங்கித் தெளிவுற வந்ததெத் திறமே. (௮)

அன்பினு லுள்ள நெக்குநெக் குருகி யனலிடு வெண்ணெயா யுக்க
வின்புறு கண்ணீர்க் கருமரக் கலமா இசைந்தமெய்த் தொண்டருக்கிரங்கி
முன்புறத் தோன்றி யருளுநீ யுலக முற்றிலுந் தீச்சுட ரொன்னத்
துன்புறு மென்ற னெஞ்சமுங் குளிரத் தோன்றிய வியப்பையென்சொல்கேன்.

பாயிருள் பருகும் பரிதிமெய் யன்பாய்ப் பசுபதி தனைத்துதிபுரிந்து
மீயுயர்விசுவ கருமனை யழையா வியப்புறக் கோயிலு மதிலுந்
தூயதா மணிக்கோ புரங்களும்வி மானத் தூபியும் கயிலை யேயென்னக்
காய்கதிர் மணியுங் கனகமுங் கூட்டிக் கவின்பெற வமைத்தனன் கருதி. (௰)

அண்டமீன் றெடுத்த வன்னையா யடியார்க் கருள்பொழி மங்களாம் பிகைக்குங்
கொண்டல்போற் கருணை யன்பர்மேற் கொழிக்குங் குஞ்சரமுகக் கணபதிக்கும்
தெண்டிரை சுவற வேலெடுத் தவர்க்குஞ் சீதர னார்க்குமங் கோவில்
விண்டொடக் கனக மயமதாயமைத்து வியப்புற மற்றவா னவர்க்கும் (௰௧)

பசும்பொனாற் கோவில் பற்பல படைத்தும் பகரரு நந்தன வனங்கள்
விசும்புற வமைத்தும் வேதியர் வீதிவிளங்கிட விளக்கியுஞ் சுவணத்
தசும்புக ணிறைத்து மட்டமங் கலங்கள் சதிர்பெற நிறுவியெப்போதும்
நிசம்புகன் றிடுவோர் ஞானம தென்ன நீர்தரு கூவங்க டொட்டும். (௰௨)

கங்கையோ டரிய திங்களும் புனைந்த கண்ணுதல் கோவிலின் குணபால்
செங்கையிற் சிலைகொண்டெய்தவம் பிரண்டு சேர்ந்திடு நெட்டினுக் குள்ளாய்ப்
பங்கமில் பரிதி தன்பெயர் புணர்த்திப் படிவமுந் தன்னுரு வென்னச்
சங்குறு தடமொன் றமைத்தனன் யமுனை தன்முக மிகக்கரு கிடவே. (௰௩)

மூவரு மொன்று மூர்த்தியின் கொன்றை முடியினிற் றிருவபிடேக
மாவதற் குரித்தாய்ப் பரிதியோர் தீர்த்த மாக்கி னனென்பதைக் கருதித்
தேவரும் வியக்கு நதிமட வார்கள் சென்றுவெஞ் சுறவுபாய் கடலிற்
கோவென வலறிக் குப்புற லிந்தக் குவலய மறிந்திடா தலவே. (௰௪)

சூரிய நாமப் புஷ்கரி ணியிலே தோயம தெடுத்துமே பரிதி
யாரிய சுயம்புக் காட்டிப்பொன் னுடை யணிந்துசாந் தணிந்துசண் பகத்தின்
றூரணிந் தொளிரு மணிப்பணி யணிந்து சாற்றரும் பாயசம் படைத்துத்
தூரியத் தோடு துந்துமி முழங்கச் சுரிமுகச் சங்கமார்த் திடவே. (௰௫)

எண்ணிரண் டெனப்பண் டுரைத்திடு முகம னியற்றிநல் லட்சதை மலர்கள்
தண்ணறுந் தும்பை கூவிள முதலாய்த் தனித்தனி யருச்சனை புரிந்து
பண்ணிசை பாடி யரம்பைய ராடப் பாளிதத் தீபமு மேந்தி
யுண்ணிறையன்போ டிறைஞ்சிமா மறைக ளோதியுள் ளுவகையா லுருகி (௰௬)

பணிந்தெழுந் தாடி வலமதாய்ச் சுழன்று பரமனு ருக்கு மம்பிகைக்கு
மணிந்த மெய் யன்பாய்த் தினமிரு முக்கா லருச்சனை புரிந்துமைங் கரற்கும்
தணிந்திடா வசுர ருளம்பிளந் தழித்த சண்முகன்றனக்குமங்குரவை
பிணைந்தமா தவற்கும் பூசனைபுரியப் பெற்றபின் பன்னிரு திங்கள். (௰௭)

முந்திய திங்க டனிலேந்தா நாளில் முன்றிலில் விடைக்கொடிநிறுவிச்
சந்திரசூடர் தனக்கிரு போதுந் தனிவிழாக் களிப்பொடு நடத்தி
யிந்திர புரம்போ னகரலங் கரித்து மெழிலுட னத்தநாளதனிற்
சுந்தர மாக விரதமொன் றமைத்தான் றொழுபவர்பவத்தொடக் கறவே. (௰௮)

முப்பதோ டிரண்டு கோணம துளதாய் முழுவதுஞ் சந்திரகாந் தத்தால்
செப்பருந் தூபித் தசும்புடன் சுவணஞ் சேர்த்திய துகிலது புனைதந்
தொப்பிலாத் துவசந் தூக்கியே மிக்க வொளிர் மணி மாலைக ணிறைத்து
முப்புர மெரிக்க வூர்ந்ததே ரழகின் மும்மடங் காயலங் கரித்தான். (௰௯)

அம்பிகை தனக்கு மைங்கரன் றனக்கு மறுமுகக்கு மரவேடனக்குஞ்
சம்புவின றொண்டு தணந்திடாச் சண்டி தனக்குமே யிரதங்களரிய
வும்பரூர் தியென வலங்கரித் துலவு முததியி னொலியென வியங்கள்
பம்பிட வரம்பை மாதர்க ணடிப்ப ப்பரமனைத் தேரினி லேற்றி. (௨௰)

காரண ரிரத முதலேந்து தேருங்கவின்பெறச்சீலர்தொட்டிர்ப்பத்
தோரணவீதிவருதலாற் பரிதி துளக்கரு முளமெனக்களித்தும்
பூரணகும்ப மேந்தியே தேவப் புனிதர்கள் குழுமியே கூடி
யாரணமோதி யுடன்வரத் தேர்விட்டண்ணலுங்கோவில்சென்றமர்ந்தார். (௨௧)

சித்திரைப் பருவ மொத்தநாட் பரிதி சிவபெரு மான்றிருத் தாளிற்
பத்தியாய்ப் பூசைபுரிந்துகண் பனிப்பப் பதைப்பற வோவிய மொத்துச்
சித்தம தோய்ந்து பரவசமாகச் சேர்ந்தமை கண்டுள மிரங்கி
முத்திதந் தாளும் பதமல ரருளி முன்வரக் கருதினன் முன்னோன். (௨௨)

வேறு.

திங்களஞ் சடையும் பங்கய முகமுந் திருவருள் பெருகுமுக் கண்ணும்
பொங்கர வணியும் புலியத ளுடையும் பொற்பத மறைச்சிலம் பொலியு
மங்கச னுள்ள மழலுமெய் யழகு மம்பிகை பாகமு மாகச்
செங்கணு னேறி யெதிர்வரக் கண்டு திகைத்தனன் பரிதிவா னவனே. (௨௩)

திகைத்தவன் றேரி நோக்கிடுங் காலைச் சின்மயச் சுரூபமா முமையும்
பகைத்தவர் மூன்று புரமுந்திப் பட்டுப் பதைத்துவெண் ணீறதாம்படிமுன்
நகைத்தபெம் மானும் விடையினிற் றோன்ற நாண்மலரடி மிசைப்பணிந்து
சகத்தினை நீக்கித் தனித்தமெய்த் தவத்தோர் தன்மை போன் மகிழ்ச்சியுட்டாழ்
[ந்தான்.

வெகுமுகக்கடன்கொண்டவரவ ரோசமிடியுறு வோன்வசமாகத்
தொகுபெருஞ் சேம நிதிகிடைத் தென்னத் துள்ளின னுடினன்பாடி
நகுமுகமாகி யானந்தக்கண்ணீர் நளினமுத் தெனச்சொரிந் திடநற்
சுகமுறப்பரிதி சச்சிதா நந்தச் சோதியை வாயினாற் றுதித்தான். (௨௫)

சோதியே சோதிச் சுடரோயோர் பச்சைமின்சேர்
பாதியே யொன்றே பழமறையும் பாடவொண்ணு
வாதியே யீறுநடு வாயிருந்து நீநடத்து
நீதிதனையான்வாயா னிகழ்த்துந் தரமாமோ. (உசு)

ஊனு யுயிரா யுணர்வா யுணர்விறந்த
மோனுதீ தச்சுடராய் முற்றும்வெளி யாய்ப்பரம
வானு யயன்றனக்கும் வாசாம கோசரமாங்
கோனுன நின்பெருமை கூறவெளி தாகாதே. (உஎ)

யானே யெனவு மரும்போக மென்னதெனத்
தானே யெழுங்கடிய தற்போத மற்றுவெறு
வானே நிகர்க்கு மவுனத்தோர் கண்மணியாந்
தேனே யுனைக்காணச் செய்ததுநா னெத்தவமே. (உஅ)

ஆக்க வயனுவா யாகியதோ ரண்டமெல்லாங்
காக்கவே யச்சுதனுய்க் கட்டழகு கொண்டுநிற்பாய்
நீக்கியிடக் கண்ணுதலாய் நிற்பா யுனைக்காணும்
பாக்கியஞ்செய் தேனடியேன் பற்றியபூ சைப்பயனே. (உகூ)

வேதமே வேதப் பொருளே விளங்குமைந்து
பூதமே பூதப் புணர்ப்பே வெளிகடந்த
நாதமே நாத முடிவேமெஞ் ஞானியர்கள்
போதமே யுன்பதத்தைப் போற்ற வறியேனே. (௩0)

அஞ்சக் கரப்படையா லாங்காரக் காடெறிந்து
நெஞ்சைத் திருத்தி நிருவிகற்ப வித்தையிட்டு
வஞ்சப் புலக்களையை வாங்கியன்பு நீர்பாய்ச்சித்
தஞ்சமென்பா ருண்போகச் சத்தெனக்குக் கிட்டியவே. (௩க)

சராசரங்க ளாகித் தனித்தோ ரருஞ்சுடராய்
நிராமயமாய் நிர்க்குணமாய் நித்தியமாய்த் தத்துவத்தின்
றராதரமாய் நின்ற சருவபரி பூரணமாம்
பராபரமே யுன்னைப் பணியுந் தரங்காணேன். (௩உ)

வேதச் சிறுவனுக்காய் வீய்ந்துசண்டன் போய்ப்புரள
பாதத்தா லெற்றும் பழம்பொருளே மெய்ஞ்ஞான
போதமுற்றோ ருக்கெளிய புண்ணியனே பொன்னிதழிச்
சீதத்தா ராவருணீ செய்ததற்கென் கைம்மாறே. (௩௩)

என்றுபரிதி யிறைஞ்சி யுடனடுங்கி
நின்றபொழு திந்த நிரஞ்சனனுமேசிறிய
கன்றுக் கிரங்குகின்ற கற்றா வெனவிரங்கி
நன்றுனது பூசையென நல்வரங்க ளீகுவனுல். (௩ச)

வேறு

பரிதிவா னவநீ யன்பாய்ப் பரிந்துசெய் கின்றபூசை
யுரிமைகண் டனநங் கண்ணி னுள்ளொளி யாகக்கொண்டேந்
திருவுரு வட்ட மூர்த்தந் தனிலொன்றுய்த் திகழ்வாய் மெச்சி
யருள்புரிந் தனமுப் போது மந்தண ரரிக்க மென்றும். (௩ரு)

பூசுரர் செய்வை நீகப் பூசையி னம்மோடும்மை
நேசமாய்ப்பூசை செய்ய நியமித்தே முமைவந் திப்போர்
மாசறப் பிணிக ளற்று மகிழ்ந்திட வரமுந் தந்தேந்
தேசுட னண்டஞ் சூழுந் திறந்தந்தேஞ் சீருந் தந்தேம். (௩சு)

வெப்புறு கிரணங்காட்டி வெளிவெயி லெறித்திட் டாலுந்
தப்பற வாய்ந்த ஞானி தன்னுளத் தன்மைக் கென்று
மொப்பவும் முளமுஞ்சீத முற்றுமே மகிழ்வாய் மேலு
மிப்பதி கயிலைக்கொப்பா யென்றுமே புனித மாகும். (ருஎ

இத்தல மூழி தோறு மிலங்கியே வாழு முன்றன்
சித்தம தன்பு கூருந் தினகர கோத்தி ரத்தோர்
சுத்தனாய் மெய்ந்நூ லோர்ந்து சுகம்பெறு ஞானமுற்று
முத்தராய் மோன நந்த மூர்த்திக ளாகிவாழ்வார். (ருஅ)

திமிரம தகற்றுகின்ற தேசுறு பரிதிதேவ
வுமதுளங் குளிரத்தொட்ட வூறற்புஷ் கரிணிதன்னி
லமரருங் கங்கையும்வந் தன்புடன் றீர்த்தமாடித்
தமதுமா சகற்றி வாழ்வர் சந்தத மின்பமுற்றே. (ருகூ)

இந்தமா விலிங்கந்தன்னை யாமெனப் பூசைசெய்த
சந்தத மிகத்திலின்பஞ் சார்ந்துவாழ்ந் திருந்துமுத்தி
சொந்த மாயடை வரிந்தச் சுயம்புவோ ரூழிகாறு
முந்துற வளருந்தச்சர் முழத்தள வொன்று கொள்வாய். (சம)

பிரளய வூழிசென்ற பின்புநீ யிந்நாட்போலத்
தெருளுட னாலயாதி செய்துவா தாரபீடம்
பொருளதாஞ் சுயம்புவூணப் பொற்புடன் கோத்துப்பூசை
யிருளற வியற்றுவாய்பின் னெழுகின்ற வூழிதோறும். (சக)

இன்னன வரங்க ளீய்ந்தே யீசனார் வளர்ந்து நின்ற
நன்னயச் சுயம்பிற் சேர நாடியே பரிதிதேவ
னென்னயான் பூசை செய்தற் கிரங்கிவந் தாண்டாரொன்று
முன்னவர் தன்னை யுன்னி முற்றிலுங் குளிர்ந்தான் மாதோ. (சஉ)

ஆக்ச்சருக்கமூன்றுக்கு செய்யுள் (எக)

மூர்த்திவிசேடச்சருச்கம்

முற்றிற்று.

# தலவிசேடச்சருக்கம்.

செய்ய பரிதி மெய்யன்பாற் சிறந்த பூசை செய்திடவே
பொய்யில் வரங்க ளளித்தாண்ட புனித மூர்த்தி தனையுரைத்து
வைய மதனிற் பரிதிவன மான தலத்தின் மகிமைதனை
யையமின்றிச் சகமுழுது மறிந்தின் புறவே யறைந்திடுவாம். (௧)

பூதி யணிந்து கண்டிகையும் பூண்டேயெழுத்தைந் தினையுணர்வா
லோதிச் சிவபூ சனைபுரிந்தே யுறுத்தகாலன் றனைவென்ற
வேதத் துருவா மார்க்கண்டர் மேவித் தவஞ்செய் திடவிடந்தான்
சோதித்திந்தப் பரிதிவனந் தோன்ற வுணர்ந்தார் ஞானத்தால். (௨)

அரனார் விடைமீ தம்பிகையோ டருளா லெழுந்த பரிதிவனக்
குரனார் வரங்க ளளித்ததல முண்மை யிதுவே தூயதெனச்
சரணும் புயங்கள் சிவப்பேறச் சார்ந்து புலன்க ளைந்துடனே
கரண திகளு மடங்கியிடக் கடிய தவமேற் கொண்டிடுநாள். (௩)

மனம தடங்க வளிய டங்க மாவி னினங்கள் சிலையெனவே
தனதி னுடல முரிஞ்சியிடச் சலியா தியற்றுந் தவமுகந்து
புனிதப் பொருளாம் பரமனருள் புரிந்து தவம்பூண் டவரொதிரே
யினிய வமுத மெனத்தோன்ற வெழுந்தா னென்று மிடரில்லான், (௪)

எழுந்து சிவனார் பொற்பதத்தி விறைஞ்சி யேத்தி யுளமுருகி
விழுந்து கண்ணீ ராறாக விம்மு முனியைக் கண்டுதவத்
தழுந்தா நின்ற தென்பெறுதற் கறையா யென்னச் சிவஞானக்
கொழுந்தா முனிவன் றன்னுளத்திற் கொண்ட குறிப்பை யுணர்த்திடுவான். (௫)

தில்லைக் கனக சபைதனிலே சிறந்தே நடித்த பதமதுகண்
டெல்லை யிகந்த வானந்த மெய்திக் களித்த பதஞ்சலியும்
வல்ல புலித்தாண் முனியுமென மகிழ்ந்தே கண்கள் களிகூர்ந்து
கல்வி யிடைக் கலைந்திடவே கடுகித் தவத்தை முயன்றனனால். (௬)

என்று முனிவ னியம்பிடுமு னிசைந்தா னியம்பாப் பாணர்க்கா
வன்று விறகு சுமந்துபாட் டழகாய்ப் பாடிப் பகைவென்ற
கொன்றைச் சடையா னவருள்ளங் குறித்த படியே கூத்தாட
நின்ற புலித்தோ லுடையிறுக்கி நீண்டசடையுந் திருத்தினனால். (௭)

வேறு.

கங்கை பொங்கியலை வீசி வீசியுறு கறைய லம்பிநில வொழுகிய
திங்க ளம்பிறைந டுங்க வாளரவு சீறி யாடவசரஞ்சர
மெங்குமாட முனிவோர்க ளோடுகண நாத ராடவிமை யோரொலாஞ்
செங்கை மாமலர்க ளேவியாடநட மாடி னார்சுடலை யாடினார். (௮)

முத்த ருள்ளமதின் முற்றியாடுவித முற்றி லும்பிறழ் மினென்னவே
பத்த னார்நடன மாடு கின்றதிரு வழகு கண்டுநிமை யாமலே
சித்த மும்விழியு மொக்க வேநிறுவி சித்தி ரப்படிவ மெனமுனே
நித்த னுகநிச பத்தி செய்தமுனி நின்ற னன்னிருவி கற்பமாய், (௯)

வேறு.

கண்ட கண்கள் களிப்பூறக் கருணைபுரிந்த வடிகளடித்
தண்டா மரைக டலைக்கணிந்து தணியா வின்பச் சலதிமடுத்
துண்டே னியானுங் கண்டிடவே யொருதா ணோக்கி நடனமிடு
மெண்டோண் முக்க ணெம்மானே யினியே தெனக்குக் குறையென்றான். (௰)

பாடா யென்பார் முன்பாகப் பாடப் பதைப்பாய் பரிவாக
ஆடா யென்பார் கண்காண வாடு வாய்பெண் பாற்றூதுக்
கோடா யென்பார்க் காவோடி யுறவாய்த் தூது முறைப்பாயாற்
பீடா ருந்த னருட்கவர்செய் பெற்றி யென்னோ பெருமானே. (௰௧)

அன்ப ருக்காய் மண்சுமந்தா யடியா ளிடும்பிட் டினையருந்தித்
துன்பந் துடைத்தா யென்முன்னுற்றொடர்ந்த காலன் றனைக்குமைத்தே
யின்ப மளித்தா யிப்போதுவெளியி னடித்துப் பதந்தந்தா
யுன்பே ரருளுக் கிணையாக வோகோ வொன்றுங் காணேனே. (௰௨)

என்ன முனிவன் றான்பரவ விப்பே ரின்பக் கடல்பருக
மன்னு மமர ரரனுறையு மாண்சேர் கோவிற் குடபாலிற்
றுன்னுங் கணையோர் நெட்டினுக்குட் டொட்டார் பொய்கை கரங்களினு
லன்ன தீர்த்த மதற்கன்றே யவர்தம் மகிமை யருள்செய்தார். (௰௩)

தேவ தீர்த்த மிதனுமஞ் சிறந்த கரதீர்த் தமுமிதுவே
யாவ தென்ன வமரரொலா மன்பா யரனை வலம்வந்து
போவ தானு லித்தலந்தான் புனிதன் கயிலைப் பொருப்பெனவும்
பாவமகற்று நம்பரமன் பாத மெனவும் பகர்ந்திடலாம். (௰௪)

தத்து மலையால் முத்தெறியுந் தண்ணந் துறையார் நதிப்புனலுஞ்
சித்தர் முதலா னோர்பரவுந் தில்லைத் தலமுந் தெளிவுற்ற
முத்த ரமலப் பொருளணுகி முயலு கின்ற திருவுளமும்
அத்தர் தவத்தோர் பூசையும்போ லவிரோ தங்கா ணித்தலமே. (௰௫)

பொன்னம் பலஞ்சீர் காழிகச்சி புனிதவெள்ளி யம்பலஞ்சீர்
கன்னற் கழனி வேய்க்காடு கனத்த விடபா சலம்வெண்கா
டன்னம் பயிலுமாலங்கா டையா றருணை வில்வவன
மின்ன லகற்றும் பரிதிவன மீரா றுகு நடனதலம். (௰௬)

சொல்லு மிந்த வீராறு தொல்லை நடனத்த லங்கடொறும்
வில்லின் மதியி லாதிரைநாள் விடியும் புலரிக் காலமதில்
அல்ல லகற்று நடேசர்பத மருச்சித் தேத்து மவர் பலனுக்
கெல்லை யுளதோ வநந்தனுந்தா னெடுத்துச் சொல்லுந் திறனுளதோ. (௰௭)

சித்தி யருளுங் கபிலர்முதற் சீரா மியோகப் புனிதர்களு
முத்தி யளிக்கு நாரதமா முனிவர் வியாதர் மார்க்கண்டர்
சித்த முவந்து தவம்புரியச் சிறந்த பரிதித் தலமிதனிற்
பத்தி புரிவோர் பெறும்பயனைப் பகர வேளிதோ பாரினிலே. (௰௮)

இந்தத் தலத்துக் கெல்லையது வியம்பி லைம்மா யோசனையாம்
பந்த மறுக்கு மித்தலத்திற் பயின்றே யிருக்குஞ் சராசரங்க
ளெந்தப் பொருளுஞ் சிவவடிவா மினிய தேவா ரப்பதிகஞ்
சந்தத் துடனே முதன்மூவர் சாற்றி யருள்பெற் றனரன்றே. (௰௯)

வில்லா மதியி னாதிரையில் விளையும் புலரிக் கால மதி
லெல்லார் பரிதி வனமதனி விலங்கு நடனம் பணிவோர்க
டொல்லை வினையின் றொடக்கறுத்துத் துலங்கு மின்பக் கடல்படிந்து
நல்லோ ராகி மார்க்கண்டர் நட்புற் றவராய் வாழ்வாரோ. (௨௰)

கன்னி மதியின் மதிவளரக் கடவ தான நவராத்திரி
யென்னுந்தி னங்கள் பரிதிவனத் திலங்கு முமையாட் கான்பாலுங்
கன்னலிர தந்தேனுடனே கலந்தே யபிடே கஞ்செய்தே
அன்னம்பிரச மதிரசமு மன்பாய் வடைநி வேதனமும். (௨௧)

செய்து வணங்கு மெய்யன்பர் சித்தி யெட்டும் வாணளு
மெய்திக் கல்விப் பொருளுடனே யெழிலார் செல்வப் பொருளார் வார்
தெய்வப் பரிதி பூசிக்குந் தினமா மேடச் சித்திரையிற்
றையல் பாகற் கன்பாகச் சார்ந்தே மகிழ்ந்து மனங்குவிந்து. (௨௨)

விதியா யபிடேகம்புரிந்து விளங்கும் பூசை விதமியற்றி
மதியார் முடியிற் சண்பகப்பூ வணிந்து பணிவோரொந்நாளும்
நிதியார் செல்வ மிகவெய்தி நிறைந்த வின்பக் கடறுளைந்து
மதியூர் மக்கட் பேறெய்தி மகிழ்ந்து வாழ்வார் நீடூழி. (௨௩)

துய்ய பரிதி வனமென்றுந் துலங்கும் வேதா ரணியமென்றும்
பொய்யி லச்சுவத்தவனப் பொதும்ப ரொன்றுஞ் சிவனருளா
லய்ய மகற்றும் பிரமவன மாகுமெனவீ ரிருநாம
மெய்ய தாகப் படைத்தவிந்த மேலாந் தலத்துக் கிணையுளதோ. (௨௪)

தலமா மிதனிற் பிறந்தோருஞ் சரிப்ப தோய்ந்தே யிறந்தோரு
மிலகா நின்ற பரிதீச ரிணைத்தாள் பணிந்த வியல்போரு
நலமார் நாவா லுரைத்தோரு நயந்தே யொருகா லுணர்ந்தோரு
மலமூன் றகற்றி வீடுறுவார் மதிசேர் சடையா னருள்பெற்றே. (௨௫)

அமரர் பரவித் தொழுதேத்து மமல பரிதீச் சுரர்கோவிற்
சிமயத் தூவி தனைக்கண்டோர் சென்மாந் திரத்தின் பாவமெலா
நிமையிற் றீப்பற் றியபஞ்சாய் நீறாய் விளியு மெனநூல்க
ளமையப் படிவ ரருளீதென் றறைந்தார் முன்னூ லறிந்தோரே. (௨௬)

அந்த ணாள ரொருவர்தமக் கந்தத் தலத்தி லமுதளித்தா
னந்தூர் கங்கை தனிற்கோடி நன்மா மறையோர்க் களித்ததுவாம்
புந்தி யுறவே பணவிடைபொன் பூசு ரர்க்கங் கீந்தவற்குச்
சிந்தின் றுறையி லொருகோடி செம்பொன் னளித்த பலனுறுமே. (௨௭)

மிக்க சிறிய வாவின்விதை மேதி னிதனிற் பொருந்தியிடிற்
றக்க பெரிய மரமாகித் தழைக்கு மதுபோற் பரிதிவனம்.
புக்கி யறம தியற்றிடினும் பொருந்தாத் தீமை செய்திடினுந்
திக்க தனைத்துஞ் சிறிதெனவே செறிந்தே யொன்று கோடியதாம் (௨௮)

சுவையார் நற்பாற் சுரப்பூறுஞ் சுரபி யொன்று பூசுரர்க்கு
நவைதீ ரந்தத் தலந்தனிலே நல்கி லுலகி லனைத்தினையுந்
தவறு தீய்ந்த பலனெய்துந் தனிமெய்ப் பொருளாம் பரிதீசர்க்
கெவையா கிலுங்கொண் டர்ச்சிப்போர்க் கிடமாங் கயிலைப் பதிதானே. (௨௯)

மீன மாதத்துத்திரத்தில் வேலற் கினிய பாலதனிற்
றேனு மினிய கனிரசமுஞ் செய்ய கரும்பி னறுஞ்சாறு
மானெய் யுடனே கூட்டியொன்று யபிடே கஞ்செய் திடிலென்று
மீனஞ் சேராப் பிணிசேரா தின்புற் றரச ரெனவாழ்வார். (௩௰)

சீரார் கும்பச் சிவநிசியிற் சேர்ந்த சாம நாலினுக்குஞ்
சாரு ரிடையார் வில்லுவஞ்செங் கமலஞ் சாதி வலம்புரிப்பூ
வாரார் கொங்கை யுமைபாக மருவும் பரிதீ சற்கிடுவோர்
தீராத் தொல்லை வினைதீர்ந்து சிவன தருளாற் சிறந்திடுவோர் (௩௧)

நன்மை தீமை யறம்பாவம் நாடிப் பகுக்க வறிவில்லாப்
புன்மை யுடையோர் வழியொழுகிப் போவார் போக விசையாமல்
மன்னிப் பரிதி வனத்தெல்லே மருவி யிரவொன் றிருந்திடினும்
பொன்னி னுலகை யாள்வாரோற் புகல்வ தெவனத் தலமகிமை. (உ௬)

ஆகச்சருக்கம் ச-க்கு கூடிய செய்யுள் ௱௰௬.

தலவிசேடச் சருக்கம்

முற்றிற்று.

# தீர்த்தவிசேடச்சருக்கம்.

சுருதியுரைத்தபடியுணர்ந்துசுத்தமனதாயரனடியில்
ஒருவா திருக்கு மன்புடனே யுள்ளங் குளிரக் கண்குளிரக்
கருதிப் பூசைபுரிந்துமிகக்களித்துநாளுமின்பமுறும்
பரிதிநேமத்தலமகிமைபகர்ந்தேதீர்த்தம்பகருவாம் (௧)

வினைகளகற்றத்தீர்த்தமதாய்விளங்குமறுபானறுகோடிப்
புனிதமதிதைப்பூசநாள்பொருந்துங்காலேபிரயாகை
தனிலேபடிந்துமம்மதியிற்சாரிரதசத்தமிப்பகலில்
இனியதிருவேணியிற்படிந்துமெய்துந்தூய்மையெனுநூலே (௨)

ஆடுகின்றோர்மாசனைத்துமகத்திற்கொள்ளுநதிமடவார்
தேடிவந்துதிரிவேணிசங்கந்தனிலேதிளைப்பதனாற்
கூடுகின்றபாவத்தாற்கொதித்துக்கங்கையவைநீக்க
ஏடுவிரியுமலரோன்பாலெய்தியிறைஞ்சிமுறையிடலும் (௩)

மலரோன்கங்கைதனைநோக்கிமகிழ்ந்துபரிதிவனந்தனிலே
இலகும்பரன்சந்நிதிமுன்னரிருக்குஞ்சூரியபுட்கரிணி
மலமதகற்றத்தக்கததின்மருவியுனதுமாசகற்றி
நலமதுறுவாயெனவெந்தநாள்யான்சேரவெனநவில்வான் (௪)

கடகந்தனிலே தேவகுரு கலந்தேவரு மோராண் டளவுங்
கடகக்கரத்தாய்நீயந்தக்கமழ்பூம்பொய்கைகலந்துவந்தித்
தடருமுனதுமாசனைத்துமகற்றியுறையுநிலைக்கெய்தி
யிடரைத்தவிர்ப்பான்வந்தடுத்தோரோதம்பலவுந்தீர்ப்பையென (௫)

அயனுரைத்தமொழிப்படியேயமலமானசுரநதியும்
வியவாவீராறுண்டளவுமிடன்றூன்றீர்ந்துகுருகடகம்
நயவா நிற்குமோ ராண்டுநண்பாய்ப் பரிதிபுட்கரிணிப்
பயனார்தீர்த்தம்படிந்திருந்துபாவமகற்றும்பரிசுற்றாள் (௬)

ஆண்டொன்றமலேபடிந்திருக்குமந்நாடனிலேதேவதவம்
பூண்டமுனிவர்சித்தர்முதற்புனிதயோகுபுரிந்திடுவோர்
ஈண்டிப்பரிதிபுட்கரிணியெய்திப்பணிந்துகுங்குமத்தால்
வேண்டிக்கங்கை யாயிரம் பேர்விளம்பி யருச்சித்திறைஞ் சிடுவார். (௭)

கங்கைதானோ ராண்டாடிக் கனமாச கற்றிப் புனிதமுறுங்
துங்கவ மலபுட்கரிணி தோய்ந்தோர் பலனை யென்சொல்வாந்
திங்க ளிரவி யொன்றாகச் சேருங்கால முவாமதிநாள்
பங்கமறவே நடுப்பகலிற் பரிவாய்ப்படிவார் பலனுறுவார். (௮)

கதிரோன் கும்பமுறுமதியிற் கலைசேர் பருவமக நாளில்
விதியாய்ப் பரிதிபுட்கரிணி விரை நீராடு பவர்கருணை
நிதியாஞ் சிவசங்கரரருளை நீங்காரவர் தம்பிதிர்க் களெலாம்
பதியாய்ச் சுவர்க்கமதையாளும் பரிசுற்றின் பம்பருகுவரால். (௯)

கங்குலதனில் வெண்டுகில் மேற்கண் கடுயின்று வெண்ணெயொடு
ங்கந் தவிர்த்துத் தூயவனந் தானுண்டொழுக்க மாயொழுகித்
திங்கண்முழுது மாகமதிற் செய்ய பரிதித் தடமூழ்கிற்
பங்கமகன்று மகப்பெறுவர் பரமனரு ளின்படி நிசமே. (௰)

மாகமதி முப்பது நாளு மகவை விரும்பிக் கதிர்த்தடத்தி
லெக மதியாய் நீராடி யிறைவன் பதங்க ளிறைஞ்சிடுவா
ராகங் குளிரச் சொற்பனத்தி லரனர் கனிகளலது மலர்ப்
பாகமுறவே தரச்சேய்கள் பலிக்குஞ் சொன்னேன் சத்தியமே. (௰௧)

ஆனே டவனி யெண்ணெ துயிலக் காரந் நெல்லுப்புடனே
வானோர் கனக மிரசதமு மறைகூர்தச தானமதாகுந்
தானே யிதற்குப் பிரமாணஞ் சாற்று மூவர்க் கமுதீயுந்
தேனே மூவர்க் கோராண்டு செழிக்க வுணவீ வதுவவனி. (௰௨)

வள்ள நான்காந் திலநெய்தான் வள்ளமொன்று தூசிரண்டு
தெள்ளிதான வக்காரஞ் சேர்தானெட்டு நெல்லுப்பு
கள்ளமில்லா மூவாறு காணும் வள்ளக்கணக்காகு
மொள்ளிதாம் பொன்னிரண் டாயா மொளிசேர் வெள்ளி முக்களஞ்சு. (௰௩)

இயம்பு மிந்தத் தசதான மெழிலார் பரிதித் தலத்தீர்த்தக்
கயங்க ளிரண்டிற் புரிந்துபெருங் கருணை நிதியாய் விளங்குகின்ற
சுயம்பைப் பரவி யருச்சித்தோர் சுகமா யிருமைப் பலனெய்தி
நயம்பூண் டிடுவ ரவர்பிதிர்க் கணளினத் தயனர் பயனுறுவார். (௰௪)

குருதி வாரங் கடைப்பூரங் கொண்ட நாளுங் கூடிடுங்காற்
பரிதிவனத்துப் பொய்கைகளிற் படிவார் பாவம் பறக்குமென
லுரிமையாகு மிதுவன்றி யொளியு முமைக்குஞ் சங்கரர்க்கும்
மருவார் மலர்க ளணிவிப்பார் மருவி வாழ்வார் சிவபதமே. (௰௫)

ஆடித்திங்க ளமாவாசை யந்தத் தலத்திலிரு தீர்த்த
மாடித் தருப்பணஞ்செய் யிலமலமாவர் பிதிர்க்களெலாங்
கோடி ஸ்தானந் திருவேணி கூடுமிடத்திற் செய்ததுவா
நாடி யிரவி மதியதனை நாகந் தொடரு நாளதிலே. (௰௬)

தேவ தீர்த்தமதிலாடித் திலதர்ப்பணங்க ளியற்றியபின்
பாவமகற்று புஷ்கரிணி படிந்தே தானுதிகள் பண்ணி
மேவிச் சிவபெம்மா னடியைவிரும்பித் தெர்மூவார் மரபனைத்துந்
தேவ ராவா ரெனவுரைப்பர் தெளிந்த நூல்க டெரிந்தோரே. (௰௭)

கரதீர்த்தத்திற் பிதிர்க்குள்ள கரும முடித்துப் பரிதிபுரி
வரதீர்த்தத்தி னீராடி மணித்தென்கரையி னரசடியிற்
குரவர்க்கினிய தர்ப்பனங்கள் கொடுப்போர் பிதிர்கள் பொருந்தலர்தம்
புரமெரித்த சிவன்பதத்திற் புகுவாரென்று புகல்வாரே. (௰௮)

மாகத்திங்க ளிருதீர்த்த மகிழ்ந்தே யுதயாதியிலாடி
யேகப் பொருளாம் பரிதீசரிணைத்தாள் பரவ விசைவோர்கள்
போகந் துய்த்து நற்புதல்வர்ப் பொருந்தப் பெறுவா ரொந்நாளும்
ஆகமகிழச் சிவனடிய ராவரிதற் கோரைய மின்றே. (௰௯)

கும்பமதியி னமாவாசைக் குளிர்நீராடக் கரதீர்த்த
மிம்பரதனின் முக்கியமா மிதனிற் படிந்தோர் தங்கள்குலம்
பம்பும் பிதிர்க்க ளனைவோரும் பாபமகன்று பரிசினரா
யும்ப ரிறைஞ்ச வான்பதியி லுறைவாரது விட்டொழியாரே. (௨௰)

மீனமதியின் பருவமதில் மிக்கவுச்சிப் பகலதனில்
வான விரவித் தடம்படிந்தோர் மகவானுத னிச்சயமா
மூனமில்லாத் திலமதனை யொளிருஞ் செப்புக்கலத்திலிட்டுத்
தானஞ்செய்வோர் புவிமுழுதுந் தானஞ் செய்த பலனடைவார். (௨௧

அந்தமதியி லமாவாசையான பகலிலப்பதியி
னந்தூர் தடங்க ணீராடி நலமா வெள்ளி யீவோர்கள்
சொந்தமான பிதிர்க்க ளெல்லாந் தொலையா விருபத்தெண்கோடி
பந்த நரகம் விடுபெட்டுப் பாங்கா யயன்றன் பாலுறைவார். (உஉ)

ஆதித்தன் றன்றீர்த்த மதினருகாய் விரிபிப் பிலத்தடியிற்
பாதியணுவி னளவெனினும் பரிந்தேதேனு மீயிலது
சோதிக்கனக வரையளவாய்த் தோன்றுஞ் சிவனுக் கற்புதமாய்க்
கோதில் பிதிர்க்க ளின்புடனே குறை வற்றென்று மகிழ்வாரே. (உங)

சாடிமதியி லத்தடத்திற் சாரு மரசினடிதனிலே
தேடியொரு பூசுரனுக்குத் தெவிட்ட வன்ன மளிக்கிலது
கோடி மறையோர்க் கமுதளித்த குணமாய்ப் பிதிர்க்கள் சுவர்க்கத்தி
லாடிப்பாடி யானந்த மடையச்செய்யு மெந்நாளும். (உச

எள்ளைச் செப்புக் கலன்றனிலே யிட்டத்தலத்தி லியல்பாகக்
கொள்ள மறையோர் தனக்களிக்கிற் கொடுத்தோரந்த வெட்கணித
முள்ளதாகு மாண்டளவு மும்பர் பரவச் சிவனுலகிற்
றெள்ளிதாக வாழ்வரெனச் செப்புவார் நூறெறிந்தோரே. (உரு)

கோதானந் தான்கன்றுடனே குளிர் புஷ்கரிணி யரசடியில்
வேதாதி கடேரந்தணர்க்கு விளங்கச் செய்யினப் பசுவின்
மீதாருரோம மொன்றினுக்கு மிகுநூறுண்டாமளவு சிவன்
பாதாம்புயத்தி னருகாகப் பதிந்துவாழும் பயனுறுவார். (உசு)

பூமிதானம்பரிதிவனப் புனித தீர்த்தக் கரைதனிலே
நேமமாக விருந்தளிப்போர்நிகரிலன்னோர்நிலந்தனிலே
சேமப் பைங்கூ ழுழிதொறுஞ் செழிக்குமதுநே ராண்டெல்லாஞ்
சோமப் பிறைசேர் செஞ்சடிலன் தொல்லைப் பதத்திற் சுகமுறுவார். (உஎ)

ஈராறுன மதிசெலவங் கிருந்தே யிருதீர்த்தமு மாடிச்
சீரார் பரிதிவனநாதர் திருத்தாள் போற்றி யம்பிகையின்
ஏரார் கமலப் பதங்கள் பணிந்திருபோதுஞ் செய்யபிடேக
நீரார்ந் திருப்போர் வினைப்பிணிக ணீங்கிமகிழ்ந்து நிலைபெறுவார். (உஅ)

செய்ய பரிதித் தலந்தனையுந் தீர்த்தமிரண்டின் சீர்தனையு
மய்யமகிலத் தியானித்தே யடவாக்கிடைத்த தெதுவேனும்
வெய்யவெந்த விடத்திருந்தும் விரும்பிக்கொடுத்தோ ரந்தியத்திற்
றுய்யநமது பதமடைவா ரென்றார் சுயம்பாஞ் சுந்தரமே. (உகூ)

இரவிதீர்த்தத் தடமதனை யிரவதன்றி யெய்திடுவோர்
சிரமே முதலாய் முண்டனமுஞ் செய்து திலதர்ப்பணஞ் செய்து
பரமென்றே சேத்திர பிண்டம் பாலிப்போர்க ளப்பிண்டத்
தொருவன்னத்துக் கூழியொன்று யுறைவார் பிதிர்க்களுடனினிதே. (ஙυ)

பகலோன் பரவுஞ் சுயம்பினுட பரிசும்பரிதி புஷ்கரிணித்
தகவா மகிமை களுமெடுத்துச் சாற்ற யென்னிற் றபனனுநற்
சுகமார் கங்கை யெனுமாதுஞ் சொல்லவறியோ மெனிலிந்தச்
சகமீதுற்றோ ரறிந்திதனை சாற்றவடங்குந் தகுதியதோ. (ஙக)

காட்சியாக வெதிர்தோன்றுங் கடவுளாகுங்கதிரவனே
சூட்சியாகப் பூசைபுரி சுயம்பு சுடரு மார்க்கண்டர்
ஆட்சியாகத் தவம்புரியு மமல தலமுங் கங்கைபடி
மாட்சித் தடமு மன்னுமெனின் மகிமையுரைக்க வரம்புறுமோ. (ஙஉ)

எள்ளுந் தீயர்தீர்த்தத்தா லீடேறுவமொன்பது வன்றி
உள்ளுந் தீர்த்த மகிமைகளை யுரைப்போருரைப்பக் கேட்டகங்கப்
புள்ளு நல்ல கதியதனைப் பொருந்திற் றென்முற் பொய்கை நலம்
விள்ள வெமக்கிங் கெளிதாமோ விளங்குங் கேள்விச் சவுனகரோ. (ருரு)

ஆகச்சருக்கம் ரு-க்கு செய்யுள் ௱௬௰௪

---

முற்றிற்று.

# சேனத்தின் பாவந்தீர்த்த சருக்கம்.

சீவராசியின்கண்ணெனுஞ்செங்கதிர்ப்பரிதி
யாவலாகவேதொட்டதோர்தீர்த்தத்திலுடைவும்
தேவதீர்த்தத்தின்மகிமையுஞ்செப்பினேஞ்சேனம்
பாவந்தீர்ந்துநற்பதமுற்றபரிசதுபகர்வாம் (௧)

இனியநல்லமுதென்னநீர்வாய்மலர்ந்தசைத்த
புனிததீர்த்தத்தின்மகிமையாற்பொருந்தினமின்பம்
குனியுந்துண்டத்துச்சேனமும்பலனுற்றகொள்கை
கனியவோதெனச்சூதனுங்கழறலுற்றனனால் (௨)

புண்ணியங்களெல்லாமொருபடிவமாய்ப்பொலிந்து
நண்ணிவாழ்கின்றவாரியாவர்த்தனநாட்டில்
தண்ணிலா மதிதவழ் தருமாட கூடங்கள்
எண்ணிலாத் தருமா வரமெ னவுண்டோர கரம் (௩)

தரும மாவரமெனு மகரந்தனிற் சார்வோன்
பிரம சர்ம்மனென் றியாவரும் விளித்திடும் பெயரோன்
அருமறைக் குலநான்குடனங் கங்களாறும்
தெரியுங் கல்வியுங் கேள்வியுந் தெளிவுறுந் திறலோன் (௪)

நித்தியம்புரி நியமங்கள் வழுவுறா நெறியாஞ்
சுத்த மாகிய வொழுக்கமே வுயிரெனச் சூழ்ந்து
கொத்தலர்க் கொடுநம் பனைக்குறையறக் குறித்துப்
பத்தியாகவே பூசனை புரிந்திடும் பரிசோன் (௫)

மகத் தெழுந்தழன் மூன்றையும் வளர்த்திடும் வளத்தோன்
அகத்தின் மன்னுயிர் தன்னுயிர் போலேணு மளியோன்
சகத்தி லொப்புர வாற்றலிற் றன்னையும் விற்று
மிகுத்திடும் புகழ்விரும்புவோன் தீமையைவீப்போன் (௬)

தவஞ்செயுந் திருவாச் சிரமமுடை யவர்தமக்குக்
குவிந்தவன் புடனுறா யெனக்காக்கு நற்குணமும்
பவங்கடந்த விச்சையுந் தனிற்படரு நல்விருந்துக்
குவந்து போனக மூட்டிடு முறைமையு முள்ளோன். (௭)

தேவர்தென்பு லத்தவ ரொக்கலுறன் விருந்தைவர்க்
காவதாகவே யீட்டிய நிதியினை யளிப்போன்
பாவரும் பொருட்சுவை யெனவினி யவை பகரும்
நாவனுகியே சினத்தினைச் சினந்திடு நலத்தோன். (௮)

ஏதிலார் மடவார்களைத் தாயென வெண்ணும்
போதமே யறமாமென மதித்து நற்பொறுமை
தீதிலென்னவும் பிறன் பொருடீ விடமெனவும்
கோதி னற்குணங்கொண்டு சிற்றினங்களைக் குறுகான் (௯)

சாத னீங்கிடு மென்னினுஞ் சத்தியந் தவறுன்
காதலா னெறி பிழைத்திலாக் காமனென் றெவரும்
ஓது றுந்திரு வழகுடையவ னொளிதேயாச்
சீதமாமதி யெனமுக மிலங்கெழில் சிறந்தோன். (௰)

ஆய பூசுரக்காளைதான்வேட்டதோரரிவை
தூயதன்மையும் பதியுளக் குறிப்பினைத் தொடரு
நேயமோ டெதிர் மொழிதர நினைகிலா நிலையும்
ஆயுமேல வருந்ததி யிவளென வறைவார். (௰௧)

நாணு மச்சமும் மடமையும் பயிர்ப்பு மெந்நாளும்
பூணும் பூணெனப் பூண்பவள் புத்தமுதமுநல்
வேணும் வீணையும் வெட்கிடு மொழியுளாள் வேட்டோன்
காணவும் முளங்கூசுவள் கமலையை யனையாள். (௰௨)

பச்சை மாமயிற் சாயலள் பதிபருகினவம்
மிச்சி லல்லது வேறொன்று மிசை விருப்பில்லாள்
நச்சு மாரமுத முமெனும் விழியிணு ணல்ல
கச்சுற்றே யெழுகரி மருப்பாங் கனதனத்தாள். (௰௩)

கலைநிரம்பிய முழுமதி தன்னையுங் கனக
மலையிரண்டையுந் தாங்கியோர் மழைமுகி லெழுமின்
நிலைகலங்கியே நிலத்தினி னிகழுவ தெனவுங்
குலவு பொற்கொடி சுசீலை யென்றே பெயர்கொண்டாள். (௰௪)

நல்லறஞ் செயும்பிரம சர்ம்மாவு நங்கையுஞ்சேர்ந்
தில்லறம் வழுவின்றியேயியல் புடனியற்றி
எல்லையில் லினிதின்ப மீதூறிட வெவருஞ்
சொல்லியே புகழ்விரித்திடச் சுகித்தினி திருந்தார். (௰௫)

பஞ்சபாணனு மிரதியு மென்னவே பரிவாய்
அஞ்சுகத்தினை மொழிபயிலரிவை யுமழகார்
கஞ்ச நாண்மலர் மார்பனுங் கருத்துறக் கலந்து
நெஞ்சமின்புறப் புணர்ந்து வாழ்ந்திருந் தனர்நிதமும். (௰௬)

குணங்ணன் குறவாழ் பவர்பதிக்குத் தென் குடபால்
இணங்கவே யிரண்டியோசனை நீளிடை யிலகும்
பணங்கொணுக கங்கணர் விழாப்பாதாள புரத்தில்
இணங்கு நாளுணர்ந்தான் மதவேளெனுமெழிலான். (௰௭)

உள்ளமானது களிப்புறவுமை யொருபால்சேர்
கள்ளரு மலரிதழியந் தாரற்குக் கணித்து
விள்ளொணுவிழா நடப்பது கண்டின்ப வெள்ளங்
கொள்ள வந்தணன் மனைவியோ டேகினன் குறித்தே. (௰௮)

பாதங் கன்றிட நடந்து பாதாள வீச்சுரர்தஞ்
சீதபங்கயக் கழலிணைமுடியுறச்சேர்த்தி
ஓதரும் விழாவுவந்து கண்டின்ப மீதூறும்
போதிற்பாற் கரன்று களறக் குடகடல் புக்கான். (௰௯)

நம்மையின் புறவுயர்த்திச் செஞ்சடையிட நல்கும்
அம்மையப்பனு மரன்விழாக் காண்ப லென்றழகு
செம்மையா யொளிதிகழ் தரச்சீதளக் கதிரோன்
தம்மைத் தானுணர் ஞானியருள மெனச் சார்ந்தான். (௨௰)

மருவுகின்ற விச்சாரசர் மதியணிந் தோன்றன்
உருவதாமென வுணர்த்தல் போலொளி நிலா வென்னுந்
திருவெண்ணீற்றினை யணிவித்துத் திகழ்ந்திடு சோதிப்
பொருவிறண் மதியெழுந்தது புணரியின் முகட்டில். (௧௨)

வேறு.

அண்டர் நாயக ஞமமலனைப் பூசையன் புடனியற்றியே மகிழும்
தொண்டர் தம்புகழ் போற் பரந்த வெண்ணிலவிற்ருேகையும் பிரமசர்ம்மாவும்
கெண்டை யங்கண் ணாடலும் விநோதக் கிளர்ச்சியுங் கண்களி கூறக்
கண்டபின் கோயின் மண்டபந்தனிலே கண்டுயில் கொளவிசைந் தனரால் ( )

துயில்கொள விசைந்தோ னம்புலி யாலுந் துயல்வரு தென்றலினுலும்
அயலுறு மலருமான் மதச்சாந்து மதிகவாசந் தரலாலும்
மயலுறு விடர்கண் மதன வாகமத்தின் வகுத்த வாலிங்கனம் பாடும்
செயலினுலுந் தன்மாதினைப் புணரச் சிந்தையின் மோகமதுற்ருன். (உகூ)

உற்றதோர் மோகந் தனையறிவதனு லொதுக்கிய செயலுணர்ந் துடல
தற்றவன் வெகுண்டே யெனைமுனுள் வென்ற வரன்சிலை யிறுத்தன னுமைதாள்
பற்றிய வரன்றன் கரத்தி னலம்மி பதித்திடச் செய்த வென்றன்னை
வெற்றி கொண்டிட வீவ்வையனே வென்னுவில் லினைவளைத் தெதிர் நின்ருன்.

நின்ற வேள லரம்பெய்யவு மறையோ னிலைகுலைந் தறிவது மிகவுங்
கன்றிமெய் மயங்கமோக சன்னத மாங்காரிருண் மூடிட வரிவை
குன்றென மீறுங் குயந்தனைத் தழுவக் கோதைதன் னுளமது கூசி
இன்றுநங் கொழுநற் கிசைந்தவிம் மோக வேதுவே தெனவினி துணர்வாள்.( )

தூம மதியங்கு மிடத்தி னிலங்கி சுடர்கின்ற தென விவ்வாலயத்துள்
காமமே விளைத லனர்த்தத்துக் கேது காட்டிடுமென் றறிந்தாலுஞ்
சோமனை நிகர்க்கும் பதியுள வேட்கைச் சூழ்ச்சியை மறுத்திட லவனைச்
சாமுரண் புரியும் பாதகமெனலாற் றடுத்திலே னெனக் கருதினளால். (உசு)

சங்கரன் கோயி றனிற்பிழை செய்த தரத்தின லெய்திடும் பாவம்
எங்களுக் குறினு முறவென்றன் பதிகொ ளிச்சையைத் தடுக்கிலேனென்று
மங்கையும் வாளா விருந்தனளவனு மருவியே யிதழமுதருந்திப்
பொங்கிய மோகந் தணிந்தபின் னுணர்வு போந்தவன் புலம்புவன் மாதோ. உஎ

தேவரொல் லோரும் பணிதலாற் சிவந்த செய்யதாட் டேவ தேவனுமாய்
மூவரா யொன்ரு முதல்வன்றன் கோவின் முன்றி லிலரும் பிழையதனை
ஆவலா யியற்றும் புலையன்யா னுய்யு மாறு முண்டோ வெனவயர்ந்து
பூவரு மய னெப்பாகிய மறையோன் புலம்பு கொண்டன னுணர்வுற்றே.(உஅ)

உண்டவர் தம்மை மயக்கிடுங்கள்ளி னூக்கமோர் கோடிக்கு மேலாய்க்
கண்டவர் கேட்டோர் நினைந்தவர் தமையுங் காதலாங் கடலிடுங் காமம்
அண்டர்கண் முனிவர் தமையுணர் ஞான மடைந்தவர் முதலெவர்களையுந்
தெண்டிரைத் துரும்பாய்ச் சூறைவாய்ப் பஞ்சாய்ச்செய்வதற்கையமுமுளதோ.

இந்திரன் பண்டோ ரரிவையின் மோக மெய்திய தாலியை பிழையுஞ்
சந்திர னடைந்த பழியுமா முனிவர் தவமிழந் திழிவுறு தரமும்
சிந்தையி லுணர்ந்துந் தெரியாமை யதனுற் றீவினை யிழைத்த னென் சிறியேன்
எந்தவா றுய்வே னெனப்பதை பதைப்போ டேங்குவா னுடலிளைத்திடுவான்.( )

உத்த மதலங் கடமிலற மேனுமுறு கணைத்தருங் கொடிதேனும்
நத்தியே சிறிது புரிந்திடின் மேருநாகத்துக் கிணையதாமென்று
முத்தர்க ளுரைத்த நூல்வழியறிந்து முப்புர தகனர் முன்றிலினில்
இத்திரம் வெய்ய பிழையிழைத்திட்டே னெவ்வகை யுய்வனென் றேங்கும்.()

உணர்விலா வொருவன் செய்பிழை யதனை யுத்தமர் பொறுத்தருள் புரிவார்
தணிவிலா நூல்க ளளப்பிலவாய்ந்துஞ்சங்கரன் கோவிலி லியான்செய்
துணிவுறு பிழைக்கு முய்வகை யுளதோ தொடர்ந்தவித்தீமையதகற்றப்
பணியணி யணிந்த பரமனையல்லாற் பரமிலே னெனமனம் பதைப்பான். (௩௨)

சுழலுறு மனத்தோ டவன்பதிக்கேகித் துன்பொடு சிலபகல் கழிய
அழகுறு மடவா ளாக்கையை நீத்த வாவியை நடுவறி நிலையோர்
உழலுறு காம மூறிய கணவ னும்பர்நாயகன் றனுல யத்திற்
பிழைசெயா வண்ணந் தடுத்திடா திருந்த பெருந்தவ றுடையளிப்பேதை. (௩௩)

காதல னிச்சை மறுத்திடா தொழுகல் காரிகைக் கறமதே யெனினுங்
கோதுறு கள்ளுண் டுணர்வழி வுற்றோன் கொடியதீ விழிற்றடுப்பதுவுந்
தீதுசே ரிருட்கண் ணுடையவன் கூவத் திடைவிழல் விலக்கலுஞ் சிதைவோ
ஆதலான் மயலுற்றறி விழந்தோனை யாலயங் கடத்துத லழகே. (௩௪)

ஆலயந் தனைவிட் டகற்றிடாப் பிழையா லரிவையோ ரஞ்சுகமாவாள்
சீலமாய்க் கற்பைக் காத்ததனாலே தெரிவுறு பூருவ ஞானம்
ஏலுமென் றுரைப்பத் தத்தையாய் மாதுவுரோமச மாமுனி தவஞ்செய்
சாலையின் மரப்பொந் துறைந்துமே தனியாய்ச் சஞ்சரித்தது சிலபகலே. (௩௫)

மற்றவம் மறையோ னுடலினை நீத்து மறுவிலாக் கற்புடை மனையைப்
பெற்றவர்க்கில்லை நரகென வுரைக்கும் பெற்றியாற் சேனமதாகிக்
குற்றமா மூனுக் கிராப்பகலலைந்து குறுகினன் கிருதமா விகைப்பேர்
நற்றவ நதிமாட் டுரோமசர் நிட்டை நடாத்திய சாலையை நாடி. (௩௬)

வந்தவச் சேன மரவிட ருறையு மடச்சுகப் பேட்டினைக் கண்டே
இந்தவெம் பசிக்கீதே யிரையென்ன வெண்ணியே வெளியுறல் நாடிச்
சந்தத மிருப்பக் கிள்ளையும் வெளியிற்சஞ்சரிப்பதை யொழிந்திடலும்
முந்தவே சேனந் தத்தையை நோக்கி மொழிந்தது புள்ளுரையதனால். (௩௭)

தத்தையே யுனையுண்டென்றனை வாட்டுந் தளர்வுறு பசியினைத் தவிர்ப்பான்
சித்தமது வந்தேன் வெளியுறுக் கரவாய்ச் சேருமிவ் விடவினுக் குள்ளாய்
எத்தனைகால முறைவையென்றுரைக்க வென்னுயிர்க் கஞ்சினே னன்று
நித்தமாய் வெய்ய நரகுனக் கடையா நெறிநினைந் திங்குற்றே னெனலும் (௩௮)

இது வியப்பாகு நீயெனக் கிரங்க லென்றிடுஞ் சேனமதறிய
விதுமுக மாதாங் கிள்ளைமுன் னுற்ற விதமெலா ஞானத்தால் விளம்பி
நதியணி பரமன் கோவிலிற் பிழைத்து நண்பநீ சேனமதானாய்
கதிதரு மிந்த முனியெதி ரெனைநீ காதிடில் நரகு காண்குவையால். (௩௯)

ஆதலா லிரங்கிக் கரந்தன னெனுஞ்சொல் லருளுடை முனிவர னறிந்து
சீதபங்கயமாங் கிருபைசேர் நோக்கஞ் சேனத்தின் மீதுறச் செய்ய
வேதனை யொழிந்த சேனமு முன்னாள் விளைவெலா ஞானத்தா லுணர்ந்து
பாதமென் போதிற் பணிந்தெனக்குசித பதமருள்வா யெனப்பகரும். (௪௰)

பால நேத்திர மார்பரம்பொருள் வதியும் பதியதாங் கோவிலிற் பிழைதான்
சாலவே யியற்றிப் புலைத்தொழி லுடையேன் சார்ந்தன னிவ்வுருவிந்தக்
கோலமதொழிந்து நற்பதம் பெறவே கூறுவா யருண்மொழி யென்னக்
காலனைக் கடிந்தோற் கிணையதா முனியுங் கருணையாற் கழறலுற்றனால். (௪௧)

பாயிருள் பருகும்பரிதி முன்பூசை பரிவுடனி யற்றியே பணிந்த
தூயநற்றலமொன்றுண்டதினாலுன் றுடக்கறு மென்றிடக்கங்கம்
ஆயவத்தலமியானறிந்திடவடிகளருள் புரிந்தாளுக வென்ன
நீயுநின்மனையாந்தத்தையு மவாசி நெறிபடர்ந்தேகிடல் வேண்டும் (௪௨)

ஏகிடும் போழ்து பலநதித் திரள்க ளெதிரினுமது கடந்திடிற்பின்
சேகுறு மகிலு மாரமுமுருந்து செறிமயிற் பீலியும் பொன்னும்
நாகநன்மணியு மதமலைக்கோடு நளிரலைக்கரங்களால் வீசி
வேகமாய்ப்பெருகுங் காவிரியென்றோர் மெய்த்தவநதி புலப்படுமால் (௪௩)

காவிரி நதிசூழ் சோழநன் ஞட்டிற் கண்ணுதற லம்பலவவற்றுண்
மேவினேர் கயிலை மேலுறச்செய்து விளங்குமை யாறதன்றெற்குத்
ஓவிலை ங்கடிகைதஞ்சைமாநகர மொளிர்தருமுதற்குத்தென்கீழ்பால்
நாவலர் புகலுமி யோசனை யொன்றி ருடலாம் பரிதிகேச்சுரமே (சச)

அத்தல மதுதான் பரிதிபூசனைக்காயருளுடன்வரங்கடந்தாண்ட
நித்தனர் க்கிடமாங் கங்கையும் பாவநீங்குறப் படுவதாந்தீர்த்தம்
புத்தமுத த்தைப்பொருவ தாமிரண்டின் புனித நற்கரை யினில்வேத
வித்தகர் புராணம் விளம்புவர் கேட்கில் வியப்புறு மேன்பதந்தரு மால் (சரு)

குடமதி யதனிற் சிவநிசிநன்ஞட் குன்றினை வில்லதாய்வளைத்தோன்
றிடமுறு விளையாட் டோதிடும் புராணஞ் செப்புவர் பூசுரர்தேவ
தடமதின் றென்பாலர சடியதனிற் சார்ந்து நீயொருமனதாகிக்
கடிகைதா னென்று கேட்கினு மேலாங்கதி யுறுமை யமதின்றே (சசு)

ஆதலா னீங்க ளத்தல மடைத லழகென விடைகொடுத்தருளப்
பாதக மகற்ற வவ்விரு புள்ளும் பணிந்துமே கௌமதிதீரந்
தீதறு கிருதமா லாநதி விட்டுத் தென்றிசை பறந்துமும் மதியிற்
காதலாய்ப் பரிதி கேச்சுரங் கண்டு களித்தன சீவன்முத் தரைப்போல் (சஎ)

பரிதியி னுதயம் பார்த்து நற்சேனம் பசுங்கிளி யோடெழுந் தரிய
சுருதி நாயகனை வலமதாய்ப் பறந்துசூரிய புட்கரிணியைத் தொழுது
பெருகிய தேவதீர்த்தத் தென்கரையிற் பேசிடுந் தலப்புராணத்தை
உரிமையா யரசினுயர் சினைக்கணிருந் துணர்ந்தது சிவநிசி நாளில் (சஅ)

அய்யரங் குரைத்த தலப்புரா ணத்தை யறிதரு சேனமுஞ் சுகமும்
வெய்யவ னெனவே திவ்விய தேக மேவியே களிப்பொடு தேவத்
துய்யதோர் விமான மேவியங் கரனைத் துதித்துமே லுலக முற்றதுதான்
ஐயமின் றென்னி லத்தலமகிமை யறைவதற் கெளியதோ வரிதே. (சகூ)

ஆ சருக்கம் கூ-க்கு கூடிய செய்யுள் ௱கூ0

சேனத்தின் பாவந்தீர்த்த சருக்கம்

முற்றிற்று.

# சிவிச்சக்ரவர்த்திபூசித்தசருக்கம்.

வேதியன் சேனமான விபரமும் பரிதி போற்றுஞ்
சோதியா ரருளினலே தொடக்கற வின்ப முற்ற
தோதின மயோத்தி யாளு மோங்குசீர்ச் சிவியா மன்னன்
நாதனைக் கண்டு பூசை நடாத்திய திறமுரைப்பாம். (க)

அண்டமு மாக்கு கின்ற வயன்முதற் றேவர் யாரும்
கண்டிடற் கரும்வை குந்தக் கார்வண்ணன் புரக்க வாசை
கொண்டிட வரங்க ளோங்கிக் குலவுசி ரயோத்தி யாளுந்
திண்டிறற் செங்கோல் வேந்தன் சிவியென்பான் சீர்த்தி மிக்கான். (உ)

பொங்கலை வாரி சூழும் புவிப்பொது வகற்றி யொன்னர்
தங்களை வென்று வெற்றி தரித்தவே ருங்கி மன்னர்
சிங்கவே றென்னச் செங்கோல் செலுத்தியே நேமிகைக்கொண்
டிங்கண்மா ஞால மெல்லா மாண்டன னரசர் போற்ற (ரு

மாசறு பரிதி தேவன் மரபினுக் கணியாய்த் தோன்றித்
தேசொடு வளர்வோ னீதிசெப்பிய மனுநூ லாரரயந்
தீசற்கு மிச்சு வாகா லெய்திய வரங்க ளுக்கும்
பூசனை புரியும் பெற்றி பூண்டவ ன்புனித மன்னன் (௪)

காணுதற் கெளியன் யாதுங் கடுஞ்சொல் லொன்றில்லா னின்சொற்
பூணுறு பணியன் குற்றம் பொறுப்பதிற் பூமிமாது
நாணிடு பொறையன் மிக்கோர் நட்பிறு விடிக்குஞ் சொல்லைப்
பேணிமற் றேரை யாளும் பெற்றியி லுவகை யுள்ளோன் (௫)

உவகையின் மிகுதியாற் சோர் வுற்றிடான் பிறர்தங் குற்றம்
அவமெனக் கடிந்து தன்னை யடுத்திடுங் குற்றங் காண்பான்
தவறிலானீதி தன்னிற் சாய்ந்திடா னுளத்தெப் போதும்
பவமறு முயற்சி யுள்ளிப் பரமனைப் பத்தி செய்வான் (௬)

தீதறு கல்வி கேள்வித் திறநிறைந் தொழுகி யார்க்கும்
ஏதம துறுமற் காப்போ னிறையிரு மூன்றி லொன்று
நீதியாய்க் கொள்வோன் வேத நிலைதவ றினுந்தன் னுவால்
ஓதிய சொற்ற வாத வுறுதியான் வாய்மை பூண்டோன் (௭)

தேசிக வசிட்டர் தம்மைத் தெய்வமாய்ப் பேணி நாளும்
பூசனை புரிவோன் வேதம் புகல்மக மனைத்து மாற்றி
ஆசையெட் டினையு மேவென் றைம்புலச் சேட்டை மாற
வீசியே மேலதான விவேகமாம் விருத்தி பெற்றோன் (௮)

உலகெலாம் விளங்கச் செய்யு முண்மையு நாளு மாசற்
றிலகுறக் கறங் கோராழி யிசைபெற நடத்த லானுங்
கலியிரு ளறநன் மார்க்கங் காட்டுத லானுந் தங்கள்
குலமுதற் பரிதி யொப்பக் குறைவிலா வின்பந்துய்ப்போன் (௯)

கட்டழ கானு மெல்லாக் காசினி காத்த லானும்
மட்டவிழ் மலராள் சேரு மகிழ்வினுந் தேவர்க்கெல்லாம்
தட்டறவுணவ தீட்டித் தருதலா லாழியொன்று
தொட்டிட லானும்வாசத் துளபமாறன்னையொப்பான் (௰)

கன்னவி ல்மதனு நாணக் கவினுற்றோ னுலகந் தன்னில்
மன்னுயி ரனைத்துந் தன்னை மருவிய வுயிர தாக
இன்னருள் புரிவா னீதிக் கெய்திய நிறைகோ லென்ன
நன்னெறி நடத்துஞ் செங்கோ னயகன் சியமன்னன் (௰௧)

குலவரை முழுது மெல்லை குறித்தகல் லெனவெ சால
இலகிய துவச மிட்டோ னெழிலுறு கவிகை யொன்றில்
அலகிலாப் புவன மெல்லா மடங்கவே யின்பந்துய்ப்ப
நிலைபெறு மன்னர் மன்ன னிகரிலா வாழ்வு பெற்றோன் (௰௨)

தேவரைந் தருவு மாவுந் தியாகமா மணியுங் கேட்டோர்க்
கீவதா நிதியுங் கொண்ட லேழும் வெட்கிடவேநாளும்
பூவரு சுரர்களாதிப் புலவர்கண் மற்றோர் யார்க்கும்
ஆவலா மனைத்து நல்கி யாதியாம் வண்மை பூண்டோன் (௰௩)

இந்திர னிவன்றன் வண்மை யிசைக்குளம் பொறாமை யெய்திச்
செந்தழற் கடவுடன்னைச் சிறுமணிப் புறவ தாக்கி
வெந்திறல் வல்லூ றுய்த்தான் விரைந்துபின் றொடர்வதாக
வந்தனன் புறவுதானு மன்னவ சரணீ யென்ன (௰௪)

சரணநீ என்று வீழ்ந்த தனிப்புற வதற்கு மன்னன்
கருணையா யபய மீயக் கடியவல் லூறென் னூனைத்
தருகயான்பசியால் வெந்து தளர்வுற்றே னெனவாதாடப்
பருகவூன் வேறு நல்கிப் பருகென மன்னன் கூற (௰௫)

மற்றவூ னுண்ணே னிந்த மணிப்புற வினைத்தா வென்னப்
பற்றியே சரண டைந்து பரிந்தவிப் புறவை யீயிற்
குற்றமா மாத லானின் கொடும்பசி தணிக்க வேறூன்
றென்றென வுரையா யென்னத் தீவிழி வல்லூ றோதும் (௰௬)

மன்னநின் னுடலினூனை மற்றதற் கிணையாத் தூக்கி
நன்னய மாகவீயி னலிபசி தணியு மென்ன
அன்னதற் கிசைந்து மன்ன னறுத்துத் தன்றசையைத் தட்டில்
தன்னிக ரிலாப்புள் ளோடு சார்ந்திட நிறுக்குங் காலை (௰௭)

நிருபன்ற னுடலூன் யாவு நேர்ந்து கொய் திடவும்புள்ளின்
ஒருபுறத் தட்டுச் சற்று முயர்ந்திடா வண்ணங் கண்டன்
றருமறை முடிவுதேர்வுற் றறவழியொழுகியன்பு
பெருகுமவ் வேந்த னுள்ளம் பேதுறு னினைய சொல்வான் (௰௮)

நிலையிலாப் பூத வாக்கை நிலையென வெந்த நாளும்
மலைவிலாப் புகழா மாக்கை மாய்ப்பர் காணறிவிலார்கள்
கலைநிறைந் தறிவி னூக்கங் காண்பவர் புகழெக் காலும்
அலைவிலா திருக்கப் பூத வாக்கையை யழிப்ப ரன்றே (௰௯)

நம்பியே சரண மென்று நாடிவந் தடைந்த புள்ளின்
கம்பிதப் பயத்தை மாற்றிக் காத்திடா துடலை யோம்பி
இம்பரி லிருந்தி யான்று னிரும்பயன் றுய்ப்ப தெல்லாம்
வெம்பியெ யுலகோ ரேசு மிகுபழி யன்றி யுண் டோ (௨௰)

என்னவே யோர்ந்து மன்ன னிருந்துலை புகவே கண்ட
பொன்னுல கத்தோர் வாழ்த்திப் பூமழை பொழிய யாரும்
பன்முறை வியப்பத் தெய்வப் பணைபல முழங்கத் தேவர்
முன்னரோ வரங்க ளீய முதன்மையாம் வள்ள லானுன் (௨௧)

நீதிநூல் வழிய தாக நிகரின்றிச் செங்கோ லோச்சி
மாதிர மெட்டி னுள்ள வையக முழுதுந் தாங்கிக்
கோதிலாக் குணங்கட் கெல்லாங் கொள்கல னுக வைகும்
போதினிற் சூழ்ச்சி யொன்று புந்தியி னினைக்க லுற்றுன் (௨௨)

கண்ணினை நிமையு மெய்யைக் கவசமுங் காக்கு மாறுள்
ளெண்ணுந் தன் னமைச்ச ரோடு மினியநற் குரவரோடும்
விண்ணுளா மமுத மென்ன விளங்குநட் பாள ரோடும்
கண்ணகன் ஞாலங் காக்குங் காவலன் வினவ லுற்றுன் (௨௩)

மாதொடு மக்களென்னும் வன்றளை பூண்டு மிக்க
தீதறு விடையமான செறிகிரு மிகள் மொய்த் துண்ணும்
வேதனை யோடிவ் வில்லாம் வெய்யதோர் சிறைக்கூடத்தில்
ஏதமுற் றிருப்ப தின்ன மெத்தனை யூழிக்காலம். (௨௪)

வாழ்வெனுங் கடலில் வீழ்ந்து வருதிரைச் சுகதுக்காதித்
தாழ்வில்மொத் துண்டு கொங்கை தாங்கிய மாதர் மோகச்
சூழ்வளிச் சுழலிற் பட்டுச் சுறவெனும் புலன்கட் கஞ்சிப்
பாழ்பட லொழிய வுன்னும் பரிசது பலிப்ப தென்றே. (௨௫)

யாக்கைநீர்க் குமிழி யந்நீ ரலையதா மிளமை மற்றப்
பாக்கிய மோங்குஞ் செல்வம் பதித்தநீ ரெழுத்த தாகும்
நீக்கியிச் சுழலைத் தப்பி நெறிகண்டு துறந்தே யாசான்
றாக்கிய கமலப் பொற்றாள் சாரிலன் றோவின் பெய்தும். (௨௬)

பாசமுற் றுடல்யா னென்னும் பரிவதா மகப்பற் றோடு
நேசமா யென்ன தென்னு நிறைபுறப் பற்றி ரண்டும்
வீசிடிற் சீவ போத மேற்கொளா தொழியு முத்தி
தேசிக ரருள்செய்போதத் திடத்தினாற் பலிப்ப தாகும். (௨௭)

இரவியின் மரபிற் றோன்றி யென்முனோ ரானமன்னர்
திருவொடு செங்கோ லோச்சச் சேயிடத் தரசு நல்கிக்
கரவிலா வுளத்தோ ராகிக் கான்புகுந் தினியமுத்தி
கருதின ரதுபோ லியானுங் காண்பனென் றுளம் வலித்தான். (௨௮)

அரசன துளத்துக் கேற்க வமைச்சரு மிசைய மன்னன்
வினைசெய்தார்த் திண்டோன் மைந்தன் வியன்புவிப் பொறையைத் தாங்கச்
குருமணி மகுடஞ் சூட்டிக் கோதிலான் றீர்த்தமாடிப்
பரிவுடன் மனங்கு லிந்து பற்றறத் துறக்கவெண்ணி (௨௯)

தீர்த்தயாத் திரைக்குத் தங்க டேசிக வதிஷ்டர் வைத்த
மூர்த்தம தணுகக் கண்டு முனிவரர் சூழ வாரி
யார்த்துமேற் பொங்கிற் றென்ன வங்கமோர் நாலுஞ் சுற்றச்
சீர்த்திமன்ன வனெழுந்து தென்றிசை நடக்குங் காலை. (௩௰)

பூரண கும்ப மான்பாற் பொற்குட மங்கலத்தின்
சீரணி மாதர் நல்ல தீங்கனி யலரின் மாலை
ஆரண ரிருவர் மற்ற வாகுநற் சகுனங் கண்டு
தேரணி சூழ மன்னன் றிருநதித் துறைகளாடி. (௩௧)

முத்தர்க ளுள்ள மென்ன முற்றிலுந் தெளிந்து மூவர்
நித்தமு மகிழ யாரு நின்மல ராகச் செய்யுஞ்
சத்தியுள் ளதுவு மன்றிச் சாற்றினோ ருன்னி னோரும்
சுத்தரா கிடவி ளங்குஞ் சுரநதி படிந்தன் புற்றான். (௩௨)

கங்கையிற் படிந்து பாசக் கட்டறுத் தவர்போ லின்பம்
பொங்கிட விசுவநாதர் பொன்னடி போற்றி செய்து
வெங்கச முகனையேத்தி விசாலாட்சி யம்மைபாதப்
பங்கயம் பணிந்து மன்னன் பரிவுடன் றுதிக்கலுற்றான். (௩௩)

முனிவர் பங்கயன் சங்கேந்துமுகுந்தற்கு மரியதான
தனிநிலைப் பொருளே யன்பு தழைத்துநெக் குருகிநாடி
மனமற நிற்போர் கண்டு மகிழ்ந்திடத் துரியா தீதத்
தினின்மணி விளக்காய்த் தோன்றுந் தெய்வமே சரணுனக்கே. (௩௪)

நன்னெறி யொன்று மில்லா நாயினேன் பிரமானந்த
இன்னமு தருந்தி யொப்பற் றெக்களித் திடவிப் போதுன்
றன்னருள் புரிந்து காக்கத் தக்கதே யன்றி மற்றார்
என்னையிவ் வுலகிற் காப்பா ரீசனாரின்ப வாழ்வே. (௩௫)

ஈசனார்க் கமுதன் னாய்மற் றெவற்றிற்கு மன்னா யுன்னைப்
பூசித்த வன்பர்பெற்ற புகழ்மிகு பயன்க டம்மை
வாசவன் கமலநாப மாயவன் மறைவலோனும்
பேசிட லாகா தென்றன் பிதற்றலி லமையுங் கொல்லோ. (௩௬)

நளினமா மலரோனுதி நவின்றிடுஞ் சராசரங்க
ளொளிசெய வியங்க சத்தி யுதவிய சத்தி நீயாய்த்
தெளிவுறக் கண்டே னிந்தச் சிறியனு மடியனுன
வெளியனைக் காக்கச்சத்த ரெவருமே யன்றி யெந்தாய். (௩௭)

ஊனுமா யுயிருமாகி யுணர்வுமாயுணர்வுக் கெட்டர
மோனமாய் மோனானந்த மூர்த்தியாய் முத்தி நல்குங்
கோனுமா யொளியு மாகிக் குறிகுண மற்ற நின்னை
யானறிந் தோத வாக்கிற் கியையுமோ வமல வாழ்வே (௩௮)

என்னமெய் யன்ப தாக விருகணீர் பெருகியோ டத்
தன்னிக ரிலாதஞானந் தழைவிசா லாட்சி தன்னை
மன்னவன் றுதித்தைங் குரோச மாந்துறை படிந்தெப்போதும்
அன்னம தருளுமன்ன பூரணி யமலத் தாளில் (௩௯)

தாதாரு மலர்கள் சாத்திச் சந்தத மின்ப வீட்டின்
மீதார்வத் தோடு மன்னன் மெல்லென நடந்தண்டங்கட்
காதார பீடமாக வடியாரை யாள வைகுங்
கேதார கௌரி பொற்றாட் கீழ்ப்படிந் தேத்தி யன்பாய் (௪0)

அருள்செயுந் தண்டபாணி யடியிணைக் கமலம் போற்றித்
தெருளுற விளங்கு மற்றத் தேவர்தம் பதந்து தித்துக்
கருமுகி னிறத்த தான கந்துக மேறிக் காத்து
வருநற்சீர் வடுகநாதன் மலரடி வணங்கிப் பின்னர் (௪௧)

வேறு

தாய ராமுமை விழிகளின் முக்குணச் சாயல்
மேய தென்னவே வாணியும் யமுனையு மிக்க
தூய கங்கையு மொத்துமும் மலத்தொடக் கறுக்கும்
ஆயநற்றுறை யாடினு னின்பத்து ளாழ்ந்தான் (௪௨)

காசி யம்பதி மகிமையும் வளமையுங் கண்டு
மாசி லாமதி மன்னவன் மகிழ்ந்தொரரண் டளவும்
நேச மாயுறை யருமறை யோர்க்கெலா நிதியால்
ஆசை நீக்கியவ் விடமகன் றேகயை யடைந்தான் (௪௩)

அந்த நற்பதி தன்னிலே தென்புலத் தவர்க்குச்
சிந்தை யின்புறச் செய்கடன் முடித்துமேற் சிறந்து
நந்து றுந்திரை யெறிபிர யாகையு நலஞ்சேர்
சிந்து மாநதி நருமதை கண்டகி தீர்த்தம் (௪௪

கோத கற்றுகோ தாவிரித் துறைகளுங் குலவு
சீத துங்கபத் திராக்வு தமைமுதலாய
பாத கங்களை யகற்றிடு நதிதொறும் படிந்தும்
ஓத ருந்தல மூர்த்திக டரிசன முவந்தும் (௪௫)

அரவுடன் னருஞ்சகோ ரமுமென வுணவ ருந்தி
இரவுநண் பகலென் பதற்றே தவமி யற்றுங்
கரவிலார் நிறைஸ்ரீசை லத்துமுக் கணனைப்
பரவிநற் சிவநிசி மணியொலி செவிப்ப டுத்தி. (௪௬)

நிதியுமின் னுயிருந் தொழுதெய்வமு நிறைதன்
பதியையன்றி வேறின்றெனப் பரிவுறு கற்பின்
மதிமு கத்தவர் மனமெனத் தூயதாய் மன்னிக்
கதியை நல்குசித் தாச்சிர மதுதனைக் கண்டும். (௪௭)

தெக்க ணத்திசை நோக்கியே செல்லுழிச் சிறந்த
முக்க ணாயக னுமையொடு முகமலர்ந் திடத்தன்
பக்க முற்றிடப் பெற்றது கயிலையாம் பதிக்குத்
தக்கதாயகா ளத்தியாம் வரையடிச் சார்ந்தான். (௪௮)

மதிக்கொ ழுந்துசேர் கருமுகில் குமுறலை மதந்தாழ்
கதித்த வேழமென் றெண்ணிக்கண் டீரவம் பாய
மதிக்குங் கானவர் மயிலைத்தன்மா தெனச்சிலையின்
னுதிச்ச ரந்தொடா மலைவளங் கண்டன னேற்போன். (௪௯)

பிடியினூடலை யகற்றுவான் பெய்ம்மத வேழம்
வெடிம லர்த்துணர்த் தேனளா யருத்திடும் வெற்பிற்
கொடியி டைக்குறச் சிறுூர்வரை கூயது கேட்டு
முடிது ளக்குவார் கின்னரர் மாதர்கண் முற்றும். (௫௰)

தேனிரு லுடைந் திழிதருந் தேறலைச் சிறுகண்
யானை தன்னையே யருந்துமிப்பேர ராவென்ன
வானிமிர்ந் துகைசுருண் டிடவாய் வெரீஇ யருவிக்
கானி ழித்தகல் வரையினை கண்டனன் கண்ணால் (௫௧)

கான வச்சிறுர் வளர்க்கின்ற விரலையின் கன்றை
வானி லூர்மதிக் கலையொடு வருமமர் பழக்கித்
தேன ருத்திடும் பலவளஞ் சிறந்திடுங் குன்றைக்
கோன றிந்துகை சிரமிசைக் குவித்தனன் குறித்தே. (௫௨)

கரியமாமழை சூழ்ந்திடுகோலையிற் கரியி
னுரியணிந்திட லொத்திடும் வெண்முகில் சூழிற்
றிருவெணீறணிந் திலகுவ தொக்குமெப் போது
மரனதாருரு வாகுமச் சயிலமே யடைந்தான். (௫௩)

யானையின் மதவாரி கடலைப்பெய்தே யாறுய்த்
தானிழிந்த திற்கமழ்வது மான்மதஞ் சாரற்
றேனி ழுறனின் மதிதவழ் திறத்தினுற் செந்தேன்
வான நாடரு ணமுதநற் சுவைதனை வழங்கும். (௫௪)

குஞ்சரங்களு மடங்கலு வேங்கையுங்கொடிய
நஞ்ச ராக்களு மாக்கம யூரமு நவிலு
மஞ்சு கந்தளுந் தவமுயன் றசைவிலா முனிவர்
நெஞ்சுவந்திடப் பணிசெயும் வரையினி னிருபன். (௫௫)

உள்ளதீர்த்தங்க ளாடியே வுளங்கனிந் துருகிக்
கள்ள ருமலர் கண்ணுத லடியினிற் கவின
வள்ளலானவ னருச்சனை புரிந்துமே வணங்கி
யுள்ள மின்புறக் களித்தன னும்பரும் வியக்க (௫௬)

வாய தேதிரு மஞ்சனக் கலசமா மயிர்ச்சிக்
காய சென்னிபூப் புட்டிலாய் பற்களட் டில்லாய்
நேயதோலடி கைகளாய்க் கண்மலர் நேர்ந்து
தூய பூசைசெய் துயர்ந்தகண் ணப்பரைத் தொழுதான். (௫௭)

வளியின்றன் னுருக்கா ளத்தீச் சுரனென மண்ணோர்
தெளியக் காட்டிய தீபத்தி னொளியையுஞ் சிறகா
ரளிகள் மூசுபூந் தாரணிந் தன்பரா னவருக்
கெளிய ளாயருள் செயுமுமை பதத்தையு மேத்தி (௫௮)

அத்தலங்கடந் தரசர்கோன் றென்றிசை நடக்கச்
சித்தர்மாமுனி தேவர்கள்செழுங்கம லத்து
முத்தனுஞ் செலவரிய பாற்கட றுயின் முயலும்
வித்தகன் னிலைப்பதிய தாம்வேங்க டங்கண் டான் (௫௯)

இந்தநற்புவி தனிலுறு மடியரு மெளிதாய்க்
கந்தமாமலர்ப் பதங்களைப் பணிந்துமே கனிவாய்ப்
பந்தமற்றுவீட டையவே பயோததிது றந்து
வந்தநாயகன் செந்திரு வுடனுறை வரையே. (௬௰)

நம்புமன்பராஞ் சிறுபயிர் கலிவெயி னலிய
வெம்பி வீழ்வதற் றின்பமாத் தழைத்திட மிகவே
யம்பு மாரிபோ லருண்மழை பொழியவக் கடல்விட்
டிம்பர் வண்டுழாய் முகில்பட ரினியவேங் கடமே. (௬௧)

இருபயோதர மருமமுற் றீரறு மெழின்மின்
றிருவுரத் தமைத்துல கெலாமுய்ந்திடத் திகழு
மொருபயோ தரத்துறை விடம்பாணி காலுப்பிற்
பெருவியப் புளநாக வேங்கடமெனும் பிறங்கல். (௬௨)

அரவின்மீ தரிதுயிலல் கண்டக மகிழ்வுற்றுப்
பரவி யேத்திடுந் தேவரும் வியப்புறப் பணியாங்
கிரியின் மாவொடு கேழ்கிளர் பூவையினி றத்தான்
வரமளித்திட நிற்பது வேங்கட வரையாம். (௬௩)

பிடியதாமெனக் கன்றுகள் பெருங்கரு முகிலைத்
தொடருமத்துடி யடியெனக் கொண்டவின் றுணியை
நெடிய கைகளாற் கரிணிகள் வளைத்திடு நிவந்து
வெடிகொள் பூம்பொழில் சூழ்திரு வேங்கட வெற்பில். (௬௪)

மாசிலாக்கதி ரவன்ப கன்மின் மினிமான
வீசுபொரொளி யாலிர வகற்றியே விளங்கு
மாசுணப்பெரு மணியொளி வைகுந்த மாடத்
தேசத்தொத்திடுந் திருமலை வேங்கடச் சிறப்பு. (௬௫)

வேதனூர்பதி தனிலலர் விரையர விந்தப்
போதினுளமாய்ப் பசுங்கழைப் போத்துகள் புறம்போஞ்
சீதரன்றிரு மகளுடன் சிறந்துநல் வரங்கள்
போதவன்பருக் குதவிடும் வேங்கடப் போருப்பில். (௬௬)

புனங்கள் காத்திடுங் கொடிச்சியர் விளிகளும் புளகத்
தனங்க ளுஞ்சொலுஞ் சாயலுங்கண்டுநாண் சார்ந்து
கனங்கொள் மாநகர் குயில்கிளி மயிலெலாங் கரந்து
வனங்கள் புக்கலா லழிவிலா வேங்கட வளனே. (௬௭)

ஊசல்வேங்கடத் தாடிய கொடிச்சிய ருருவைத்
தேசுலாவிய தேவர்கள் கண்டிடிற் றிகைத்தே
யாசைமீறிநம் மழகினை வெறுப்ப ரென்றமரர்
நேசமாதர்த நெஞ்சமு மூசலா டிடுமால். (௬௮)

நாகமா மணிச்சுட ரொழுந்தந்தர நயந்து
வேகமாச் செலுமிரவி தேர்ப்பரி வயினெய்த
மாகமுற்றது மடங்கலென்பார் மலைகடந்து
போகத் தேருவார் வேங்கடத் துறைதரும் பொருப்பர். (௬௯)

வெள்ள ராவுறை வேங்கட முனிவர்பால் வேதந்
தெள்ளி தாயுணர் கிள்ளைகள் தெருட்டிடக் கற்றுக்
கள்ள முதலைவந் தருக்கிளி கனிவொடு பாட
வுள்ளமேவியந் தமரர்கோன்முடி யசைத்துவக்கும். (௬௰)

பரிசித்தோர் பிணியகற்றல் சஞ்சீவி யின்பரிசாம்
தரிசித் துன்னினோர் கேட்டபேரும்பிணி தணிந்து
துரிசற்றே பவத்தொடக் கறுத்தின்ப வீடெய்தும்
பரிசுத்தம்பெற வேங்கடமே பலனருளும் (௭௧)

ஆயிர மிரண்டாகிய நாவுடைய நந்தன்
றூய வேங்கட வளங்களைச் சொல்லிட மிக்க
நேயமுற்றினுங் காலுண வாய்த்தவ நேரி
ஞயினே னுளர் புன்சொலுக் கமையுமோ நாடில் (௭௨)

கண்டமால்வரை யடைந்தவன் கனிந்துநா ரணன்மு
டண்டரும் பெருந் தீர்த்தமாம் சாமிபுட் கரணித்
தெண்டி ரைப்புன லாடியவ் வயின்சி றப்போங்குங்
குண்டுநீர்ச் சுனைப்பொய்கைகள் படிந் துளங்குளிர்ந்தே. (௭௩)

செய்விந்தத் தலர்கண்ணனுந் திருமரு மார்பன்
வைகுந்தப் பதிவிரசையை யொக்கு மாமறைநேர்
வைகுந் தக்க கோனேரியிற் றோய்ந்து வைகறையில்
வைகுந்தக் கறமன்னவன் மகிழ்ந்தனன் மாதோ. (௭௪)

பூந்து ழாய்முகில் பொற்புறு மலரடி பூண்டு
காந்துமா மணிக்குவைகள் பொற்குவைகள் காணிக்கை
நீந்தரும் மகிழ்வோ டளித்துள்ள நெக்குருகச்
சாந்தனைக் குவிந்தன்பொடு சாற்றலுற் றனனால் (௭௫)

வேறு

ஆதிமுக்குணமா யமலமுச்சுடரா யடைவுடன் முத்தொழிலியற்றும்
சோதிமுவ் வுருவாய்த் தொடக்கறும் வாளாய்த் துளங்கிய காலொடு கனலாய்ச்
சீத மார்புனலாய்த் திண்புவியதுவாய் திகழ்தருமொரு முதலான
நாதனேயுன்னை நாயினேன்றுதிக்க நாவொருகோடி பெற்றிலனே. (௭௬)

குஞ்சரமொன்று குழைந்தழைத்திடவே குரற்செவி புகாமுனமெழுந்தே
யஞ்சிறைக் கலுழனேறி மேருவினி லழகிய நீனிறமலையொன்
றஞ்சலென்றோடி வருவதுகடுப்பவடுத்து வையாழி யாற்கராவைத்
துஞ்சிடவென்று கரியினைகாத்த தூயவுன் னருளையென் சொல்கேன். (௭௭)

அருட்கட னீயென் றியாவருமறிய வாடகன் மகனழைத் திடவுட்
கருத்துறு முன்னஞ் சியமாய்த் தோன்றிக் கடியதா னவனுரங் கடிந்த
நெருப்புமி ழாழிக் கையனே திருவினேயனே வேங்கடமென்னும்
பொருப்பில்வந் தடியார் புன்மைதீர்த் தருளும் புனிதனே புதியதெள்ளமுதே. ()

சுகரொடுவாம தேவரோ முதலாம் தொன்முனிவோர் குழுவுக்கும்
அகமெனு மமதையற்ற மெஞ்ஞானத் தற்புதற்குந் நிசவன்பிற்
றிகழுநல் லறிவு தழைத்தவர் தமக்குஞ் சீரருள் புரியுநீ மாலா
லிகபரமீதென் றறிந்திலா வடியேற் கின்னருள் புரியுநா ளுளதோ. (௭௯)

பங்கய வனமதழ குறவலர்ந்து பச்சைவில்லிட் டிருபாலுந்
திங்களோ டிரவிசேர்ந் தொளிதாவித் திகழுமோர் சோதிமின் னெடுகார்
மங்குல் போற்கிரி மேல் வருவதே பொருவவந்து மெய்யன்பர் மேலருளைப்
பொங்கிய மழையாப் பொழியுநீ யெனையும் புரப்பது பாரமோ புகலாய். (௮௰

இன்னுழைக் கதிர்சூழ் நுண்ணணுத் திரளினெண்ணிலா வண்டங்க ணிறைந்த
நின்னையோ ரண்டத் துறைகுநர் துதித்தல் நீள் சினையத்தியின்க ணிக்குள்
மன்னிய கொதுகின் புழுவிலொன்றந்த மர்த்தியல் புரைத்த வாமலர்வாழ்
மின்னுட னிலகு மேகமேபொழிலார் வேங்கடத் தமர்ந்தவச் சுதனே. (௮௧)

புகன்றிடலெனது குரவரா முன்னோர் போற்றிட வவருளந் தனைவிட்
டகன்றிடாத் துரிய மணியதா யொளிரு மரங்கனீ யாதலி லெனையுந்
திகழ்ந்திடச் செய்தே யாளுவாயென்று சித்தம துருகியே பணிந்து
மகிழ்ந்ததோரிராஜ ராஜனுந் தென்பால் மாதராய் வந்தனன் மாதோ (௮௨)

அன்னவேங்கடத்தோன் றன்னை வந்தடைந்த வடியருக்க ருடரும் வரங்க
டன்னை நாயடியேற்கருள்க முக்கண்ண தற்பரசச்சிதானந்த
என்ன நாடோறுந் தோத்திரமது செய்திறைஞ்சிடுந் தனிமுதலான
புன்னகா பரணன் வதிதருகச் சிப்பதியக மடைந்தனன் பரிந்து. (௮௩)

கம்பைநீ ராடி மாவடி வதிந்த கண்ணுத லாகுமே கம்ப
ரும்பருமறியாப் பதமலர் பணிந்தே யுலகெலா மருட்டிடு மோரைந்
தம்பனை யெரித்தோன் வடிவினில் வளைக ளழுந்திய வடுவொடு தனமாங்
கும்பமூர் வடிவுமமைத்த காமாட்சி குளிர்மலர்ப்பதம் பணிந்தனனே. (௮௪)

கல்வியின் பெருக்குஞ் செல்வமு மகவுங் காணியும் புதுமையதான
பல்வளச் செருக்கும் மரசியன் முதலாம் பாக்கிய மனைத்துமே விழியா
னல்கிடுங் கருணை வாரிதி யுலக நாயகி யானகா மாட்சி
மெல்லடி பணிந்து காமகோ டியதாய் விளங்கிய பீடமுந் தொழுதான். (௮௫)

தேசிக ஞெருமா மறைச்சிறு வனுக்காய்ச் செந்தமிழ்ப் பாடிட விரங்கி
மாசறு கனக மழைமுகில் பெய்ய மகிழ்ந் தருள்புரிந்த செந்திருவின்
வாசமா மலர்த்தாள் போற்றியே யத்தி வரையிருந் தரசியல் செலுத்துங்
கேசவ வரத ராஜமா முகிலைக் கிளர்ச்சியா வருச்சனை புரிந்தான். (௮௬)

சீருறு முத்தா நதிப்புன லாடிச் சிவிதனிச் சிருட்டியின் முதலில்
வாரிதி யலையிற் றுரணி படைத்து மற்றது திண்ணிதா யசைவற்
றேறொடு விளங்கத் தான்முதூ கிரியா யெய்திய சிவனடி யிறைஞ்சித்
தாரணி பெரிய நாயகி யருளாஞ் சலதியிற் சந்ததங் குளித்தான். (௮௭)

கனைத்துவண் டிமிருங் கொன்றையந் தாரான் கதழெரி வரையுருவாகி
அனத்தொடு வராக மாயய னரியு முடியடி யறிகிலா துயர்ந்து
நினைத்தவர் முத்தி பெறவரமருளு நிர்ம்மலத்தலம் வலம் வந்து
மனப்பரப் பறவண்ணு மலையனா யுண்ணுமுலைத் தாயையும் வாழ்த்தி. (௮௮)

வடமசைந் திலகு மங்கையர் புளக வனமுலை யெனத்திரண் டடரும்
தடவிரு கும்பக் கடகளி றிவுளித் தானையு மிரதமுங் குடையுங்
கொடிகளு நெருங்க வழிகொடு சென்று குவலய மடங்கலு மிறைஞ்சும்
இடபமா மலையைக் கண்டு பூசித்துமெய்புள கரும்பிணு னிறைவன். (௮௯)

கானவர் வலையுட் பட்டமா னென்னக் கவலுறு வோர்பய மகற்றத்
தேனமர் ஜெம்பு நாவற்கீ ழுறைந்த சிவபெரு மான்றனைப் பணிசெய்
தானையின் காவி லமர்ந்தகி லாண்ட மனைத்தையு மாளுமென் னன்னையை
மோனமந் திரத்தாற் றுதித்தடி பரவி மூழ்கின னின்பவா ரிதியில் (௯௰)

பொன்னி நீராடிப் பொன்மதிற் புரிசை பொற்புறு மரங்கமா ளிகையிற்
பொன்னெனு மின்னோ டிலகிடும் பசிய பூந்துழாய்க் கொண்டலின் புதிய
பொன்னலர்ப் பாத பங்கயம் பணிந்து புளகம தரும்பிநின் றுடிப்
பொன்னிற வசுரன் மகனெனத் தேவர் புகழ்ந்திட வின்பமாய்ப் பொலிந்தான்

தாயதா யொரு பெண் சஞ்சலந் தவிர்த்த தாயுமா னவர்மலர்த் தாளிற்
றூயமா மலரா லருச்சனை புரிந்து தொல்லுல கனைத்தையு மீன்ற
நேயநற் றுயா மட்டுவார் குழலி நிர்ம்மல வருள்பெறிஇ யின்ப
மீயுயர்ந் தாடிப் பாடியானந்த வெள்ளமேற் கொண்டனன் விறலோன் (௬௨)

எல்லையி றேவர் முனிவருமாலு மீரிரு முகமுள வயனும்
சொல்லுதற் கரிய பெருமையும் வளமுந் தூயதன் மையுமிகுந் தோங்கும்
தில்லையம் பதியிற் போந்து மெய்ஞ்ஞானந் திகழ்சிவ கங்கையிற் படிந்து
தொல்லை நான் மறைமூ வாயிரர் பதங்க டொழுதனன் சுமுகனு மன்னன். ௬௩

அகிலமா மாக்கை யிதயநற் கமல மாகிய சிதம்பர வெளியிற்
சுகமுறு சச்சி தானந்த நடனந் தொடுத்தொரு பதமலர் தூக்கிச்
சகமுழு தாடச் சங்கர ராடுந் தமனியச் சபையெதிர் கண்டு
நகுமுக ஞகிக் கண்கணீர் பனிப்ப நரபதி பரவச முற்றுன். (௬௪)

நாட்டமொத் ததனி லையறி வடங்க நாற்கர ணுதியு மொடுங்க
வாட்டமு மகிழ்வும் வரவொடு போக்கு மறத்தலு நினைத்தலுமான
கூட்டமுங் கூடாக் குணங்களு மற்றுக் குறிகுண மிலாத நிர்க்குணமாய்
நீட்டியதண்ட மெனவிழுந் திறைஞ்சி நின்றன னிருபர்க ணிருபன். (௬௫)

வாக்கொடு மனதிற் கெட்டிடா வின்ப மயமதா யுட்புறமெங்கும்
நீக்கற நிறைந்த பூரண மாகி நிஷ்கள மாயரு ளமுதைத்
தேக்கிய கடலாய்ச் சிற்சுட ராகித் திகழுமெய்ப் பொருளைச் சிந்தித்தே
ஆக்கமாஞ் சச்சி தானந்தி பொற்று ளன்புடன் பணிந்தன னரசன். (௬௬)

சுத்தமாந் துரிய வொளியெனப் பசும்பொன் றுலங்குற வியற்றியதான
சித்திரகூடத் தில்லைகோ விந்தன் றிருப்பத மலர்முடி சேர்த்துப்
புத்தமு தத்தி னுருவதாந் திருவின் பொன்னடி மலர்கள் பூசித்துப்
பத்தரிற் சிறந்த பார்த்திப னின்பப் பரிசுபெற் றுயர்ந்தன னன்றே. (௬௭)

கவுணிய பொன்னு மகவழ விரங்கிக் காஞ்சன வள்ளத்தி லமுதம்
உவகையாய் ஞானத்துட னூட்டுவித்த வுரிய தாயையு மொளிர் முத்தின்
சிவிகையுந் தரளப் பந்தரு மீய்ந்து ஜெயமெலா முனக்கெனத் தேற்றுஞ்
சிவபெரு மான்ற னடியிணைகளையுஞ் சென்னிமேற் சூட்டியேத் தினனே (௬௮)

மக்கடம் பிணிக்கு மருந்துக ளருத்தி மாபிணி தவிர்த்திடச் செய்த
றக்கதாய் தந்தை குரியதென் பதுதான் சகமெலா முணர்ந்திட மாந்தர்
துக்கமு துறுநோய் வினையெலா மகற்றத் தொல்வயித் தியப்பெயர் தரித்த
முக்கணு யகனைக் கண்டுவே ளூரில் மும்மலத் தொடர்பறுத் தனனே. (௬௯)

தீவினை யகல்சித் தாமுத மதனிற் றீர்த்தம தாடியே பவத்தோர்
நோவினை யறுக்குந் தையனுயகிதன் னுவலரு பதமலர் வணங்கி
மூவினை புரிய முயற்றிடு மசுரர் முடித்தலை துணித்துவா னவர்கள்
கோவினுக் கரசு சூட்டிய முத்துக் குமரவேளடிமுடி பூண்டு (௭)

நெஞ்சக மகிழக் கௌரிமாயூர நிலையடைந் தத்தல மமர்ந்த
செஞ்சடா டவியின் மதியணி கடவு டிருவடித் தாமரை போற்றி
அஞ்சினேன் பவத்துக் கடியனே னென்ன வறைதரு மன்பருக்கிரங்கி
அஞ்சிடே லென்றே யருளப யம்பா ளலர்ப்பதம் வணங்கின னரசன். (௭௧)

ஆவடு துறையி லணுகியே மூலரடியிணை யுளத்தமைத் தழகார்
மாவடு வகிரி னிணைவிழி யொப்பில் வனமுலைக் கிசைந்தொளி வீசும்
பூவடி மாசி லாமணி யான புனிதனுர் தனைப்பணிந் திறைஞ்சி
நாவடி தழும்பத் தொழுதறத்துதித்து நடித்தன னின்பமா நடனம். (௭௨)

காவலன் கோடிக் காவலைக்கண்டு கண்களி கூர்ந்துமே யுள்ளத்
தாவன மீதூருமையொரு பாகத் தழகனை யருச்சனை புரிந்து
தேவர்கள் மகுட மணித்திர ளிடறிச் சிவந்தசீர்ப்பதந்தனை சென்னிப்
பூவணி யெனவே சூட்டியுண் மகிழ்ந்து பொருவிலாத் துதிபல புகன்றான்(௱௩)

இரவொரு பகலற் றினியநன் பூசை யிருந்தசை யின்றியே யியற்றுங்
கரவிலா மறைமார்க் கண்டருக்காகக் காலனைக் கடிந்தவர் கழலாம்
பொருளொடு கருணை பொழியபிராமி பொற்பத முஞ்சிரம் புனைந்து
தெருளொடு திருச்செங் காட்டினிற் சிவனைச் சிந்தனை களிப்புறத் துதித்து. ()

திருநிறை வெண்காட் டிறைபதந் தொழுது செழித்துயர் கூவிள வனத்தில்
அருளொடு நிறைந்த வடிகளை வணங்கி யாலமா வனத்தினி லமர்ந்த [றித்து
குருமணி விளக்கைக் கொண்டுதா னுளத்திற் கொழுஞ்சிவக் கொழுந்தினைக் கு
மருமல ரணிந்து திருக்கள ரிதனினடித்த தாண்மலர்களை வணங்கி. (௱௫)

கடலலை கொழிக்கு நாகையிற் காயா ரோணர்தாட் கமலமதிறைஞ்சிக்
கடிமண மலரா லருச்சனை புரிந்து கண்ணிக ரன்பர்தங் கண்முன்
சுடருநீ லாய தாட்சியைத் தொழுது சோதியாஞ் சவுந்தர ராசர்
மடலவிழ் கமலப் பதமலர் வணங்கி மகிழ்ந்தனன் மன்னவர் மன்னன். (௱௬)

வெண்ணிற முத்த மரும்புபுன் னைக மிசைதுகிற் கொடியது படரத்
தண்ணுறுஞ் செய்யத் தாமரை மலரிற் சங்குக ணித்தில முயிர்க்கும்
உண்ணிறை கடனீர்ப் புலவறக் கைதை யொளிமலர்த் தாதுகளு குக்கும்
எண்ணரும் வளஞ்சேர் கடற்றுறையாடி யெய்தின னன்மறைக் காட்டில்(௱௭)

கருங்கடல் பருகிச் செந்தமிழ்க் கடலாற் காசினி விளங்கிடக் காட்டும்
பெருங்குட முனிவர் கண்டுபே ரின்பம்பெற்றிடத் திருமணக் கோலம்
ஒருங்குடன் காட்டு மடிகள்பொற் றாளை யுளங்கனிந் திறைஞ்சியா னந்த
இருங்கடல் குளித்த விறைவனுண் மகிழ்வோ டெய்தினன் கமலையா லயமே.()

கமலையிற் படிந்து கனிவுட னாரூர் கண்டு வன்மீகமா மிலிங்க
நிமலர் பொற்றாளி னேமமாய்ப் பரவி நிறையுல காண்டுசெங் கோலின்
அமைதிய துலக மறிந்திட நடாத்தி யருளிய தியாகரா ஜனையும்
உமையையும் பணிந்து கமலையி லுதித்தா ளுவந்திடப் பணிந்தருள் புனைந்தான்.

வாஞ்சைக ளொழிய மாயுமெவ் வுயிரும் வலச்செவி மேலதா மரிக்கும்
வாஞ்சியமென்னுஞ் சிவபதி யணுகி மாசறு குபதகங் கையினிற்
காஞ்சன தான மளித்தினி தாடிக் கண்ணுத லடிபணிந் துறுநோய்
தேஞ்சிட வுமையின் சீரடியேத்தித் திருக்கண்டீச்சுரந்தொழுதிறைவன் (௱௰)

கருங்கலாற் கடலைக் கடந்தவாகீசர் கழறிய பாடலின் சுவையிற்
கிரங்கியே தானு யியற்றிய பரம னிருக்கையாந் திருப்புக லூரைக்
கரங்குவித் தேத்தி வணிகன்றன் விடத்தைக் கடிந்துமேன் மணம்புரிவித்துத்
திரங்கொடு சாட்சி செப்பிட வெழுந்த திரமது ரேசனைத் தொழுது. (௱௰௧)

பூசனை புரியு மருச்சகன் வார்த்தை பொய்யுறா வகைதிருச் சிரத்தில்
வாசனை கமழுஞ் சவரியை நிகராய் வளர்சிகை காட்டிய மாலின்
நேசநற் பதியாந் திருக்கண புரத்தி னித்திய மின்னணிந் திலங்குங்
கேசவ சவரி ராசமாமுகிலைக் கீர்த்தனஞ் செய்தடி பணிந்தான். (௱௰௨)

வந்தமன் னவன்றா னின்பமாந் தேறன் மகிழ்ந்துமேற் பொங்கியே வதியுஞ்
சிந்ததா யிலகுமிடை மருதினிலே திகழ்தருஞ் சிவபெருமானைக்
கந்தவா ரளக வம்பிகையுடனே கண்டுமே கண்கணீர் வாரப்
புந்தியின் புறவே பூசனைபுரிந்து புகழுடன் குடந்தையிற் புக்கான். (௱௰௩)

எய்திய மன்னன் மாமகப் பொய்கை யின்பமாய்க் குடைந்து நீராடிக்
கொய்தநல்வாச நாண்மலர் கொண்டு கும்பலிங் கேசரைப் பூசை
செய்து தாயினுஞ் சீர்சிறந் தருள்புரியுந் தேவியா மம்பிகை பாதச்
செய்யதா மரைகட் கருச்சனை புரிந்து தேவரி னுயர்ந்தனன் செம்மல். (௱௰௪)

தாதொடு கமழும் பைந்துழாய் மாலைத் தமனியப் பாவைசேரகல
மீதுற வணிந்து பணியணை யதனில் விமலநல் லறிதுயிலமரு
நாதனு மாரா வமுதனைக் குடந்தை நகர்நடுக்கண்டுபூசித்து
வேதனே டமரர் தொழுநலூ ரடைந்தான் வேந்தர்கள் பணிபத வேந்தன். ௱௰௫

பூவிரி பொழிலின் மயிலின மகவப் புளினமீ திருந்தன முவக்குங்
காவிரியாடிப்பஞ் சநதீசர் கடிகமழ் கமலமென் பதத்தி
லாவியோ டாக்கை யுருகிடப்பூசித் தருச்சனை புரிந்தறம் வளர்க்குந்
தேவனு யகியை யன்புடன் துதித்துத் திருக்கண்டி யூர்வலம் வந்தே. (௱௰௬)

கண்டியூரதனிற் கண்ணுதற்பாத கமலங்கள் கண்டுபூசித்து
வண்டிமிர் தண்டார்ப் பைந்துள வணிந்த மழைமுகிற் பாதமும் வணங்கித்
தெண்டிரையமுதக் கடலினிற் பிறந்த செந்திருச்சந்ததம் வாழுந்
தண்டருங் கனகக் கமலமதாகுந் தஞ்சைமா நகரினை யடுத்தான். (௱௰௭)

தொன்மையாந் தொண்ட மண்டலத்துள்ள தூயநற் றலங்களுந் தொழுது
தன்னிக ரில்லாச் சோழநன் னாட்டுத் தலமெலாந் தொழுது மின்புற்ற
மன்னவன் தஞ்சை யருகில்வந் திறுப்ப மணியொடு கனகங்கள் வழங்கும்
பொன்னியாற் றணியுந் தஞ்சையின் வளமும் புகலுவன் சிற்சில மாதோ. ௱௰௮

வேறு.

பொன்னெடுமா மணியீய்ந்து திருநிறைவாய்ப் பாவமறப் புனிதமாக்கி
மன்னுயிரை வளர்க்கின்ற தாய்முலைப்பா லொக்குமென வந்துந் தெய்வப்
பொன்னி புடைசூழ்ந்திடவே மூர்த்திதலந் தீர்த்தமது பொலியச் சீர்சேர்
தன்னிகரிலா ஞானச் சதுரர்களுங் கண்டு மகிழ்தனிச் சோணாடே. (௱௰௯)

பூங்காவும் பூகமுட னிக்குமது கரங்கிள்ளை பொன்னூர் காளந்
தேங்காலு மலர்கயல்கள் செறிந்தெங்கு மிகமிகவே திகழ்தலாலே
பாங்கான கொலுமேடை கவரிசிலை நாண்புரவி படைகள் சின்ன
நீங்காத சரந்துவச மிருப்பிடமே மதன்காணி நிலைசோணாடே. (௱௨௰)

வெள் வளையின் முத்தோடு நளினமுத்துஞ் சுவைவேழம் வெடித்தமுத்தும்
வெள்ளநில விளைக்காலுங் கழனிவிளை நெற்பொலியில் விரைந்துநாளு
மள்ளரல காற்சால முத்தொதுக்குஞ் சோணாட்டில் வாழ்வோர் முன்னை,
வள்ளலெலாமுலோபரெனவருளுடையார்கல்விநலம்வளர்ப்பர்மன்னோ. ௱௨௰௧

தங்கநிறச் சண்பகப்பூஞ் சோலையினிற் படிந்து பைம்பொற் றுதளாவு
மங்குலது வாய்மடுப்பக் கடற்புலவு மாறிமிகு வாசமுற்றுப்
பங்கமிலா நற்குடியிற் பிறந்து கசடறக் கற்ற பரிசிற் கேற்பப்
பொங்கமுற்றோர் தனைச்சார்ந்தோர்பெற்றபெருநலமென்னப் பொலிய மாதோ

வேறு.

மதுகர மதுவுண் செங்கழு நீரின் மலரினைக் கண்டுதன் றோழி
மதர்விழியெனவே பிரசமுண் கடைச்சி மகிழ்வொடு புதைத்தலும் வசன
மிதுநமைத்தேடி வந்ததென் றறுகா லின்புறுங் கழனிசூழ்நாடா
மதிமுக மாதின் மங்கலவணியாய் வயங்கிய தஞ்சைமா நகரோ. (௱௨௰௩)

வேதமு ளனபாத் துதிசெயுஞ் சைவ விதத்தொடு மால் சமயங்க
ளோதிய மூர்த்தி யனைத்துமேபேத முற்றிடா தொளிர்தஞ்சை நகர
நாதனும் பொருளொன் றுருமேயதற்கு நாமங்கள்பலவென நாட்டும்
போதராய விரோ தத்தரா மறிஞர் புந்தியை யொத்துமே பொலியும். (௱௨௰௪)

திருப்பதி களிலுஞ் சிவதலங்களிலுந் திகழ்கின்ற மூர்த்திக ளருளா
யிருப்பதினாலே யெழினகர் தஞ்சை யினைவலம் வந்திடிற் புவியை
விருப்பமாய் வலவந்தது நிகராகும் வெள்விடைப் பிரகதீசுரர்தம்
பெருப்பதக் கோவிற் சிகரம்பொன் னுலகிற் பிறங்கிடுந் தேவருந் தொழவே. ()

நகரினிற் கச்சி யினிதென யாரும் நவிலுவ ரதனினு சிறந்த
சிகரகோபுரங்க ளொடுவளம் பொருந்தித் திகழுமா நகரிது வெனவே
யகமகிழ்ந் தருளாய்க் கஞ்சிகாமாட்சி யாலயங் கொண்டிடக் கருதிற்
சகமதி லிதனுக் குவமையொன் றுளதோ சாற்றலாஞ் சிறிதுபொன் னுலகே. ()

வடவிளந் தளிரி லறிதுயிலமரும் வள்ளறனுந் தியை நிகர்க்குந்
தடநகர்த் தஞ்சை மாடமாளிகைகள் தனியவ ணணிநல மணியின்
வடமதை நிகரு மன்னவன் கோவில் வளொளி யரன்சடைமதிபோற்
புடவியிற் பொலியு மழகதா லன்றோ புகலுவரள கையென் றம்மா. (௱௨௭)

விண்டொடு மாடக் கொடிகள்செங் கதிரோன் மேவியே பவனிசெய் திடநற்
றண்டருஞ் சாலை யமைத்ததென் கேனோ தடவிரதந் தனிநடத்துந்
திண்டிர லருணன் றிகைப்பற வேகால் செய்திடச் சமைத்ததென் கேனோ
வண்டினஞ் சுழல்கற் பகம்படர்காம வல்லியின் கொழுகொம்பென் கேனோ. ()

மின்னிடை நுடங்கும் பேதையர் வளங்கொண்மென்மறு கிழைத்திடுஞ் சிற்றி
னன்மணி யொளியா லெல்லியும் பகலாய் நாடொறு மிலகுவ தஞ்சை
யன்னலார்பது மராகமாடங்க ளமர்ந்திட னளினங்க டோறும்
பொன்னினி தந்த வுருவமைந்தமரும் பொற்பது காட்டுவ கடுக்கும். (௱௨௯)

பலபலமணியி னிறமது வொளிரப் பத்திசெய் மாடங்க டோறு
மிலகிய குழையி லிடறிய வடிவே லெனமிளிர் மதர்விழிக் கிடைகார்த்
திலகவாண் முகத்தார் வதிந்திடுங் காட்சி திகழ்விமா னங்களி லிவர்ந்து
நிலவுணும் புட்கள் களித்திடக் கோடி நிறைமதி யுதிப்பதை நேரும் (௱௩௰)

வளங்கெழு தஞ்சைப் பொன்னனார் வதன வனப்பினுக் கிணையலே மென்ன
வுளங்கனன் றிட்டுக் கன்றிய திதுதானுட் பொருள்வெளி யுறவிளக்கும்
பளிங்கெனயாரு மறிந்திடத் தோற்றும் பரிசுகண் டுடுபதி யகத்திற்
களங்கமுண் டென்று புகலுவார் கருத்த காரணமறிகில ரம்மா. (௱௩௧)

கன்னலஞ் சிலைவேள் செங்கரங்கூப்பக் கவின்குடி கொண்டிடுங் கொங்கை
யன்னமென் னடையா ராடலுமியாழு மமுதமு மெனுமொழி யார்தம்
நன்னயப் பாடற் சுவையையு முணர்ந்து நாணியன்றோ வரம்பையரா
மின்னிடையாரும் வீணைவல்லவரு மேதினி காணுதன் மறந்தார். (௱௩௨)

முத்தரும் வியந்து நன்றிதென் றிடவே முதலவன் றனைத்துதித்தன்பாய்ச்
சித்தமதுருகக் கண்பளித் துரோமஞ் சிலிர்த்திடப் பரவச மாகப்
பத்தர்கள் பசனை செய்வது கண்டு பரிந்துகொங் கணொனு முதிர்ந்த
சித்தரு மிவ்வூ ரகன்றிடேமென்று சிறந்துறை தஞ்சைமாநகரோ. (௱௩௩)

திங்களும்பதும ராகமும் வளையுஞ் செங்கரும் புங்கொடி மின்னும்
பொங்கொளிர் வதன மிதழ்களந் தோள்கள் பொற்புறு மிடையென வமைத்தே
யங்கதின் காருங் கடிதுவெண் மையும்பா கதனையுஞ் சலஞ்சலமதையும்
பங்கமி லளகந் தனநகை சொற்கட் பதித்ததாம் பாவையருருவம். (௱௩௪)

மைம்மலையெனக் கைம்மலைக் கணமுலவ மதமிழிந் தாறதா யரலம்
பெய்மத னனைய வாடவ ராடலிடுபரி நடத்திலிற் சேறாய்
நெய்ம்மருவியவேல் வீரர்த மிரத நெருக்கலா லுலர்ந்திடு நிதமு
மையிரு நூறு தரமதாமாறு மணிநகர் தஞ்சையா வணமே. (௱௩௫)

தருமநல் விதங்க ளனைத்தையு முணர்ந்து தாமதை நடத்தலும் பொருள்செய்
மருமமீதென்று தீவினையுறாமல் வளர்நிதி யீட்டலுங் காமப்
பெருமித முறலு மிதிற்கரந் தின்பப் பிரம வித்தினி திருப்பதனாற்
றிருமலி தஞ்சை வள்ளுவ ரருளிச் செய்தநூற் கிணையதாத் திகழும். (௱௩௬)

இன்னதன் மையதாஞ் தஞ்சையி லெய்தி யெழிலுற வளமெலாங் கண்ட
நன்னெறி தவறா மன்னவன் சிவிதா னிராஜரா ஜேஸ்வர நண்ணிச்
சன்னிதி பொலியுந் தஞ்சைபு ரீசர் சரண்பணிந் தின்பமீ தூர
வன்னையா னந்த வல்லிபொற் றாள்கள கத்தினிற் கொடுமகிழ் வடைந்தான். ()

தஞ்சையின் றளிகைச் சங்கரனடியைத் தாழ்ந்துமே வசிட்டமா முனிவர்
நெஞ்சக மகிழ வருச்சனைபுரிந்த நிறைகரு கூலநாதனையுந்
தஞ்சமென்றவருக் கஞ்சலென்றருளுந் தயாபரி பதங்களுந் தொழுதா
னஞ்சிறைப் புறவுக் காய்த் துலைபுக்கி யரும்புகழ் படைத்தநல் லரசன். (௱௩௮)

செம்பியன் றனக்கு மாருதியருளுந் திறமதை யுணர்ந்துமே துருவி
யம்புவி யதனிற் கண்டுபூ சிக்க வற்புத வரங்களை யுதவுஞ்
சம்புவாம் பிரகதீ சனைப்பணிந்து தண்ணரு மலரொடுத் தருச்சித்
தும்பரும் வியக்கப் பரவியின்புற்று னுலகெலாம் பொதுவறப் புரப்போன். ( )

அட்டமாசித்தி யடைந்துமே தேக மழிவிலா நித்தியம் பெற்றுக்
கட்டதாம் பாச மறுத்துமேல் வீடு கண்டுமே சுடரொழி யுருவாய்
நிட்டைசா தித்தே யறுவரா தாண்ட நின்மலக் கொங்கணர் பூசை
யிட்டமாப் புரியுங் கொங்கணேச் சுரரா யிறைஞ்சியே கனிந்துபூசித்தான். ()

சீதமா மதிசேர் செஞ்சடையானுந் திருநெடு மாயனும் வேறாம்
பேதமென் றியானை கண்டவந்தகர் போற் பேதுறு மய்யம தொழிய
வோதுசங்கரனா ரணப்பெய ருடனே யோருரு வாகியே விளங்கு
நாதனைப்பரவி நல்லருள் பெற்று நயந்தனனு னிலம் புரப்போன். (௱௪௧)

குழைபொரு நெடுங்கண ருண்மழைபொழியக் குருமணி கவுஸ்துவத் தோடு
விழைவுடன் கமலை விரும்பிவீற் றிருக்கு மேன்மைசே ரகலமுந் தோளுங்
கழைமதன் றாதை யிவனென வெழில்தான் காட்டிடக் கவின்குடி யிருக்கும்
மழகிய சிங்க முகுந்தனைப் போற்றி யன்புடன் றுதித்தன னரசன். (௱௪௨)

ஆலயினிற்கா வைம்புலா திகளா லடலுறு மன்பருக் கிரங்கிக்
காலமாமாரி யெனவருள் சொரியக் கருணையுற் றெழுந்துமே தஞ்சைக்
கோலநன் னகரில் வம்புலாஞ் சோலைக் கோயில்கொண் டினிதமர்ந் திருந்த
நீலமேகத்தி னடியிணை பரவி நெஞ்சக மகிழ்ந்தன னிருபன். (௱௪௩)

கஞ்சனுமமரர் தலைவனு முனிவர் கணங்களும்வேதமோர் நான்கும்
பஞ்சரித்திரங்கி யேத்தியே போற்றப் படருமஞ் ஞானமா மிருடா
னஞ்சியே யோட வவிரொளிக் கிரண மருள்கரு ஞாயிறதான்
தஞ்சைமா மணியை நெஞ்சுறப்பணிந்து தாண்டின னிடரெனுங் கடலே. ( )

வேறு

ஆலை யம்பல வாகுஞ் சிவத்தலஞ்
சால வேயுள தஞ்சந கரினைச்
சீல மாய்வலம் வந்துசி வியென
ஞால மேத்து நரபதி யேகினான். (௱௪௫)

தெக்க தான திசையிலோர் காவதம்
மிக்க கோடை வெதுப்புற வேயெய்தித்
தொக்க கானத்தி லுள்ளொரு சோலையிற்
புக்கிருந்து புழுக்கம தாறினான். (௱௪௬)

அத்தி தேரொடு மாடற்புரவிகள்
சுத்த வீரரச் சோலையிற் றங்கியே
புத்த நல்ல முதிர்சுவை போனகஞ்
சித்த மின்புறச் செய்யலுற் றாரரோ. (௩௪௭)

மன்னர் மன்னன்றன் மந்திரி மார்தமை
நன்னயம்பெற நோக்கியே நாமின்று
பொன்னி தழ்க்கொன்றை பூண்டபு ராந்தகன்
சன்னி தித்தொழச் சார்ந்தில மேயென்றான். (௩௪௮)

ஈசன்சேவையி லாம விடருறும்
மாசில் மன்னன் மனக்குறிப் போர்ந்தவர்
நேசர் சாரண னாக்கண்டு நீள்சுடர்
தேசுலாவுஞ் சிவாலயந் தேடினார். (௩௪௯)

இன்ன ணம்மிங் கிருந்திடு மேல்வையிற்
றுன்னியே தொழு தேயுடற் சோர்வுடன்
மன்ன னேபரி மாவுக்கோர் மேட்டிடற்புல்
என்னி ருங்கரத் தெற்றின னெற்றலும். (௩௫௰)

பைம்புல் வெட்டும் படைபடப் பாரினிற்
செம்புன லெங்குஞ் சிந்திடக் காண்டலும்
வெம்பி நெஞ்சம் விதிர்விதிர்த் துன்னளி
நம்பி வந்தன னான்பிழை செய்திலன். (௩௫௧)

என்று கூறிட வேந்தல்வி யப்புட
னன்று நன்றிவ னாவுனை யென்னவே
சென்று நோக்கித் திகைத்துளஞ் சிந்தியாக்
கன்றி யேயுடன் கம்பித்துக் கூறுவான். (௩௫௨)

எந்தக் காலத்து மிந்தவுற் பாதந்தான்
வந்த தென்று வழங்கிடக் கேட்டிலே
னெந்த னுக்கின்று சென்மத்தி லெய்திய
மந்த னார்பல னோவென மாழ்கினான். (௩௫௩)

பூதத் தின்கடும் புன்செய லோவன்றி
நாதன் சோதனை நாடிடுஞ் செய்கையோ
வேதென் றுன்னுவ தெவ்வகை செய்குவ
தோதென் றோதவு ணர்ந்திது வோதுவார். (௩௫௪)

ஆபத் பாந்தவ னாயஞ்ச லென்றிடுந்
தீபச்சோதி திருவரு ளுண்டெனிற்
றாப வெவ்வினை யாவுந்த விர்ந்திடும்
சோப நீங்கத் துருவல் கடனென்றார். (௩௫௫)

தெள்ளி தின்னுணர் மந்திரி செப்புத
லுள்ளங் கொண்ட வுலம்பொரு தோளினா
னள்ளிப் பாற்சொரிந் தங்கையி னானிலம்
கிள்ளிக் கிள்ளியே கீன்றுது ருவலும். (௩௫௬)

வேறு

இந்திரன் முனிவர் வானோ ரொண்ணருஞ் சித்தராதி
மந்திர மோதிமிக்க மாதவஞ் செய்து காணாச்
சுந்தரச் சோதியான சுயம்பதா மிலிங்கந் தன்னைக்
கந்தனுக் கிணையா மன்னன் கண்களாற் றெரியக் கண்டான். (௩௫௭)

கண்டன னிலிங்கந் தன்னிற் கடியவெவ் வுழவா ரத்தாற்
கொண்டதோர் வடுத்தான் றிங்கட் கொழுந்துபோல் விளங்க மன்ன
னண்டர்நா யகனுக்கென்று லடுத்திந்த வடுவுண்டாகத்
தொண்டனேன் பிழைத்தே னென்னத் துயரமாங் கடலுற் றாழ்ந்தான் (௩௫௮)

கண்கணீர் பனிப்பத் தேகங் கம்பித்துப்புளக முடித்
தண்கிளர் தரளமென்னத் தனித்தனி வெயர்வ ரும்பப்
புண்கணோர் திவேலிட்டுப் போழ்வது போல வுள்ளந்
திண்கணெஞ் சுடையே னென்று திகைத்துள மழுங்கி நின்றான். (௩௫௯)

சமரினி லொன்னார் கைவேறைத்ர தோரிரணந் தன்னைக்
குமரனுங் கொழுநன் மெய்யிற்கொண் டிடக்கண்ட கற்பின்
அமருநன் மடவாள் காண வகந்துடி துடிப்பவேங் கிக்
குமிழிநீர் கண்கள் சோருங் கொள்கைய தான மன்னன். (௩௬௰)

உளமது வுருகியிங்ங னுற்றவிச் சுயம்பின் மூலந்
தெளிவுறக் காண்டு மென்று தீஞ்சுவைப் பால் பெய்தேமண்
ணளிரதாய்ப் பங்கமெய்த நனைத்துக்கை நகத்தாற் கீழ்த்தே
வளவுற வாழ்ந்து பார்க்குள கழ்ந்துமே பார்க்குந் தோறும். (௩௬௧)

அவனியு ளீரேழான வாதார பீடமட்டுஞ்
சிவனுருக் கண்டு மூலந் தெரிந்திலா னினிச்சோதிக்கி
லவமெனத் துருவ லின்றி யக்காரந் தேன்பால் மிக்க
குவிதரப் பெய்துபூமி கோதறச் சமன்செய் திட்டான். (௩௬௨)

பந்தமோன் றமைத்து நெஞ்சிற் பரிவொடு பூசித்தேத்தி
வந்திதிச் சுயம்புலிங்கம் வரலாறு தெரியோமென்று
சிந்தையுட் கவலையுற்ற சிவியேனு மரசன் கேட்ப
வந்தர வாணிமிக்க வன்புடன றைந்ததம்மா. (௩௬௩)

அயன்புவி யாக்குங்காலை யவிரொளிப் பரிதிதேவ
னியமமாய்ப் பூசைசெய்த நின்மலச் சுயம்பிதேநம்
மயமிது பரிதிநேம மாகுமித் தலங்கண்ணுற்றோர்
பயன்மிகப் பெறுவாரின்னும் பகருதுங் கேட்டி வேந்தே. (௩௬௪)

தாழ்விலா விந்தலிங்கந் தரணியில் வளர்தல் காண
வூழிக டோறும்வெய்ய வொளிதரும் பரிதிவந்து
பாழியா தாரபீடம் பதித்துப் பூசித்துமிக்க
வாழியாம் வரங்கள் கொள்ள வளந்தருமூர்த்தி யீதாம். (௩௬௫)

கங்கையும் பாவந்தீரக் கருதிவந்தாடுகின்ற
துங்கமாந் தீர்த்தமிந்தச் சூரியபுஷ்கரிணி யாகும்
பங்கமி லாததேவர் பங்கயக் கரத்தாற்றொட்ட
திங்குள தீர்த்தந்தேவ தீர்த்தமென் றிதனிநாமம். (௩௬௬)

இத்தல மூர்த்தி தீர்த்த மேதமெல் லாமகற்றி
முத்திவீ டளிக்குமென்று முன்னநு பவங்களெல்லாஞ்
சித்தம துணர்ந்து நன்றாத் தெளிவுற விரித்துரைத்த
வத்தனு காயவாணி யரசனுக் கருளு மின்னும். (௩௬௭)

பத்தகேள் நமதுகண்ணும் பரிதிபூ சித்தலாலே
யித்தல நமது நேத்ர மென்பதற் கையமின்றே
சித்திகள் செல்வஞ் செல்வர் சிறப்புடன் சீர்த்திமேலா
முத்தியும் வேண்டினோர்கண் முயலுமித் தலங்காணன்றே. (௩௬௮)

தில்லைந மிதயத்தானஞ் சீர்பெறு பரிதிநேமம்
சொல்லரு நயனத்தானந் துளக்கமின் முத்தியீய
வல்லதாந் துவாதசாந்த வளங்கெழு மாலவாயா
மல்லதோர் தலங்களெந்தன வயவமாகுமென்றே. (௱சுக)

உன்குலத் தலைமை பூண்ட வொளிகெழு பரிதிதேவ
னன்புடன் பூசிக்கின்ற வற்புதச் சுயம்புக்கன்பாய்ப்
பொன்மதி லாலயங்கள் புதுக்கிப் பூசிப்பதுந்தன்
றன்கட னுதலாலே தகுந்திருப்பணிநீ செய்வாய். (௱எ0)

அசரீரி யாகவீச ரருளிய மொழிகள் கேட்டின்
பசரீரி யாகமன்னன் பரவச முற்றுநற்றே
வசரீரி யென்னுஞ்சித்தர் மாதவர் முதலோர்க் கெட்டா
நிசரீறி லாதார் வாக்கு நேர்ந்ததெத் தவமோவென்றே. (௱எக)

எதிர்வருஞ் சகுனத்தாலே யெய்திய பயனே தீர்த்தம்
விதிமுறை யாடிவந்த மெய்த்தவப் பயனே புள்ளுக்
கெதிரிலா வாக்கையீய்ந்த வேசறு பயனே வன்றிக்
கதிரவன் குலத்தெம் முன்னோர் கடுந்தவப் பயனே காணேன். (௱எஉ)

இந்தநற்றலத்தி லீச னெய்தவு மருள்செய்தன்பாய்
மந்திர முரைத்தவாக்கால் வசனித்து மகிழ்செய் துற்ற
பந்தமதற்றுமேலாம் பாக்கியம் பெறவு மென்னைச்
சொந்தமா யடிமைகொள்ளச் சுதினம தெய்திற் றன்றே. (௱எ௩)

கண்ணிலாப் பிறவியந்தர் கண்கள்பெற் றதுபோ லுங்நீண்
மண்ணினில் வறியோன் மிக்க வானிதி பெற்றுற்போலு
மெண்ணறுஞ் சமரில் வென்றே யெதிர்வருங் கொழுநற் காணும்
பெண்ணல முடையார்போலும் பிறங்கியே துதிக்கலுற்றான். (௱எ௪)

வேறு.

எங்கள் குலத் தலைவனின்ப முறவே பணியுந்
திங்களணி வேணிபுனை தேசோ மயநிதியுன்
பங்கயத்தா ளுயினேன் பரிந்தேத் தவுமுனது
செங்கனிவாய் விண்டுமொழி செப்பிடவும் பெற்றேனே. (௱எ௫)

அளியுருவா யம்பிகைதா னன்பாய்த் தழுவவுமென்
புளகமுலை யால்வடுக்கள் பூத்ததிரு மேனிதனி
லுளவாரம் பாய்ந்துதிர மோடுதல்கண்டும் விழிகள்
களையா திருக்கின்ற கன்னெஞ்ச னுனேனே. (௱எ௬)

கொலைத் தொழிலே நற்றொழிலாய்க் கொன்று புசிக்கும்வேடக்
குலத்தலைவ னின்கண் குறிப்பறிந்து தன்விழிக
ளலைத்துக் களைந்துவைத்த வன்புகண்டு மேயாவி
துலைக்கநினை யாதவென்போற் றொண்டருண்டோ சொல்லிடுவீர். (௱எஎ)

தொண்டரெல்லா நீயியற்றுஞ் சோனைக்கெல் லாந்துளங்கா
விண்டொடுகற் போற்றுணிந்து மேலாம் பதமடைந்தார்
தெண்டிரைசூழ் வையகத்திற் றேடரும் பேதைக் குணத்துப்
பண்டைவினை யேனுமந்தப் பரிசுறப்பா வித்தனையே. (௱எ௮)

பரிகலத்துக் கேயிமையாப் பார்வையொடு வால்குழைத்துத்
தெரியமுக நோக்கிநிற்குஞ் சிறுநாய் தமனியத்தி
னரியசன மேறவன்பா யருளியநின்பேருள்ளப்
பரிவிற் கிணையுளதோ பாரேழும் பார்க்கினுமே. (௱எ௯

வேறு.

இவ்வண்ணந் துதித்துவானி லெழுந்தவாகாய வாணி
செவ்வையாம் பொருள்கடன்னைத் தெரிந்துளங் கண்டுநின்ற
அவ்விய மில்லா மன்ன னுலைய மியற்றவெண்ணிக்
கொவ்வைவா யுமையைநாடிக் கோதறக் கண்ணுற் கண்டான். (௱௮௰)

குஞ்சர முகனை வைவேற் குமரனை யேனை யோரை
யெஞ்சலி லாமற்றேடி யினிதுடன் கண்டபின்னர்
நெஞ்சக மகிழ்ந்துமிக்கநிதிகளை நேர்ந்து கோயிற்
கஞ்சனும் வியக்கக்கட்டிக் களித்தன னின்புற்றன்றே. (௱௮௧)

கங்கைவேணியற் கும்பாகங் கலந்தவம்பிகைக்கும் பொன்சே
ரங்கணர் தமக்கு ஞானவைங் கரன்றனக்கும்வெற்றித்
துங்கவேற் கந்தனார்க்குஞ் சூழ்பல தேவருக்குந்
திங்களின் சுதையீதென்னத் திகழ்ந்திடுங் கோயிற் கண்டான். (௱௮௨)

ஆலயஞ் சமைத்துச்சுற்றி யைம்மதிற் பிரகாரங்கள்
சாலவே யழகாச் செய்து சந்திரன் கதிதனக்கு
மேலதாங் கோபுரங்கள் விதிவழி யமைத்துச் சித்ரக்
கோலமண் டபங்களெங்குங் குறைவற வியற்றினானே. (௱௮௩)

தொல்வினை தனையும் போக்குந் தூயதீர்த் தத்தடங்கள்
பல்வள மாயியற்றிப் படித்துறை யழகதாக்கிச்
செல்படிந் துலவுஞ்சோலைத் திருமலர் நந்தனங்கள்
ஒல்லையி லியற்றியின்ப மோங்கிய மன்னனின்னும். (௱௮௪)

மாசினை யகற்றுந் தீர்த்த மாகிய தடங்கள் சுற்றும்
பூசித்து வச்சுவத்தம் பொதும்பர்செய் தழகதான
பாசிலை வடமும் வைத்துப் பரனடி யார்கட்கெல்லா
நேசமா மடங்கள்கட்டி நேர்ந்தன னன்னதானம். (௱௮௫)

சத்திரம் பலவுங்கட்டிச் சதுமறை யோர்கட் கெல்லா
நித்தியம் பாலக்கார நெய்கனி வருக்கத்தோடு
சுத்தமாம் போனகங்கள் சுதையென வகுத்தி யார்க்கும்
வித்தமா மாடையோடும் வேண்டிய துதவிப்பின்னர். (௱௮௬)

சங்கரன் கோவிறன்னைச் சார்ந்தமேற் பக்கமாகத்
துங்கநான் மறையோர்க்கெல்லாந்தூயவக்கிரகாரங்கள்
சிங்கலிலாமற் செய்து தெருக்கண்மற் றேர்க்கொழுங்கிச்
சங்கொடு மேளதாளச் சங்கீதர் மறுகுஞ் செய்து. (௱௮௭)

உருப்பசி யரம்பையோடு முத்தம வணங்கனாரும்
விருப்புடன் மெச்சிவேட்கை விளைதர வுருவு வாய்ந்து
பொருப்பிரண் டதனைத் தாங்கிப் பூங்கொடி நின்ற தேய்க்குஞ்
சுருப்பிமிர் கூந்தற் செவ்வாய்ச் சூளையர் மறுகமைத்தான். (௱௮௮)

பண்டுநம் பரிதி தேவன் பரிந்தவாதனஞ்செயன்பு
கொண்டதே வளர்வதாலே குறித்தது தவிர்நீ யென்று
விண்டவா காயவாணி விதிப்படி யபிடேகாதி
யண்டநா யகற்குப்பூசை யமைவுட னடத்தலுற்றான். (௱௮௯)

காலந்தப்பாமலாறு காலமும் பரிதீசற்குச்
சீலமா யாகமத்தின்றிறப்படி யேநன்னான்கு
சாலநல் லுபசாரங்கள் சதிருடன் செயவமைத்தே
யாலமுண் டோன்சொற்கேற்க வணிவிழா நடத்த வெண்ணி (௱௯௰)

மேடமாந் திங்கடன்னின் மிருகசீரிடநா ளோர்ந்து
தேடருந் துவசநாட்டித் திருவிழாத் தொடங்கி யாரு
நாடியே யின்புற்றோங்க நடாத்தியே யத்தநாளிற்
பீடுறும் பரிதி தேர்ப்போற் பிறங்கிடு மிரதமேற்றி. (௱௯௧)

இம்பரோ டும்பர்போற்ற விரதமா ரோகணித்து
மும்பலை யுரித்தமூர்த்தி யுவந்துமே யின்பமெய்தக்
கம்பமால் யானைவேந்தன் களித்திட வரங்க ணல்கிப்
பம்பியே வியங்களார்ப்பப் பைம்பொனா லயத்துட் புக்கார். (௱௯௨)

சித்திரைப் பருவந்தன்னிற் சிறந்ததோர் தீர்த்தவாரி
பத்தியா நடத்திமன்னன் பரிவுடன் மகிழ்சிகூர்ந்து
முத்தனைய் மூவாண்டாங்கு முயன்றுமே வைகுநாளி
லத்தனார் கனவிற்றோன்றி யன்புட னருளலுற்றார். (௱௯௩)

வேந்தனீ பரிதிபோலு மேதகு பத்திவாய்ந்து
சாந்தனைய் நம்மைப்பூசை சந்ததம் புரிந்ததாலே
நீந்தரு மகிழ்ச்சியுற்றே நீயுநின் னயோத்தி தன்னிற்
போந்துமே யின்பமுற்றுப் பொருந்தநம் பதத்தில் வாழ்வாய். (௱௯௪)

என்னவே விழித்துமன்ன னிருகணீ ரருவிபாயத்
தன்னிகரிலாதவின்பந் தலைக்கொள விதிர் விதிர்த்தே
முன்னமெத் தவஞ்செய்தேனோ முத்திதந் தாளுமீசர்
என்னெதிர்த் தோன்றிவார்த்தை யியம்புற வென்றின் புற்றான். (௱௯௫)

தாடரவந்து நின்ற சங்கர ருருவமான
தேடரும் பருவந்தன்னைச்சித்தத்திற் பதியவைத்தே
யாடினன்பலகாலுந்தா னன்புடன் கனிந்துகீதம்
பாடின னின்பமென்னும் பயோததி படிந்திட்டானே. (௱௯௬)

முத்துமா மணியிழை முதலிய பணிகள் பைம்பொற்
சித்திரத்தூசுகோடி செம்பொனின் குப்பையோங்கும்
மத்தமா மதத்தவேழம் வாம்பரி நிரையின்கூட்டம்
சத்திரஞ் சிவிகைமுத்தின் சாமரை பலவுந் தந்தான். (௱௯௭)

அருட்கட லாகிநிற்குமம்பிகைக் கன்பதாகத்
திருக்கிளர் மணிகுயிற்றிச் செய்தநற் பணிகளோடு
குருக்கிளர் செய்யபட்டுங் கோதறு பொன்னுமுத்தும்
விருப்புட னீய்ந்துமற்ற வேணபல் வரிசை செய்தான். (௱௯௮)

வேறு.

கவரிகடங் கன்றுள்ளிக் காலுகின்ற தீம்பாலுங்கனியாநிற்குஞ்
சுவையுறுவா ழைக்கனியும் பலவீன்ற குடக்கனியுஞ் சூழ்ந்ததேமா
நவையறுமா நற்கனியி னிரதமுமே கலந்தோன்றாய் நாளும் பாயத்
தவமிகுமா ஞானிகட மெய்ப்புளக மெனப்பயிர்க டழைக்கும் பேரூர் (௱௯௯)

பாசமதை யறுத்தகலும் பரனடியா ரெனவலையைப் பாய்ந்துபீறி
வீசிவெடி போங்கயலா லுதிர்தெங்கின் கனி கமுகின் மிடற்றிற்றாக்கி
மாசிலாப் பழமுதிர்த்து வருக்கை பீறிக் கதலி வனமதான
பாசொளியின் றார்முரிக் கும்பழனங் கணிறைந்து திருப்படரும் பேரூர் (௨௱)

சச்சிதா நந்தமுறு சிவயோகி விழியிலின் பஞ்சார்ந்த கண்ணீர்
நிச்சலுமே ததும்பியுதிர் நேர்மையென வுழவர்களை நெடுங்கைக் கொள்ளா
அச்சமுறப் பகடடிக்கத் தெரிததமுத்தம் பங்கயத்தி னலரினின் றும்
உச்சிதமா யுதிர்ந்துடுக்களரும்பியவின் னெனக் கழனி யொளிர்நன்னாடு (௨௱௧)

அமலமாய் நிருவிகற்ப மடைந்தமுத்த ரபரிமிதா நந்த மீறித்
தமதெனக் கொள்ளுதல் விடுத விரண்டுமறச் சுகாதீதஞ் சாய்ந்த தேய்ப்பக்
குமுதமலர்த் தேனிரவிற் கொள்ளைகொண்டு புலரியிலே கோதி லாத
கமலமலரது தேக்கி வண்டுறங்க வளம்பெருகு கழனி நாடு. (உ௱உ)

நித்தியமின் ருக்கையிது நிற்கையிலே சிவபோக நிறைத்து கொள்ளச்
சித்தமது வலித்துமிக வுடலொறுத்துப் பரமசுகந் தேடு கின்ற
முத்தரெனக் கரும்பாட்டி யடு புகையை முகிலெனவே முழக்கி மஞ்ஞை
தத்தியுளங் களித்தாட வளங்களெலா நிறைவுறவே தழைக்குநாடு. (உ௱௩)

மன்னுயிர்தன் னுயிர்போல நினைந்து சிவயோக மதின்மகிழ்ச்சி யாகி
இன்னமுத மெனயார்க்கு மின்பமுற மொழிகின்றோ ரியல்பி தென்னக்
கன்னவிர தச்சுவையின் கனியுதிருந் தேமாவிற் களித்தி ருந்து
நன்னய மாய்க் குயில்கூவும் பொதும்பர் சூழ்ந்திட வளங்கணல்குநாடு. (உ௱௪)

இந்தவளம் பெருகுநாடு களிலொரு நூறுநா டெழில்வே லேந்து
கந்தனை யைப்பயந்த பரிதீசர் பூசனைக்காய்க் கனிந்து நாளுஞ்
சொந்தமா னியமாகத் தொகுத் தீய்ந்தா னிரவிகுலத் தொல்லோர்க் கெல்லாம்
முந்துகீர்த் தியும்படைத்து முழுதுலகும் பொதுவறவே முறையிற் காப்போன்

இப்பெருநா டொருநூறும் பரிதீசர் பூசனைக்கா மிதுபிழைத்தோர்
அப்பணியுஞ் சடையரனையறுமுகனை யாகமத்தையரும்வேதத்தைத்
தப்பிதமாய் நிந்தித்தோ ரெய்தியமீ ளாநரகஞ் சார்வா ரென்று
செப்புப் பட்டயத் தெழுதிச் சந்நிதியில் வைத்திறைஞ்சித் திகழ்ந்தான்மன்னே

பூசிக்குமாதி சைவர்தங் களுக்கு மீரைந்தூர் பொலிவ தாக
நேசித்துக் கொடுக்கின்றேன் சங்கரற்குச் செயும்பரிசை நிகழ்த்த லென்றே
மாசற்றபரிதி தடத்தருகினிலே சோட சமாதானத் தோடு
தேசுற்ற நவமணிகண் மலைகளெனக் குவித்தளித்தான் சீர்த்தி மிக்கான் (உ௱எ)

அன்னமிடு சத்திரங்க ளனந்தமமைத் தெக்காலு மழிந்திடாத
மின்னலதாத் திசைமுழுதும் புகழ்நிறுவிக் கொடைமுரச மிக்கவார்த்துச்
சொன்னமதைச் சோனைமழை யாச்சொரியு முகிலனைய தோன்றலீய்ந்த
நன்னயதா னப்பெருக்க மளந்தறிந்து கூறுவதென் னுடுங்காலே. (உ௱அ)

தன்னுயிர்போன் மன்னுயிரைப் புரப்பனிவ னென்பதற்குச் சான்றதாக
வன்னமணிப் புறவினுக்குத் துலைப்புகுந்து கீர்த்திபெற்ற மன்னர்மன்ன
னின்னமுதஞ் சிந்துதல்போற் பரிதீசர் தனைத்துதித்தே யிறைஞ்சி யேத்திப்
பொன்னணிகண் மணிப்பணிகள் காணிக்கை யாகவைத்துப் புளகம்பூத்தான். ()

விடையேறிப் பவனிவரும் பரிதீசர் பெருங்கருணை விடைபெற்றன்பாப்
படையேறுங் கரதலத்துப் படையேறி முன்னடக்கப் பணைக்கைவேழ
மடையேறிக் கரையுடைத்துப் பாய்புனல்போன் மதம்பெருக மணித்தேரேறிக்
குடையார நிலவெறிப்ப வழிகொண்டு நகரடைந்தான் கொற்றவேந்தன். உ௱௰

மன்னவ ரவினைக்கண்ட மந்திரிமார் தம்மோடு மற்றோரோடு
நன்னய மாய்த்தான்கண்ட புதுமைகளுந் தீர்த்தமதி னலமுஞ் சொல்லி
பன்னன்வரும் பரிதீசர் தரிசனமுந் தானடைந்த பரிசும்வாயா
லின்னமுதம் போலுரைத்துச் சந்ததமு மறவாம லிருந்தானன்றே. (உ௧௧)

சந்ததமு மறவாமற் பரிதீசர் தனையுன்னிச் சலதி பொங்கி
வந்ததென வருஞ்சச்சி தானந்தந் தனிற்படிந்து வருடந்தோறுஞ்
சுந்தரமாம் பொற்றுகிலும் பசும்பொன்னுந் தந்தனுப்பிச் சுரர்கள் வாழ்த்த
இந்திரன்போல் வாழ்ந்திருந்தான்சிவிச்சக்கிரவர்த்தியெனவிசைகொள்வேந்தன்

சிவிச்சக்கிரவர்த்தி பூசித்தசருக்கம்

முற்றிற்று.

# தநதத்தன் பேறுபெற்றசருக்கம்.

கோசலைக் கரசாகிய சிவியெனுங் கோமான்
வீச லைத்திரு நதிகளிற் படிந்துமே வியவா
ஈச னும்பரி தீசனை வணங்கிய திசைத்தேம்
தேசு லாவிய வணிகன்றன் பேறையுந் தெரிப்பாம் (க)

தந்தியின்மருப் போடகில் சந்தனக் கோடும்
உந்தி யேகனை யொதிக்கிய கௌதமி யென்னும்
கந்த வார்புன லாற்றரு காமுகில் கது வச்
சிந்து தேமலர்ச் சோலைக ணீடுவ சிறந்து (உ)

பூவ லர்ந்திழி தேறலிற் புவிநனைந் திடலாற்
கா வெ லாந்தழைத் தோங்கியே கவினுறவிளங்கித்
தேவ ரூரொலாங் கமழ்தரச் செழுமல ரரும்பி
ஓவி லாதொளிர் பொழிற்கிணை யுலகில்வே றுளதோ (ந)

புன்னை செண்பகம் பாடலங் குங்குமம் புனைதீர்
பொன்னந் தாதுகு செருந்தியும் பூநிறை பிண்டி
வன்னி சந்தனந் திலகமுங் குரவமும் வாசந்
துன்னு மௌவலுஞ் சாதியும் படருமச் சோலை (ச)

வாசச் சண்பகச் சினைபடர் மௌவலங் கொடிதான்
நேச நாதனைப் பிரிந்திடாக் குலமக ணிகரும்
மூசி யுண்டுதே னற்றபூத் தனைவிட்டு முயன்று
வேசி மாதர்போற் சுரும்பினம் மறுமலர் விரும்பும் (ரு)

வந்த நல்விருந் தோம்பிமேல் வருவிருந் தழைப்பச்
சந்து போக்கிய வில்லறத் தாரெனத் தருக்கள்
சிந்து தேனளி யினங்களுக் களித்துநாற் றிசையும்
முந்துமாமணத் தாற்சுரும் பழைத்திடு முறையே (சு)

அஞ்சு கங்குயில் முதலிய புட்களு மன்பு
விஞ்சு கற்புடை யாரென மானமே பொருளா
நெஞ்சு கந்திடு கவரிமா வுழைமுயனெறிகூர்
இன்சொ லன்பர்தம் முளமெனச் சுகமுறு மின்கா (எ)

பிணிய கற்றுசஞ் சீவியென் றெவர்களும் பேசக்
கனித மிக்குள புதனிறை காவினி வியல் பாப்
பணியி ழைத்திடு பன்னக சாலையுண் டதனிற்
றணிவி லாவகிற் றூமமே சந்ததங் கமழும் (அ)

கோமி யங்கொடு தினந்தின மெழுகியே கொதுகீ
பூமிகீடஞ் செல்லெறும் பெலாம் போக்கியே செந்நீர்
தாமுண் வெய்யவாய்க் கிருமியு மின்றியே தணித்துக்
காம மற்றவ ருளவெனத் தூயதாங் காணில். (கூ)

வேறு

கலையுரி புலியதள் கரகந் தண்டுடன்
இலகிய சாலையி லினிய மெய்த்தவம்
நலமுறப் புரிபவன் ஞானகா ட்டனென்
றலகில்கா லங்களை யகற்று மாற்றலான். (௰)

நித்தியா நித்திய நிலைமை தேறியே
சுத்தனு யிகபரத் தொடக்க தும்வெறுத்
தத்திரம்புலன் விடையாதி தன்னையே
நத்திடா வகையறி வான டத்துவான். (௰௧)

புலன்வழி மனமது புக்கு றாமலும்
நலனில்பொய்யுலகினை நாடி டாமலும்
அலமுறு மிதமகி தாதி நட்பினுல்
மலர்தலுங் குவிதலு மாற்று மாட்சியான். (௰௨)

மெய்ம்மறை யுணர்ந்ததை மிக்க சிந்தனை
செய்பவன் குருமொழி தனிற்சி ரத்தையாய்
ஐயம தற்றுமே லமல வீடுறத்
துய்யவ ளுய்த்தவந் தொடங்கி நின்றவன். (௰௩)

தத்துவ சோதனை தனிலொன் றென்றதாய்
நித்திய மற்றதை நியதி நீக்கியே
சுத்தமா நிட்களச் சோதியானதே
முத்தர்க ளறிவுறு மோன மென்றுணு. (௰௪)

மிக்கதா கியசிவ யோக மீதெனுத்
தக்கதா ரகவழி சார்ந்து சோதியுட்
புக்கம னற்கமே பொருந்தி யோகமர்
முக்கியா னந்தத்தின் முழுகுஞ் சீர்த்தியான். (௰௫)

யானென தெனமன மடுத்துத் தோன்றிடு
மானதற் போதமா மாசொழிந் தொளிர்
தானவனுய்மன தற்றுச் சந்ததம்
தேனுறு சுவை யெனத் திகழு வானரோ. (௰௬)

நினைப்பொடு மறப்பற நிருவி கற்பமா
யனைத்துமே தானதா மமல ஞானமாங்
கனத்தினுன் ஞானமா காட்ட னென்றுபே
ரினத்தவ ரிட்டன ரோது நோக்கியே. (௰௭)

வேறு.

இவ்வித ஞான காட்ட ரிருந்தவ மியற்றுங்காலை
அவ்விய பாவ நீக்கு மருங்கவு தமியின் பாங்கர்
செவ்வைசேர் மணிகளாலுஞ் சீர்சிறந் தோங்கலாலும்
பவ்வவா ரிதியை யொக்கும் பாடலி புரமொன் றுண்டால். (௰௮)

பல்வளஞ் சிறந்தே யோங்கும் பாடலிபுரத்தில் வாழ்வோ
னல்வளத் தனதத் தப்பேர் நாயகன் வணிகர்தம்மிற்
சொல்வள நயத்தால்யூகச் சூழ்ச்சியாற் கொண்டு விற்றே
யெல்லையில் கோடிசெம்பொ னீட்டியே வாழுங்காலை. (௰௯)

அன்னவன் குமரன் மிக்க வழகுமெய் வனமும்பெற்றுக்
கன்னியர் மோகமீறிக் கலங்கியே கணிகைமாதர்
பொன்னெனத் திதலைபூத்த புணர்முலைப் போகம் வேட்டுப்
பொன்னொடு மணியுமுத்தும் போதவே நல்கலுற்றான். (௨0)

பாடிய விறலிமார்க்கும் பதம்பெயர்த் தபிநயத்தோ
டாடிய மாதரார்க்கு மணிமணிப் பணிகளீய்ந்து
வாடிய விடைதள்ளாட வளர்முலைப் போகந் துய்த்துக்
கூடியன்னோர்களிக்கக் குறையறப் பொருள்களீய்ந்தும். (௨௧)

தனமலையொ டுமுங்கப்புல்லித் தனமலை யீய்ந்து முத்த
மனமிரங்கித் தாவென்று மணிமுத்தவாரநல்கி
யனநடையார் களல்குலரவின் மென்பணத்தைக்காணத்
தினந்தினம்பொற் பணங்கள் செலுத்தியே சுகிக்கலுற்றான். (௨௨)

மாதர்கள் கடைக்கண் வீசும்வலையினிற்சிக்கி மோகப்
பேதையாய்ச் சுழன்று வேண்டும் பெருநிதியங்கை கொள்ளா
வாதரமுள்ள வேசையருளியபடியே மற்றோர்
தீதிலா நகரஞ் சேர்ந்தான் றெரிவையவர் தங்களோடே. (௨௩)

தனமிகத்தேடி வைத்த தனதத்த னிராசை பூண்டு
கனமுறு விவேகந்தோன்றக் கதிதரும் பரமபத்தர்
இனமதைப் பூசித்தேத்தி லெய்தும்வீ டெனவலித்துத்
தினமுமெய் யடியார்பூசை செய்தவனொருகு நாளில். (௨௪)

ஞானகாட் டப்பேர்பூண்ட நற்றவன் வரவுநோக்கித்
தேனிமிர் நளினங்கண்டு சென்றுவீழ் சுரும்பையொப்ப
மோனமா முனிவன்பாத முளரியில்வீழ்ந்து தண்ட
மானதொத் தசைவிலாம லவசமாக் கிடந்தானன்றே. (௨௫)

அஞ்சலென் றபயமீய்ந்த வருண்முனி தன்னைப்போற்றி
வஞ்சகமற்றநெஞ்ச வசியன்றன் வாழ்மனைக்குச்
செஞ்சொலா லழைத்துப்பீடஞ் சேர்த்தியே புளகமூட
வஞ்சிவின் றவன்றனுள்ள வாதர மொழியலுற்றான். (௨௬)

உலகெலா மகங்கை யாமலகமென வுணரும் வல்லோய்
நலமுறு காலமூன்று ஞானத்தா லறிவாயைந்து
பலனரு டருவுமானும் பணிசெயவா னந்தத்தி
விலகிய வடிகளிங்கணெய்த்வெத் தவஞ்செய் தேனோ. (௨௭)

கண்டபே றெல்லா மேலாங் கதிபெறு வதற்கும்பாதத்
தண்டரும்பதுமந் தீண்டுந் தரணியும் புனிதமாகக்
கொண்டுநீர் சஞ்சரிக்கக் குறித்தது குணுங்கர் நாய்நேர்
தொண்டனுக்கே நல்லின்பந் தோன்றிடப் பலித்ததன்றே. (௨௮)

பங்கினைப் பசியுளோனைப் பலபிணி யுழக்கின்றோனைப்
பங்கம தறவேசெய்யப் பரிந்திங்கு வலுவிலெய்துங்
கங்கையுஞ் சுதையுநான்கு கரணியு மெனயானுற்ற
தெங்கெனத் தேடிவந்தே யினியபே ரின்பமீந்தீர். (௨௯)

என்பொரு ளொப்பமற்ற வேதிலார் பொருளுமெண்ணி
மன்பொருள் செட்டுச்செய்தல் வசியர்த மறமென்னமற்
கன்மன மாந்தே னீப்போற் கனதன மீட்டிவைத்தேன்
நன்முக மாவறந்தா னுட்டிலே னுலோபத் தாலே. (௩0)

விருந்தினர் தம்மைக்கண்டால் வெருவியே விடுப்பன் யார்க்கும்
பரிந்தொரு காசுநல்கேன் பாவலர் வரவுகேட்டாற்
கரந்திட வல்லேன் ஜெண்டர் கண்ணுறின் முகமன் கூறிப்
பொருந்தியே தொழுதுபோக்கிப் பொருண்மிக வீட்டினேனே. (ருக)

என்றுதன் வரலா றெல்லா மியம்பியே வீட்டினுசை
யொன்றுமே யன்றியிந்த வுலகி னிராசையுற்று
நின்றனன் றரிசனத்தா னின்மல மாக்கியாண்டு
நன்றதாங் கதியானெய்த நாதனே யருடியென்றான். (ருஉ)

தவமியன்றிடவு மியோகந் தனைப்புரியவு நின்னாலே
யவனியி லேலாதென்ப தறிந்தன முந்தனுள்ளக்
கவனமே நன்றதென்று கழறியே ஞான காட்டர்
சிவ தரிசனத்தால் முத்தி சேரலா மென்றுசெப்பி. (ருங)

பங்கயன் றுதிக்குமிக்க பத்ரகே தாரங்காசி
கொங்குலா நைமிசங் நற்குருட் சேத்ரம வந்திவேத
புங்கவர் தொழும்விருத்த பூதரந் தில்லைமுத்திப்
பங்கதாம் பரிதிநேமம் பாரிலித் தலங்களொன்றில். (ருச)

பத்திசெய் தீசன்றன்னைப் பரிவுடன் பரிந்துபோற்றின்
முத்தியெய் திடலாமென்று முனிவரனினிதுகூற
அத்தனே யவற்று ளொன்றை யருளிலத் தலத்தைச்சேரச்
சித்தமுற்றன னென்றேதத் திருஞான காட்டர் சொல்வார். (ருரு)

பரிதிபூசிக்கவின்பம் பாவித்த சுயம்புந் தெய்வத்
திருவுரு முனிவர்சித்தர் செய்த வத்தலமுங் கங்கை
மருவியே படியப்பாவ மாற்றிடுந் தீர்த்தத் தோடே
யொருவழி கூடிமிக்க வுயர்ந்தது பரிதிநேமம். (ருசு)

அத்தலந் தன்னிலெய்தி யரியதா மிருதீர்த்தத்து
நித்திய மாடியந்த நிமலமாஞ் சுயம்பைப்போற்றிப்
பத்தியாய்ச் சதாசிவத்தின் படிவபஞ் சாட்சரத்தைப்
புத்தியுட்செபிக் கின்முத்தி பொருந்துத லய்யமின்றே. (ருஎ)

ஞானமில்லாமலந்த நாதரா லயங்கண்டாருந்
தானொரூர் செல்வோரந்தத் தலத்தினை மிதித்தாரேனும்
பானஞ்செய்தாரத் தீர்த்தம்படிந்து வெயர் வகற்றினாரும்
மீனமற்ற மலமாவா ரெனிலதை யியம்பலென்னே. (ருஅ)

என்னலும் வசியன்கேட்டே யிதுவியப் பஞ்ஞானத்தால்
மன்னினுங் கதியுண்டாமோ வென்னலு மகிதலத்திற்
றன்னிக ரில்லாயோக தற்பர ஞானகாட்டான்
அன்னவன்றன்னை நோக்கி யன்புட னருளலுற்றார். (ருகூ)

சகரர்தான் ஞானத்தாலே சானவியாடினாரோ
தகவிலா ரென்பாரேனுஞ் சார்ந்திடக் கங்கைசேர்த்துப்
புகரகற்றிடுதெலிந்தப் புவியறியாதோ தீயென்
றகமதி லெணுது திண்டிலது சுடாதிருப்ப துண்டோ. (சுo)

பூதியோ டுருத்திராக்கம் புத்தி பூருவமதின்றி
மீதுறப் பெறினு மேன்மைவிளைத்திடு மெனவும்வாயா
லோதிட வேண்டுமென்னு முணர்விலார் மொழிகட் குள்ளே
தீதறு நாமமெய்திச் சீர்தருந் தன்மை போலும். (சுக)

செங்கதிர்ப் பரிதிதேவன் சிரத்தையா யுளங்கனிந்து
கொங்கலர் சாத்தியன்பு கூர்ந்துபூசித்தேயின்பம்
பொங்குமத் தலத்திற் புத்தி பூருவமின்றியேனுந்
தங்குவோர் முத்திசேருந் தகைமைய ராவர் மெய்யே. (சஉ)

ஆதலா லத்தலத்தி லணுகினீ சிவபெம்மானைக்
காதலாப் பத்திசெய்யிற் கடக்கலாம் பவத்தையென்னப்
பேதையேன் சனனவேலை பிற்படப் புணையாத் தோன்று
மாதவக் கொழுந்தே யென்று மலரடி வணங்கிச் சொல்வான். (சங)

போன்னையே தெய்வமென்று போற்றுதலன்றி மற்றோர்
நன்னெறி யறியாவேழை நாயினே னுய்யும்வண்ணஞ்
சொன்னவப் புனிதபூமித் தொல்குறி தெரியக்கூறி
யென்னையீ டேற்றியாள்வீ ரென்றடி யிறைஞ்சலோடும். (சச)

அருளுட னிரங்கிஞான வைந்தெழுத் தினைப்போதித்துத்
தெருளுற நெறியுஞ்சொல்லித் தேடரும் பொன்னிநாட்டு
நிருபனு டஞ்சையென்று நிகரிலா நகர்த்தென் கீழ்பாற்
பரிதிமா வனமுண்டந்தப் பதிமுன்யாம் பகர்ந்ததாகும். (சரு)

பாரினிற் கூற்றைவென்ற பாலனோடநந்த யோகர்
சீரொடு தவஞ்செய்கின்ற திருப்பன்ன சாலைகாண்பா
யேருறச் செல்வாயென்று விசைத்துமே விடைதந்தன்பாம்
வாரிதி சாலைபுக்கி மாதவமியற்றுங்காலை. (சசா)

குரவரா ஞானகாட்டர் குளிர்மலர்ப் பாதந்தன்னை
யிருதயத் திருத்தித் தன்பா லிருந்தபொன் னனைத்தும்பண்டி
பெரியவொட் டகங்கடம்மிற் பெட்புட னேற்றிக்கொண்டு
பரிதிமா வனம்வந்துற்றான் பந்தமற் றின்பமுற்றான். சஎ)

பாசபந்தங்களற்றுப் பரமமாம் பதிபெற்றார்போ
லீசனாரன்பரான வெழிற்றன தத்தர்முத்தம்
வீசலைத் தேவதீர்த்த மென்கரை யிருந்துரோம
மாசினைக் களைந்து மூழ்கி மன்னியே பரிதிதீர்த்தம். (சஅ)

ஆடியே சேத்ரபிண்ட மன்புடன் றென்புலத்தோர்
வாடிய வாட்டந் தீர்த்து மகிழ்ந்திட வளித்து மெண்ணீர்
நீடிய தருப்பணுதி நேர்ந்துமே தசதானங்க
டேடிநான் மறையோருள்ளந் தெவிட்டிடச் செய்தபின்னர். (சகூ)

கால்புலன்களை யுமந்தக் கரணமுங் கடந்தஞானச்
சீலநன் மார்க்கண்டேயர் திருவடிக் கமலம்போற்றிச்
சாலவுமவர்கண்ணோட்டச் சலதியில் மூழ்கிவெய்ய
வாலமர் கண்டரன்ப ரருளடைந் தின்பமெய்தி. (ருய)

அன்பதா மாவேசத்தோ டழுதடி பரவிவிம்மி
யென்பு நெக்குருகக் கம்பித்திருக ணீரருவிபாய
நன்பதிதனிலே யீசர் நடித்தநாட் கமலம்பெற்றே
யின்பது பெற்றே னென்று வெந்தைதா ளிறைஞ்சிநின்றான். (ருக)

இரங்கியே இருகண்முத்த மிறைக்கத்தீ யிழுதாவுள்ளங்
கரைந்திடக் கனியாவிந்தக் கடையனுந் தொண்டரோடு
நிரந்தரங் கூடியாடி நிறைந்த பேரின்ப மெய்தப்
புரந்திடக் கடனினக்கே புண்ணியா வெனத்துதித்தான். (ருஉ)

அத்தனேபோற்றியெந்த னரும்பவப் பிணியையோட்டுஞ்
சித்தனே யுமையோர்பாகம் சேர்ந்தமெய்ச் சுடரோபோற்றி
புத்தமு தாகவன்பு பூத்தகற்பகமேபோற்றி
முத்தனும் பரிதியேத்த முன்னின்ற முதலே போற்றி. (௫௩)

அமலவா னந்தமியு மற்புதச் சுடரோபோற்றி
கமலநான் முகனுங்காணுக் காரணாபோற்றிதுன்பத்
திமிர சூரியனே போற்றி தேடருஞ் சுடரோபோற்றி
யெமையுமோர் பொருளாக்காக்கு மீசனே போற்றிபோற்றி. (௫௪)

போற்றியென் றடியில் வீழாப் புரண்டுசாட் டாங்கமாக
மாற்றரு மின்பமல்கி மனதற வவசமாகி
நாற்றிசை வியப்பதெய்த நடிப்பவன் கண்ணுற் காணத்
தோற்றியோர் சோதியந்தச் சுயம்பினிலடங்கிற் றன்றே. (௫௫)

சோதியா யீசனென்முன் ருேன்றிய தாலேயென்றன்
மீதுறு வினைகளெல்லாம் வேரறு மமலமான
வாதியாஞ் சிவக்கொழுந்தி னருளுமுண் டெனத் தெளிந்து
போதவா னந்தமெய்திப் புளகமுற் றுவகை பெற்ருன். (௫௬)

பூரித்தே யைங்கரத்துப் புதியதெள் ளமுதைப் போற்றிச்
சீருற்ற சண்முகத்துச் செய்யவேள் பாதமேத்தி
யேருற்ற வுமைபொற் பாத மிறைஞ்சியே யுளங்கனிந்து
காரொத்துக் கண்பனிப்பக் கருணையங் கடலு ளாழ்ந்தான். (௫௭)

வேறு

தொண்டு பூண்டுமெய் யன்பாத் தொழும்புசெய்யுந் திலவசிய
னண்டர் போற்றும் பரிதீசர்க் கான பணியு மணிவடமும்
புண்டரீகப் பதவுமைக்குப் பொற்றூ சொளிரும் புதுவணியுங்
கொண்டலெனவே பொற்காசுங் கொடுத்தா னெவரும் வியப்புறவே. (௫௮)

பூசைக்கான பொருளனைத்தும் பொருந்தவுத விக்கவினதுதான்
வீசக் கோவிலது புதுக்கி வேணபடியே வேதியர்க
ணேசித்தருந்தச் சத்திரங்க ணீரின்பந் தரடியாரைப்
பூசித்தூட்டு மடமுதலாப் புனிதவறங்க ளியற்றினனுல். (௫௯)

பருவமிசைந்த நாட்களிலே பரமன்பூசை யினிதியற்றிப்
பரிதிதீர்த்தக் கரையதனிற் பாங்கா யிந்நூற் பகர்ந்தபடி
யரியதானம் பலவியற்றி யவன்றன் பிதிர்க்க ளனைவர்களு
மருவிக் கயிலை காணியதா வாழச் செய்தே மகிழ்வுற்ருன். (௬௰)

தானமொருப தாருகச் சாற்றுநூலின் றகுதியதா
வானநாடும் வியந்திடவே வழங்கித்தேவதீர்த்தமதி
லானவடபா னந்தவன மமைத்தா னரிய கூவிளமுந்
தேனூர் துளவுமல் லிகையுஞ் செவந்திசாதி மருமுல்லை (௬௧)

அலரிநந்தி யாவர்த்த மரியவி தழிமந்தாரந்
திலகங் குரவம் பொற்கோங்கு செருந்திய சோகந் திகழுமுகை
யலருஞ்செஞ் சண்பகத் தோடுமெழ கதளிக்கு மாதவியு
மிலகக் கமழுமா மணிகளிழைத் தாலென்ன வியற்றினனுல். (௬௨)

புன்னையர சற்கெழின் முல்லைப் பொன்னைப் புணர்த்தித் தந்தையுட
னன்னையறல் பெய்வதுபோல வசோகோ டணியார் சண்பகமுந்
துன்னித்தேற லதுபெய்யத் தோன்றியோ மச்சுடர்க்கனலா
மென்னவழகார் நந்தனம் போலிவனும் பூத்தானு வகைத்தே. (௬௩)

அளியாம் பண்செய் வயிரியருக் கற்கணற வுபரிசியு
மளியைக் கண்டு தருக்கள்சிர மசைப்பதறிந்து வியப்பிதென
வெளியாச் சுகங்கள் பூவையொடு விளம்பக்கேட்டு மெய்யன்பர்
களிசேர்ந்திடு நன்னந்தவனங் கண்டுமகிழ்ந்தார் கற்றோரோ. (௬௪)

குயில்கண் மணந்து கோங்கலர்கள் குடைந்தூடியதா தாஞ்சுண்ணம்
வெயிலைமறைத்து மண்ணுலகைமேலா முலகதா விளங்குங்
கயிலை யுறையுந் தேவர்களுங் காதலாகிக் காவெய்தி
யயர்வ தகற்றுவா ரென்னி லறையத் தகுதியா வதுவே. (௬௫)

மலர்களரும்புங் காவமைத் தவசிய திலகத னதத்தன்
புலரியெழுந்து விருதீர்த்தப் பொய்கைபடிந்து பூவாய்ந்து
நலமதுறவே சங்கரர்க்கு நல்கியடியார் பூசனையு
மிலகுமறையோர் பூசனையு மியற்றி யாறுகாலத்தும். (௬௬)

பரமஞானச் சுடரொளியாப் படருஞ் சுயம்பைப் பணிந்துபெருந்
தருணத் துதவியாக் கூற்றைத்தடுக்கும் பஞ்சாட் சரமோர்ந்து
மிருமை துறந்து நிராசையதா விருத்திப்புலனை வென்றுநித
மொருமை மனதாப் பரமபதமுறவே வேட்கையுற் றிருந்தான். (௬௭)

முத்திவிரும்பிப் புலனேய முயலும்வசி யன்கனவதனி
லத்தர்விடை மீதெழுந் தருளியன்பதாகச் சிவநிசியிற்
பத்தர்பரிவாப் பூசைபுரி பாங்கர் நாலாமியா மத்திற்
சித்தமு வந்து கயிலையினந் திருவோலக்கங் காண்குவையால். (௬௮)

என்றுபரமசிவ பெருமா னிசைக்கப்பழைய வினைப்பகையை
வென்றவசியசிகா மணிதான் விழித்துக் கனவின்பொருளாய்ந்து
நின்றகடிய சிறைச்சாலை நீங்க விசைபெற் றவன்போல
நன்று நன்றதருள் பெற்றேனு யேனெனவே நவிலுவனால். (௬௯)

தசையோடென்பு பொலிந்தமலச் சகதியான புழுக்கும்பி
யிசையுந் தோற் கூடாஞ் சிறையுளிட ருற்றழுங்கும் புலநாயின்
வசைகளொழி யவருட் பார்வைவைத்துக் கயிலைதனை யளித்தோன்
வசமதானே னெனவின்பம் வளரப்புளக மருவினனால். (௭௰)

புளகம்பூப்பத் திருமேனி பூரித்தித யங்கனிந் துகனிந்
திளகக்கண்ணீ ராருக விருந்துமெழுந்து மதிவேணிக்
குளகனருளை விழுந்திறைஞ்சிக் கூத்ததாடிப் பரவசமேற்
கொளவே புலரிக் காலமதிற் கோவிலெதிரோ குறுகினனால். (௭௰௧)

கனவிலரனார் வெளியாகிக் காட்சிகொடுத்துக் கழறியதை
யினமா மடியா ரியாவர்க்கு மியம்பி யியம்பி மகிழ்வுறுங்காற்
றின்மா மாகச் சிவநிசி நாட் சேரவிருந்த தனமெல்லாங்
கனமாமெனவே வீசியதோர் காரணத்தாற் பெயரிசைந்தான். (௭௰௨)

உள்ளபசும்பொன்னனைத் தினையுமும்பர் நாதனடியவர்க்குந்
தெள்ளித் தெளிந்த மறையவர்க்குஞ் சிந்தைமகிழ வேயுதவிப்
புள்ளருத விருதீர்த்தம் புகுந்து படிந்துநீ றணியா
வுள்ளமதனிற் சிவத்தியான முற்றே பஞ்சாட்சரஞ் செபித்து. (௭௰௩)

கங்காதரனார் சன்னதிமுன் கமலாசனத்தில் வடமுகமாச்
சங்கற்பத்தோடே விகற்பஞ்சாரா நிருவிகற்பமதா
வங்கமசையாதிருந் திடுங்காலரனார் நிசியிற் சாமமது
பங்கமறவே நான்கினிலே பளிதச் சுடரோந்திடு மளவில். (எச)

உதையவருக் கனெனத் தேவரூரும்விமானம் பலர்காண
நிதிதத்தப்பேர்ப் புண்ணியன்மு னிற்க வவனு நின்மலமாய்ப்
புதியவொளியா மாக்கையொடு புகுந்து கயிலையெனும் பதந்தன்
பதியாக்கொண்டு சந்ததமும் பரமனடிக் கீழ்ப்பதிந்தன்னால். (எரு)

தநதத்தன்பேறுபெற்றசருக்கம்

---

முற்றிற்று.

# பாதகந்தீர்த்தசருக்கம்.

சங்கரற்குறு மன்பதாற் றனதத்த வசியத்
துங்க மாதவன் றொடக்கறக் கயிலைசேர் சூழ்ச்சி
யிங்குணாத்தனப் பூழியனமைச்சன்சேய்க் கிசைந்த
பங்கமாகிய பாதக மகன்றது பகர்வாம். (௧)

சேரமண்டல மன்னவ னமைச்சரிற் சிறந்த
வார மார்பனோ ரந்தண னருமக வதற்குப்
பேரழைத்தனன் பதுமலோ சனனெனப் பிறர்தாங்
காரணப்பெய ரொன்பரச் சிறுவன்றன் கவினால். (௨)

மதிக்கொ ழுந்துபோல் வளர்வுறு மதிவலான் சிறுவன்
விதிக்கும் வேதமோ டங்கமு மரியவா கமங்க
ணிதிக்கும் வித்ததா மனுமுறை நீதிநூன் முதலா
வுதிக்குஞ் சூரிய னிவனென வுணர்ந்தறி வுணர்வான். (௩)

பரதநாடக காவியம் படித்தலங் கார
விரதமாதியு மிக்கவ னாய்நுதற் கண்சேர்
வரத னொதிர் சென்றிடா மதனிவ னென்னல்
சரத மென்றிட வனப்பொடு விளங்கினன் றக்கோன். (௪)

கருப்பு வில்லுட னலர்க்கணை யேந்திடிற் காமன்
விருப்ப மேவியே பெண்மையை விழைவுறு மெனிலப்
பொருப்பெ னப்பணைத் தெழிலுறு தோளினான் பொற்பை
யருப்பு மென்முலை மாதர்கண் டாற்றுவர் கொல்லோ. (௫)

அழகிற் கல்வியிற் கேள்வியி லாதியா மனுநூற்
பழகப் பற்றலர் பற்றினர் பிறரெனப் பாரா
வொழுக லாகிய வோரமற் றொருத்திடு முணர்விற்
பிழையி லாவிவன் பெருமைகேட் டரசர்த மரசன். (௬)

தந்தை யாகுந மந்திரி தந்திர மான
புந்தி தன்னிலு மவன்மகன் போதவும் பொலித
லெந்தனுக்கழ கெனமகிழ்ந் தரசர்கோன் வரிசை
தந்து மெச்சிடுங் காலையி லோர்விடன் சார்ந்து. (௭)

பாலி னற்குணங் கெடுத்துத்தன் பருங்கொலைக் குணத்தை
மேவி டக்கலந் திடுங்கொடு விடமென மிக்க
சீலமந்திரி மகன்குணஞ் சிதைத்திடச் சேருங்
கால னென்னவே நட்டனன் காமுகத் திலகன். (௮)

காமு கன்றனை நட்டதாற் கடுஞ்சுழற் காலாற்
பூமரத்திய லழிவது போலவே புந்தி
நேமமற்றுநல் லறிவுறுப் புன்மையே நேரக்
காம னாகமங் சற்றனன் கலைகளை மறந்தே. (௯)

தீயின் சேர்க்கையா லறநெயுந் தீந்திடுஞ் செயல்போற்
றீயினத்தினா லிவனுமே தீத்தொழிற் சிறந்தே
யாயு நல்லினந் துறந்தயன் மாதனை யணைவா
னேய முற்றதற் கேற்றதோர் யூகங்க ணினைந்தான். (௰)

பொன்னு மாமணிப் பணிகளு மீய்ந்துமே புணர்ந்து
மன்ன மாதரை மருவிடச் செய்விக்கு மவரை
நன்ன யத்தொடு நட்புறச் செய்துநால் வருணக்
கன்னி மாதரைக் கற்பழி வலிமையாற் கலந்து (௰௧)

ஏதிலார்மட வார்களை யிச்சையாய்ப் புணர்ந்து
தீதுறுஞ்செயல் செய்துநற் கவினிலா விருத்த
மாத ராரையும் வலிகொடு மருவியே மகிழ்ந்து
மேத முற்றன னிதிற்பல பெண்கொலை யீய. (௰௨)

கருவ ழித்திடும் பாவமுங் கணக்கிலா தியற்றி
வெருவி டாவகை வெவ்வினை புரிவதா லமைச்சன்
உருகி மாய்ந்தன னவன்மனைக் குரியவ டயின்
மருவி மாய்ந்திட மகிழ்ந்தனன் மந்திரி மகனும். (௰௩)

பாரி கழ்ந்திடப் பழிபுரி பதுமலோ சனப்பேர்ச்
சீரிழந்தவன் மனைவியுந் தாயகஞ் சேர
வாரிழிந்திட விம்மிய முலைமட வார்க்குச்
சேர வேபொரு ளீவதிற் றிருக்கிலா ஞனன். (௰௪)

வலியி னுல்வெகு கற்புடை மாதரை வலிப்ப
நலியு மற்றவ ரிணங்கிடா துயிர்விட நாடி
மெலியு மாந்தர்கண் முறையிட வேந்தனு மந்தக்
கலிய னைக்கடிந் திடுமெனக் கட்டளை புரிந்தான். (௰௫)

வேந்தி னுணையிற் கஞ்சியே வெறொரு நகரிற்
போந்து வேசையர் புணர்முலை ஞெமுங் குறப்புல்லிச்
சாந்து மான்மதக்குளம் பணிந்தலர் முடித ரித்துக்
காந்து மாமணி வடமவர்க் கீந்துளங் களித்தான். (௰௬)

பொருளு ளானிவ னென்பதைப் பூவையர் கருதி
மருட ருங்கொடு மருந்துக ளூட்டியே மயலைப்
பெருகு வித்திவ னிதியெலாம் பெற்றன ரிவனுங்
கரும வெம்பிணிபெற் றனன்க ணக்கிலா வகையே. (௰௭)

தொண்டி யாரடித் தொண்டனு மிவன்றனைத் தூரக்
கண்டபேர்களுங் கடுநர கடைந்திடுங் கருமந்
திண்டிறற் கொடு செய்தவன் றீப்பிணி பலவும்
மண்டி மீறிட வெந்துய ருழந்துமே மாழ்கும். (௰௮)

மேக சூலையுமிரணம தொடுதொழு நோயு
மாக மானதை வருத்திடுங் குன்மமுமழன்று
தாகமேற்றிடுங் கொடுமையாஞ் சயமுதற் பிணிக
ளேகமாகவி னலிந்திட விளைத்தன னேங்கி. (௰௯)

ஏங்கிக் கைப்பொரு ளற்றமை யறிந்தபின் னிணையாங்
கோங்க ரும்பெனக் கொங்கையுங் கொடுவினைப் பொய்யுந்
தாங்கு வேசையர் தள்ளின ரருவருத் தவனுஞ்
சோங்கு டைந்திடச் சுழிபடு வோனெனச் சுழன்றான். (௨௰)

சுழன்று மாசுண வாய்ப்படு தேரைபோற் றுன்பத்
தழுந்தித் தீதிலிரோவெனக் கேட்பவரற்று
விழுந்துமே புரண்டங் கொருபொது மடமேவி
யழுங்கு வான்மறை யோரகத்தன்ன மேற்றுண்பான். (௨௰௧)

மாதராசையால் மாசுறுஞ் சிறுமைகண் மருவ
ஏதமானர செய்தவனொன்று முன்னோர்க
ளோது நூற்கிவன் சான்றெனப் பலர்மொழிந்தொதுங்கப்
பாதகம் புரிந்தவன் றுயரெய்தியே பதைப்பான். (உஉ)

கற்றகல்வியுங் கேள்வியுங் குல்முறைக் கடனும்
பெற்றசெல்வமும் பெண்மயலா லறப்பிணிக
ளுற்றபாதகப் புலையனைக் காத்திட வுளத்திற்
சற்றிரங்குமோவிட மமுதெனக் கொளுந்தானு. (உங)

வீணதாகவே விழலெனும் புற்குமுத்துலையாற்
பேணியே புனற்பாய்ச்சிய பேதையை நிகர்த்து
நாணமின்றியே புலைத்தொழிற் செய்தநானின்பங்
காணவே யருள்புரியுமோ கருணையங்கடலே. (உச)

என்று வெய்துயிர்த் திருகணீ ரொழுகிட விடரி
னின்று மாழ்கிடு மேல்வையங் கொருநிறை மறையோன்
குன்றிலேயுதித் தெழுஞ்சுடர்க் கொதுங்கியே குறுகிச்
சென்று மப்பொது வடைந்தனன் சிவனிவனெனவே. (உரு)

பூதி சாதனத்துடனுருத்தி ராக்கமும் பூண்ட
வேதவித்தினைக்காண்டலு மெல்லெனவெழுந்து
பாதமே தொழு தெப்பதி யுள்ள நீர்பரியா
வேதுகாரண மென்கண்மு னெய்திய தென்றான். (உசு)

பொன்னி நாட்டினிற் குடந்தையிற் பொருந்தியே தினங்
ளன்னயத்தொடு கழிப்பவ னதிபலவாடி
யின்னநற்பதி யெய்தின னிழலி லின்புறவே
மன்னி யிப்பொது மடமரு கடைந்தனன் மறையோய். (உஎ)

நீயொ ரேழையாய்ப் பிணிகளா லுழன்றுமே நெஞ்சந்
தீயநோவுறு முன்வரலாறுக டெரிய
நேயமாகினே னென்றிடப் பதுமலோசனன்றான்
றூய சுன்மர புதித்ததுந் தொடர்ந்ததுஞ் சொலுமால் (உஅ)

நிலத்தி னற்குண நீர்திரிந்தா லெனவென்றன்
குலத்தி னற்குணஞ் சிற்றினஞ் சேரலாற் குறைந்தே
யலத்தகத்தடி மாதர்மேல் வேட்கையா வனந்தம்
வலுத்தபாதகஞ் செய்தன னிருமையுமறு த்தே. (உகூ)

புண்ணியம்பல வியற்றுத லினுமயற் பொருவேற்
கண்ணிமென்முலை காதலியா திருந்திடலே
யெண்ணிலாவற மென்பதை யறிந்திருந் தெழிலார்
பெண்ணி னின்பமே பெரிதெனப் பேதையேன் சுழன்றேன். (௩0)

வேறு.

விழியால் விரக சன்னதந்தான் விளைக்கு மடவார் சிற்றின்பம்
பழியும்பகையு மிகக்கொடிய பாவந்தருவதன்றிப்பொன்
னழியச்செய்து பல பிணிகளடையச் செய்து மரபதனை
யிழியச்செய்யு மெனுநூலுக் கியானே சான்றாயிருந்தனனே. (௩க)

மலமுஞ் சலமுங் கிருமிகளு மலியுந் தோற் கூட்டினை யழகா
விலகாநின்ற பெண்ணென்றே யிச்சைமீறிப்பொருளீய்ந்து
பல காலமுமே குற்றேவற் பண்ணிப் பணிந்த பரிசெல்லாஞ்
சொலவோ ரூழி சென்றாலுஞ் சுருங்குங்கொல்லோ வென்றவனும். (௩உ)

தன்றலியன்ற கொடும்பாவத் தன்மையெல்லாங் கரவாமற்
சொன்னன் சொல்லி யிக்கருமத் தொடக்காற் றொடர்ந்த பிணிகடமைப்
பன்னாட்பொறுக்க வெவராலாம் படியிலிதனைத் துடைப்பதற்கு
நின்றலறிந்த சூழ்ச்சியுண்டே னிகழ்த்திக்காப்பா யெனமறையோன் (௩௩)

ஏதிலார்க ணேய்தன்னே யென்று கருதியுள மிரங்கான்
றீதிலாத வுணர்வினனேய்ச் சிவனார்க்காளா.ந் திரமுண்டோ
வாதலாலிவ் வாடவனை யடரும் பிணிக ளகன்றோட
வேதுவிது தானென நினைந்தே யியம்பக் கேளென் றிசைத்திடுவான். (௩௪)

ஒளிரும் பரிதி பூசனைக் கேயுவந்தே வரந் தந்திடுஞ் சுயம்பும்
அளறதகற்று முனிக்கணங்களரியதவஞ் செய்திடுத லமுந்
தளிரி னடிசான விமாசுதவிரப் படியுந் தடமு மொன்று
யுளதுபொன்னி நாடதனி லும்பர்பரவும் பரிதிவனம். (௩௫)

அந்தத்தலத்தில் வாசமதா யணுகியிரு தீர்த்தமுமாடிப்
பந்தமகற்றும் பரசிவ னைப்பணியப் பெற்று யாகிலுனக்
கிந்தப் பிணியும் பாதகமு மெல்லா மகலுமெனக் கூற
எந்தன் வினையும் பிணிக்குழுவு மேகுங்கொல்லோ வெனக்குரவன். (௩௬)

இதுவோ வவிது வேதமதை யினிய வாகமங்களையும்
மதிசூடிய வெஞ்சங்கரனை மதியாதிகழும் பாதகமு
முதய பானுவரக் கண்டேயோடு மிருளையொத் திடுமப்
பதியைக்காணி லென்றிடலும் பதறியெழுந்து பணிந்துநின்றான். (௩௮)

உள்ளந் தனிலே பரிதீச ருபய பாதந்தனையுன்னி
யள்ளித் திருநீ றளித்திடவு மவனுமன்பா யதுவாங்கிக்
கொள்ளு மளவிற் பலபிணியுங் குறையக்காண வவன்மகிழ்வாம்
வெள்ளந் திளைத்து நடையுற்று வியந்து பணிந்து விளம்புவனால். (௩௯)

உய்யு நெறிக ளில்லாம லுழலுமென்கண் ணெதிராக
அய்யநீயே சிவனுருவ மாகத் தோன்றி நீறருளக்
கையுங் காலுமுட நீங்கக் கண்டே னெனையப்பதிசேர்த்துத்
துய்யனாக்கி லுன்னடிமைத் தொண்டுபுரிவே னென்னலுமே. (௪௰)

அன்பதுடையா ரென்பு முரித்தாகும் பிறருக் கெனலறிந்த
நம்பாடியா ரிரங்காம னடப்பர் கொல்லோ நலிவுற்றோ
னின்பமுற வேயவன் றந்தை யென்ன வருத்தமறக் கொடுபோய்
முன்புபுகன்ற பரிதீசர் முன்றிலருகே விட்டங்கன். (௪௧)

இருதீர்த்தத்து நீராட்டி யிறைவர் கோயிற் கழைத்தேகிப்
பொருவி றந்தை யிருநிதியைப் புதல்வன்றனக்குக் காட்டுதல்போற்
குருவினுருவாஞ் சிவயோகி குமரன்றனக்குச் சுயம்பதனைத்
தெரியக் காட்டி நியமவிதி செப்பிச் சிவனுமமு மருளி. (௪௨)

தொண்டுபுரிநீ யரனருளாற் சுகமதுறு வாயென வவரும்
பண்டைப் பதியை யடைந்திடவும் பதுமலோ சனப்பெயரோன்
வண்டுமது வுணிருபொய்கை மருவிப் புலரிநீ ராடி
யண்டர்பெருமா னடிபரவியன்பாய்க் கோயில்வலம் வந்தே. (௪௩)

ஆதிநாதர்க் கபிடேகமான புனலு மம்பிகைதன்
பாதப்புனலு முப்போதும் பருகிப் பருதிவா ரத்திற்
கோதற் றிடவே யிரவூணுங் குளிர்மா மதிநாட் பகலூணு
நீதியாக வெறுத்திந்த நியமம் பிடித்து நிதநிதமும் (௪௩)

அந்தணாளரகங் கடமிலைய மேற்றுப் பசியாற்றி
யிந்து நிலவுஞ் செஞ்சடில ரிருதா ளிதயமல ரிருத்திப்
பந்தமகற்றுஞ் சிவநாமம் பரிவாய்ச் செபித்தன் மறவாது
யெந்தையடிக் கன்புற்றவனு மிருக்குங் காலத்தோ ராண்டில். (௪௫)

புடமிட் டெடுத்த பொன்போலும் புனிதப் பரிச வேதையினாற்
சுடருற் றோங்கு மயம்போலுந் தொடர்ந்து விழுங்குங் கருநாகம்
விடம்விட் டொளிரு மதிபோலு விமலனருளால் வினையகல
வடலுற் றிலகும் வேலவன்போ லழகு வாய்ந்தா னுடவனும். (௪௬)

கருமப்பிணிக ளகன்றிடத்தன் காயத்தொளியைக் கண்ணுற்றே
யுரிய வறியோர்க் கினியநலமுற்ற தென்ன மகிழ்வோங்கி
யொருமை மனதாய்ச் சங்கரர்மு னுற்றுப் பணிந்து மிருகண்ணீர்
பெருகப் புளகித்தே தேம்பிப் பிதற்றித் துதிப்பான் பிறப்பற்றான். (௪௭)

ஆமா வென்னவுட லநிதி யனைத்துங் கவரு மரிவையருக்
காமா மிவனே யடிமையென வலைந்துசுழ லாவவமாகிப்
போமாறுழன்ற புலைநாயைப் புரந்தா யினியுன் பொன்னடிக்கா
ளாமா றருளாய் பரிதிவனத் தரனே யரனே யளியோனே. (௪௮)

வில்விற் றொடுத்த கடுங்கணையும் வேலும் வாளும் வெவ்விடமுங்
கொல்லுங் கூற்றுமுக நாணக்கொலை கள்பயிலுங் கோலவிழி
மெல்லிநல்லார்க் காளாகி வீணேமெலிந்த வினையேனுக்
கல்லலோடு பிணிதவிர்த்த வரனே யடியார்க் காரமுதே. (௪௯)

கும்பமுடைத்து மதவானைக் கொம்பையிறுத்து மேருவைக்
கும்பீடாய நாண்பூட்டி யொளிரும் புளகமுலை யார்கைப்
பம்பரத்துக் கிணையாகப் பாரிற் சுழன்றேன் பவமகலக்
கம்பக்களிற்றை யுரித்தோனே காத்தா யிதற்கென் காரணமே. (௫௰)

பொய்யின்கடலா யரும்பிணிகள் பொலியுமக மாவினைவிளையுஞ்
செய்ய சாலமுறு கலமாய்ச் சீரிற்பிரசம் பெய்குடமாய்
வெய்யமனத்துக் கணிகையர்தம் வேட்கை விடமுண் டுழல்வேனைத்
துய்யனாக்கி அடிமைகொளத் துணிந்தாய் கொல்லோ சுயஞ்சுடரோ. (௫௧)

கடைக்கண் வலையை வீசியுளங் கவர்ந்து மிடியா மனைசேர்த்தி
நடிக்கும் பிணியா முலைஞெமுங்க நன்றாய்ப் பிணித்துக்கடு நரகில்
விடுக்குநாகப் படங்காட்டி விடமா மதரமது வருத்திக்
கெடுப்பார்க் குழல்வேற் கரனேயுன் கிருபைக்கடலுங் கிட்டியவே. (௫௨)

பொருளையெல்லாங் கவர்ந்து பிணிபோத வருளிப் புறங்கடையில்
வெருளத்தள்ளி மகிழ்கூரும் வேசைக்காளாங் கொடியேன்றன்
மருளையகற்றி யன்பருடன் மகிழச்செய்த நின்னுடைய
வருளுக் கிணைதானுண்டு கொலோ வரனே யடியா ரிருநிதியே. (௫௩)

என்றுபரவி யன்பருட னினிதாய்க்கூடிப் பரவசமாய்
நின்று நடித்துச் சிவநாம நிகழ்த்திப்பண்க ணெறிபாடி
நன்றுதிகழப் பூழியனார் நாடக்கன விற்சித்த னெனக்
குன்றைவளைத்துப் புரமெரித்த கோமான் றோன்றிக் கூறுமால். (௫௪)

பரிதிவனத்தி னுள்ளுறைவோம் பதிதர்பரி சுத்தமதாக
உரவோ ருளஞ்சித் தறிவோ முனறனமைச் சன்மகன் விடனாய்த்
திரியுந் தொழிலி வீட்டிய வெந்தீமை முதலாம் பாதகங்க
ளரிய பிணிக ளகன்றிடவே யமலமாக்கி யருடந்தேம். (௫௫)

அவனையழைத்து னமைச்சுரிமையாக்கி யரசா ளுதியென்று
சிவனுருரைத்த மொழிகேட்டுத் திடுக்கிட் டெழுந்து பாணர்நிதிக்
குவைதான் பெருக வென்முன்னோர் குறித்த கனவிற் றோன்றியநீ
தவமொன்றறியேன் கனவினிலுந் தந்தாய் பொற்றாளென் றேத்தி. (௫௬)

அங்கம்புளகித் தவசமதாயற்றை யிரவ தகற்றியெழுந்
தங்கோர்தலைவன் வசமாக வணிபொற் றுகில்க ளருநிதியந்
துங்கக் கவிகை சிவிகையொடு துணைவெண் கவரியீய்ந்துமகிழ்
பொங்கவிடுத்தான்றன் னமச்சன் புதல்வன்றனைக் கொண்டெய்தெனவே. ()

சேனைத்தலைவன் விடைகொண்டு சென்று பரிதிவன மணுகி
யீனமகற்றி யொளிர்கின்றோ னிணைத்தாள் பரவி யுனதரச
னுனசேர பூபால னமைச்சர் தலைமையுனக் கீய்ந்து
மானமியற்றினு னீயும் வருவாயெனவு மாசற்றோன். (௫௮)

நானே யரசனெனப் பூவினடிக்கு மெனையாள ரனன்றி
மான வரசருண்டு கொலொவந்தோ வெனவே வாழ்வனைத்து
மீனமெனவே யருவருத்தங் கிருக்குங்காலைப் பரிதீசர்
தானுமுமையும் விடைமீதாய்ச் சார்ந்தாரவன்றன் கனவினிலே. (௫௯)

உந்தன்பாவப் பிணிகளெல்லா மோடத் துறந்தோ நீ சேரன்
சொந்தவமைச்சனுய்ப் போகந்துய்த்துப் பலவாண் டினைக்கழித்து
வந்தெம் பதத்தில் வாசமதா மகிழ்வா யென்னத் திருவருடான்
தந்தே மறைய மறையோனுந்தனிச்சிற் சுகத்திற் சார்ந்தனனல்.

அருளின்கடலா முமைபாகமாக வமலன் றிருவுருவாம்
பொருளைக்காணக் கிடைத்ததெனப் பொங்கிப் புளகமது போர்ப்பத்
தெருளுஞ் சிவயோகியர்போலச் சிறந்தநின் பாலுணுமேனக்
குருளையோ நானமைச்சுரிமை கொள்ளப்பரமே குருமணியே.

வேறு

நீயே குருவாகி நின்மலஞானம் மருளச்
சாயாம லன்னிலையிற் சார்ந்ததிரு வாதவூர்த்
தூயோனே வானமைச்சுச் சூழ்ச்சி செயவேயறியா
நாயேனுக் கவ்வமைச்சு நாட்டியிட ஞாயமென்னே.

காவலர்க்கு மந்திரியாய்க் கனவாழ் வெனுஞ்சேற்றின்
மேவியுழன் றிடுங்கால் வெவ்வினையான் செய்யாமன்
மாவலவணுகி மதுரையினில் வாம்பரிதான்
றாவநடத்துந் தேவே'தற் காப்பதுன் கடனே.

பாசப் பிணிப்பும் படுஞ்சிறையும் விட்டகன்றோ
ராசையறப் பற்றிப்பினச்சிறையிற் சேர்ப்பதுபோ
லீசனே மாயை யிழந்துனது தாள்சேர்ந்த
நேசனையு மவ்மச்சா நியமித்த மாயமென்னே.

காவலனஞ் ஞானங் கழன்று பதம்பெறுக
மேவலர்க ளேற்றும் விறன்ஞான சம்மந்த
நாவலரைக் கூட்டுமருணல் லகுலச் சிறையோ.
தேவர்தேவா நாயேன் றேர்ந்தமச்சு செய்திடவே. (௬௫)

அழகோ டிளமை யருநிதிய மெந்நாளு
மழியா தெனக்கருதி யாணவத்தான் மாதர்மயற்
பழியாமென் றெண்ணுமற் பற்றுமெனை யொன்னலர்கள்
பழியாம லாண்ட பரனே பரம்பொருளே. (௬௬)

தலைபுழுத்த நாயதுபோற் சந்ததமும் வெம்பிணியா
லுலைவுற்றே னைக்கரவா வுன்னடியார் நல்லவையி
விலகியிடச் செய்தாண் டிருமைப் பயனீய்ந்த
தலைவனே யுன்பெருமை சாற்றற் கமைந்திடுமோ. (௬௭)

வேறு

என்னவே பணிந்து போற்றி யிருகணீ ராறதாக
இன்னமு தருந்தினன்போ லீசனர் விடைம ருமற்
பொன்னொடு பணிகைக் கொண்டு பூந்துகி லுடுத்திச் சேர
மன்னவ னிவனே யென்ன வயங்கினன் மறைவ லாளன். (௬௮)

காலத்திற் செய்தநன்றி கடுகள வெனினுமிந்த
ஞாலத்தை விற்குமென்னு நன்மொழி யுணர்ந்துமெந்தச்
சீலநற் றருமக்கேடு செய்யினு முய்வருய்யார்
வாலியநன்றி கொன்றமாக்க ளென்றுளத்தி லெண்ணி. (௬௯)

குடந்தையில் வசிக்கும் யோகக் குரவனை வரவழைத்து
நடந்தடி பரவவெந்தூர் நரபதி யெனவினவ
மடந்தனிற் பிணியுட் பட்டு வருந்தினே னுனதுபோத
இடந்தஹூ லமலனகிச் சீருற்றே னென்று செப்பி. (௭௰)

தந்தைநீ தாயுநீயென் சற்குரு வாதலாலே
யெந்தனை யகன்றிடாம விருமினென் றணியும் பொன்னுஞ்
சுந்தரத் துகிலுநல்கித் துயரற வய்யமிட்ட
வந்தணர்க் கனந்தஞ் செம்பொ னளித்தன னமைச்சன் மைந்தன். (௭௧)

புனிதமா மிரண்டு பொய்கைப் புண்ணிய தீர்த்தமாடிக்
கனிவொடு பிதிர்கட் குள்ள கடனெலாங் கழித்துக் காமன்
முனைகெட வெரித்துக் கண்ட மூர்த்திக்கு மம்பிகைக்குந்
தனமிகு வரிசை செய்து கனகமா மாரிபெய்தே. (௭௨)

குருவுட னமைச்சனன குமரனுஞ் சேனைசூழ
உருபொலன் சிவிகையேறி யூர்வழி கடந்து சேரன்
றிருமலி நகர நண்ணுஞ் செய்திகேட்டரசர் கோமான்
பெருமிதத் துடன்முன்ருேன்றிப் பெட்புறப் பணிந்து சொல்வான். (௭௩)

எந்தன் மந்திரிமுன்செய்த விருந்தவப் பேறதான
மைந்தனே பரிதிநாதர் மகிழ்வுற வனப்புப்பூண்டு
வந்தனை நின்னையொப்பார் வாதவூரடிகளன்றி
யிந்தமா நிலத்திலுண்டோ வென்னவே முகமன் கூறி. (௭௪)

கண்ணுதல் காட்சியுன்றற் கண்டனன் கடியநோன்பு
மெண்ணுற வென்செய்தேனே வெனக்குநீ யமைச்சனனைப்
புண்ணியவானே யென்னை புரந்தர சாளாயென்று
வெண்ணிறக் கவிகையன்றி வேறெலாம் வரிசையீய்ந்தான். (௭௫)

மந்திரித் தலைபூண்டு மன்னவன் மகிழும் வண்ண
மிந்திரச் செல்வந் துயத்தே யினிய நற்பொருள்களெல்லாம்
பந்தமத கற்றுமெங்கள் பரிதீசர்க் காக்கிநாளுஞ்
செந்திரு மார்பனென்னத் திகழ்ந்தன னுலகுவாழ்த்த. (எசு)

ஓங்காரப் பரமகுரு வுத்தரவை மதுரைமுத்துபாத்தியாயன்
தாங்காத ரத்தினொடு தலைமேற்கொண்டுலக மெலாந் தந்தவனை
பாங்காரும் பரிதீசர் திருவருளாற் பரிதி நேமப் புராணம்
ஆங்காத னிறைவேறப் பரிசீலனம் புரிந்தீண்டச் சிட்டானே. (எஎ)

பாதகந்தீர்த்த சருக்கம்.

## முற்றிற்று.

ஆக சருக்கம் கூ-க்கு கூடியசெய்யுள் ருாசுடுகூ.

---

முற்றிற்று.